# ஓ! மாம்பழமே!



கல்கி

மங்கள நூலகம்

சென்னை - 34

# ஓ! மாம்பழமே!

'கல்கி'

மங்கள நூலகம்
நுங்கம்பாக்கம் :: சென்னை-34

முதற் பதிப்பு:
செப்டெம்பர், 1968
இரண்டாம் பதிப்பு:
ஏப்ரல், 1970

விலை ரூ. 2·25

©
கி. ராஜேந்திரன்
சென்னை

அச்சிட்டோர்:
பாலா பிரிண்டர்ஸ்
சென்னை-34

# பதிப்புரை

தமிழுக்குத் தனிப் பெருமை அளித்தவர்களில் அமரர் 'கல்கி' ஒருவர். தமிழ் எழுதுவதும் படிப்பதும் இழுக்காறு என்ற எண்ணமும், தமிழில் நாவல்களும், கரடுமுரடான பாக்களையும் தவிர வேறு எதுவும் எழுத இயலாது என்ற கொள்கையும் நிலவி வந்த காலத்தில், தமிழில் எதனையும் திறம்படச் சுவைகுன்றமல், மனத்தில் பதியும்படி எழுதலாம் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர் கல்கி அவர்களே. கட்டுரை, சிறுகதை, பொருளாதாரம், அரசியல், விமரிசனம், பயணம் அனைத்தையும் சுவை ததும்ப, நெஞ்சத்தை ஈர்க்கும் வகையில் தமிழில்- அதுவும், எளிய அன்றடத் தமிழில் வடித்தவர் அமரர் கல்கியே.

சரித்திர நவீனத்தில் அவர் புரிந்துள்ள சாதனை, மொழி உள்ளளவும் நிலையாக நிற்கும். அதில் அவர் கைக்கொண்ட யுக்திகளும், திருப்பங்களும், நடையும், குணச்சித்திரப் படைப்புக்களும் பட்டொளி வீசி, எழில் குன்றமல் இளமையுடன் எந்நாளும் மிளிரும் தொடர்கதையைப் பல வருடக்கணக்கில் எழுதி, அதனை வாரா வாரம் படிக்கத் துடிக்கும் ரசிகர்களை உண்டாக்கிய பெருமை கல்கி ஒருவரையே சாரும்.

தேமதுரத் தமிழில் தோன்றி, எழுதித் திளைத்துத் தமக்கு நிகர் தாமே என்று விளங்கி அமரரான 'கல்கி'யின் படைப்புக்கள் அனைத்தையும் புத்தக உருவில் வெளியிட அன்னரின் மைந்தர் திரு. கி இராஜேந்திரன் எங்கள் ஒருவருக்கே உரிமையை அளித்திருக்கிறர்; இதுபற்றி நாங்கள் பெருமை அடைகிறேம்.

அமரர் 'கல்கி' அவர்கள் ஆசிரியராகப் பணியாற்றிய **ஆனந்த விகடன்** அதிபர் திரு. எஸ்.எஸ். வாஸன் அவர்களுக்கும் எங்கள் நன்றி உரித்தாகும்.

தமிழ் அன்பர்கள் அனைவரும் எங்களுடைய இந்த முயற்சியை எப்பொழுதும் ஆதரித்து, இனி வழங்கப் போகும் விதவிதமான எம் வெளியீடுகளுக்கு நல்லாதரவு விழையும்,

**மங்கள நூலகம்**

வெளியீட்டாளர்கள்

9 - AUG 1970
MADRAS

# ஓ! மாம்பழமே!

**லண்டன், மே 4**

**"நேற்று மாலை ஸவுதாம்டன் துறைமுகம் வந்துசேர்ந்த 'விக்டோரியா' என்னும் கப்பலில் இந்தியா தேசத்து மாம்பழங்கள் வந்து இறங்கின."**

*—அயல்நாட்டுத் தந்தி*

*மேற்படி செய்தி இந்திய தினசரிப் பத்திரிகைகளில் சின்ன எழுத்துத் தலைப்புடன் மூலையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால், அதனுடைய பின் விளைவுகள் என்ன ஆகப் போகின்றன என்பதுமட்டும் தெரிந்திருந்தால் உப பத்திராதிபர்கள் அச் செய்தியை அவ்வளவு அலட்சியம் செய்திருக்கமாட்டார்கள். அந்தப் பின் விளைவுகள் என்னவென்பதைக் கேளுங்கள் :*

*மறுநாள் சாயங்காலம் லண்டனிலுள்ள இந்திய மந்திரி காரியாலயத்தில் இந்திய மந்திரிக்கும் அவருடைய சகாக்களுக்கும் இந்தியாவின் ஹைகமிஷனரால் ஒரு விருந்து நடத்தப்பெற்றது. முதன் மந்திரியும், மிஸ்டர் பால்ட்வினும் உள்படப் பிரமுகர்கள் அநேகர் விஜயம் செய்திருந்தார்கள்.*

*அடுத்த நாள் காலையில் வெளியான லார்ட் ராதர்மியரின் 'டெயிலி மெயில்' பத்திரிகையில் கொட்டை எழுத்தில் கட்டம் கட்டிப் பின்வரும் கேள்வி பிரசுரிக்கப்பட்டிருந்தது: "நேற்று இரவு இந்திய மந்திரி காரியாலயத்தில் ஒரு விருந்து நடந்தது. அந்த விருந்தைப்பற்றிய ஒரு வதந்தி பிரிட்டிஷ் பொதுமக்களின் மனத்தைக் கலக்கி வருகிறது. அந்த வதந்தியைப்பற்றிய உண்மை என்ன? மிஸ்டர் பால்ட்வின் பதில் சொல்வாரா?"*

அன்று சாயங்காலம் வெளியான லார்ட் பீவர்புருக்கின் 'ஈவினிங் ஸ்டாண்டர்டு' பத்திரிகையில், 'மேற்படி விருந்தில் ஒரு புதிய வகைப் பழம் பரிமாறப்பட்டதென்றும், அந்தப் பழம் இந்தியாவிலிருந்து வந்ததென்றும் நம்புவதற்குப் போதிய ஆதாரங்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. கூடிய சீக்கிரம் இதைப்பற்றிய முழு உண்மையையும் வெளிப்படுத்தியே தீர்வோம்' என்று பிரசுரிக்கப்பட்டது.

மறுநாள் காலையில் 'டெய்லி மெயில்' பத்திரிகையில் காணப்பட்ட விவரமாவது: "உண்மை வெளியாகிவிட்டது. இந்திய மந்திரி காரியாலயத்தில் நடந்த விருந்தின்போது பரிமாறப்பட்ட புதிய பழம் இந்தியாவிலிருந்து வந்த மாம் பழம் என்று திட்டமாகத் தெரிந்து போயிற்று. ஸர் ஸாமுவேல் ஹோர் இதற்கு என்ன பதில் சொல்லுகிறார்? அவர் உண்மையை மறுக்க மாட்டார் என்று நம்புகிறோம். ஏனெனில் மறுக்க முடியாத சாட்சியம் நம் வசம் இருக்கிறது. பின்னர், வேறு என்ன சமாதானம் சொல்லப்போகிறார் என்று பார்ப்போம்.

மறுநாள் 'டெய்லி எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில், மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்களின் விசேஷக் கட்டுரை ஒன்றுடன் வெளிவந்தது. (அந்தக் கட்டுரைக்கு அவருக்கு ஆயிரம் பவுன் சன்மானம் அளிக்கப் பெற்றதென்று எழுத்தாளர் கூட்டங்களில் வதந்தி உலாவிற்று.)

"பிரிட்டிஷ் ராஜ்யத்தின் பெருமைக்கு அழியாத அவமானம் உண்டாகிவிட்டது. கேவலம், இந்தியாவிலிருந்து வந்த மாம்பழங்களைப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மந்திரிகள் சாப்பிடும்படியான நிலைமைக்கு நாம் தாழ்ந்துவிட்டோம். என்ன அவமானம்! இந்தியர்களுக்கு நம்மிடமுள்ள மதிப்பில் அரைப் பங்கு இச் சம்பவத்தினால் போயிருக்குமென்பது திண்ணம். முதுகெலும்பில்லாத இந்த மந்திரிசபையை இன்னும் எத்தனை நாளைக்குப் பிரிட்டிஷ் பொது ஜனங்கள் அதிகாரத்தில் வைத்திருக்கப் போகிறார்கள்?" என்பது சர்ச்சில் கட்டுரையின் சாராம்சம்.

'மார்னிங் போஸ்ட்' பத்திரிகையில் அடுத்த நாள் வெளியான செய்தி எல்லாரையும் தூக்கிவாரிப் போட்டு

விட்டது. மேற்படி விருந்தில் மாம்பழம் என்று வைக்கப் பட்ட ஒவ்வொன்றும் உண்மையில் ஒரு வெடிகுண்டு என்ப தாகவும், விருந்தினரில் ஒருவர் ஒரு மாம்பழத்தை விழுங்கி அவருடைய வயிற்றில் அது வெடித்த பின்னர் உண்மை தெரிந்து மற்றவர்கள் தப்பித்துக்கொண்டார்களென்றும், விஷயம் இப்போது ஸ்காட்லண்டு யார்டு துப்பறியும் நிபுணர்கள் கையில் இருக்கிறதென்றும் அந்த விவரம் சொல்லிற்று. ''இதெல்லாம் சுத்தக் கட்டுக்கதை'' என்பதாக ஓர் உத்தியோகமுறை அறிக்கை மறுதளித்தது.

* * * *

இதற்கிடையில், லார்ட் ராதர்மியர் தமது சொந்தக் கையெழுத்துடன் 'டெயிலி மெயில்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினர். அதன் சுருக்கம் ராய்ட்டரால் உலக மெல்லாம் அறிவிக்கப்பட்டது.

"பிரிட்டாஷார் இந்தியா தேசத்தை ஏன் இழந்துவிடக் கூடாது என்பதற்கு ஒரு புதிய காரணம் ஏற்பட்டிருக்கிறது. அதுதான் இந்திய மாம்பழம். நேற்று மாலைச் சாப்பாட்டின் போது அந்தப் பழத்தில் ஒன்று நான் சாப்பிட்டுப் பார்த் தேன். அதைப் போன்ற ருசியை என் வாழ்க்கையில் இது வரையில் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இவ்வளவு ருசி யுள்ள பழத்தைக் கொடுக்கும் தேசத்தையோ சில முட்டாள் மந்திரிகளின் முழு மூடத்தனத்தினுல் நாம் இழந்துவிடுவது? பிரிட்டிஷ் பொதுமக்களே! எழுந் திருங்கள், வெள்ளைக் காகிதத்தைக் கிழித்தெறியுங்கள்!''

மேற்படி கட்டுரையின் கருத்தைப் பலமாகத் தாக்கி 'டெயிலி ஹெறால்டு' தலையங்கம் எழுதிற்று. இந்திய மாம்பழம் இங்கிலாந்துக்கு வரத் தொடங்கினுல், பிரிட்டிஷ் ஆப்பிள்களுக்குக் கிராக்கி குறைந்துவிடுமென்றும், இதனுல் பிரிட்டிஷ் குடியானவர்கள் நஷ்டமடைவார்களென்றும், இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்கும் நாளை ஏன் துரிதப் படுத்த வேண்டுமென்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும் என்றும் அது அபிப்பிராயம் தெரிவித்தது.

லான்ஸ்பரி தாத்தா 'ஹிந்து' பத்திரிகையின் நிருபர் மூலமாக இந்தியாவுக்குப் பின்வரும் தந்தியை அனுப்பினர்.

"இந்த மாம்பழப் பிரச்னையைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். எங்கள் தொழிற்கட்சி அதிகாரத்துக்கு வந்ததும் திருப்திகரமாகத் தீர்த்து வைத்து விடுகிறோம். அது வரையில் ஒற்றுமையைக் கைவிடாதிருங்கள்."

லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையில் மாம்பழத்தில் என்னென்ன வகை விடமின்கள் உண்டு என்பதைப்பற்றியும் அது உடம்புக்கு நல்லதா இல்லையா என்பதைப்பற்றியும் விவாதம் நடந்துவந்தது. டாக்டர்களும், விஞ்ஞானப் புலவர்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்தனர்.

'பஞ்ச்' பத்திரிகையில், மிஸ்டர் ஜான் புல் கையில் ஒரு மாம்பழத்தை வைத்துக்கொண்டு, "தின்பதா; வேண்டாமா?" என்று யோசிப்பதுபோல் ஒரு கார்ட்டூன் படம் வெ[illegible]யாற்று. அதைப் பார்த்துவிட்டு, 60,000 வாசகர்கள் [illegible]ரித்தார்கள். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்றதற்கு, "என்னவோ சிரித்தோம்" என்று பதில் சொன்னார்கள்.

இந்த விவாதத்தைப்பற்றி ஆசிரியர் பெர்னட் ஷா அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளச் சில பத்திரிகை நிருபர்கள் சென்றார்கள். அவர் தம் அபிப்பிராயத்தை இரண்டே வார்த்தையில் தெரிவித்துவிட்டார். அதாவது, 'செத்துப்போங்கள்!' என்று சொன்னார்.

* * * *

இங்கிலாந்தின் நிலைமை இவ்வாறிருக்க, இனி இந்தியாவில் இது சம்மந்தமாக நிகழ்ந்த சம்பவங்களைச் சற்றுக் கவனிப்போம்.

இந்தியாவிலுள்ள தினசரிப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும், இங்கிலாந்தில் நடந்த மேற்படி விவாவதத்தைப் பற்றிய சகல விவரங்களும் தந்தியில் வந்து பிரசுரமாயின. ஆனால் அவைகளுக்கு இந்த விவாதத்தைப்பற்றி அபிப்பிராயம் எழுதுவதில் மிகக தொல்லை ஏற்பட்டது. முதலில் மிதவாதப் பத்திரிகைகள் சர்ச்சிலின் கூற்றைப் பலமாகக் கண்டித்துப் பிரிட்டிஷ் மந்திரிகள் இந்திய மாம்பழம் சாப்பிட்டது அவர்களுடைய சமரச நோக்கத்தைக் காட்டுகிற

தென்று பாராட்டி எழுதின. பின்னுல், ராதர்மியர் பிரபுவின் கட்டுரை வெளியானபோது தேசீயப் பத்திரிகைகளுக்கு ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. அவை, இனிமேல் ஒரு மாம்பழங் கூட இந்தியாவை விட்டுப் போகாமல் தீவிர பிரசாரம் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தின.

அந்த மாதம் வெளியான 'கலைமகள்' பத்திரிகையில் 'மாம்பழக் கவிராய'ரைப்பற்றி ஒரு கட்டுரையும், 'கலா நிலயம்' பத்திரிகையில் "முக்கனியில் மாங்கனி சேர்ந்ததா?" என்பதைப்பற்றி ஓர் ஆராய்ச்சியும் வெளியாயின.

ஸ்ரீமதி 'காசினி' அம்மாள் மாதர் பக்கத்தில் மாங்காய் ஊறுகாய்களைப்பற்றி நாக்கில் ஜலம் ஊறும்படி எழுதியிருந்தார்.

"மாம்பழங்களுக்கே இந்தப் பாடுபடுகிருர்களே! வடுமாங்காயின் ருசியை பார்த்துவிட்டால் என்னதான் சொல்வார்களோ? என்று 'விகடன்' ஹாஸ்யரசத்துடன் எழுதினுன்.

பிரிட்டிஷ் மக்களை இந்திய மாம்பழங்கள் அதிகமாகச் சாப்பிடும்படி தூண்டி இந்தியாவினிடம் சிநேகப்பான்மையை வளர்ப்பதற்காக ஒரு தூதுக் கூட்டத்தை அனுப்ப வேண்டுமென்று மிதவாதப் பிரமுகர்கள் கூறினுர்கள்.

திடீரென்று இந்தப் பிரச்னையில் வகுப்புவாத வாசனை வீசலாயிற்று. மேன்மை தங்கிய ஆகாகான் சாகிப் லண்டனிலிருந்து, "இந்த நெருக்கடியான சமயத்தில் எனது முஸ்லிம் சகோதரர்கள் ஒற்றுமையைக் கடைப்பிடிப்பார்களென்றும், அதே சமயம் ஹிந்துக்களிடம் நேசப்பான்மையுடன் இருப்பார்களென்றும் நம்புகிறேன்" என்று ஒரு செய்தி அனுப்பினுர்.

மௌலானு ஷவுகத் அலி சாகிப் அவர்கள் கிலாபத் கமிட்டியைப் புனருத்தாரணம் செய்து, முஸ்லிம் தொண்டர் படை திரட்டுவதின் அவசியத்தை வற்புறுத்தினுர்.

"இந்தியாவில் பழுக்கும் மாம்பழங்களில் 100க்கு 40 வீதம் எங்களுக்குக் கொடுத்தாலன்றி. இந்த ஹிந்துக்கள் சுயராஜ்யம் அடைவதைப் பார்த்துவிடுகிறேன்" என்று கர்ஜித்தார் டாக்டர் ஷாபத் ஆமத்கான்.

இதைக் கேட்ட டாக்டர் மூஞ்சி அவர்கள் தாடியை ஒரு கையால் உருவிக்கொண்டு மற்ருெருகையால் கைப் பிரம்பைச் சுழற்றினுர் என்றும் முஸ்லிம் பத்திரிகைகள் வெளியிட்டன.

ஆதித் திராவிட சமூகத்திலும் கிளர்ச்சி உண்டாயிற்று. டாக்டர் அம்பேத்கரும், எம். சி. ராஜாவும் ஒருவர் வாய் திறப்பதை இன்ெனுருவர் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். முதலில் பேசுகிறவர் எது சொன்னுலும், அதற்கு எதிராக மற்ருெருவர் பேசுவதென்று அவர்கள் தீர்மானித்திருந்தனர். அவர்களுடைய சிஷ்யகோடிகள் அதிருப்தியுற்று, ''கொண்டு வா மாம்பழம்!'' என்று கூச்சலிட்டார்கள்.

டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் முன்வந்து, எல்லா விஷயங்களிலும் போல இதிலும் ஸ்திரீகள் அலட்சியம் செய்யப்படுவதைக் கண்டித்தார். விசேஷ மாதர் மகாநாடு ஒன்று கூட்டி அதில், "ஸ்திரீகள் என்ருல் என்ன? அவர்களுக்கு வாய் கிடையாதா? ருசி கிடையாதா? மாம்பழம் சாப்பிட முடியாதா?" என்று உருக்கமாகப் பேசி, தாமே ஒரு பழத்தைப் பிரத்தியட்சமாய்ச் சாப்பிட்டுக் காட்டினுர்.

பண்டித மதன்மோகன் மாளவியா பத்திரிகைகளுக்கு ஒரு நீண்ட அறிக்கை விடுத்தார். பிரம்மா ஜகத்தைச் சிருஷ்டி செய்ததிலிருந்து தொடங்கி மாம்பழம் இந்தியாவுக்கே உரியது என்று ஸ்தாபித்தார். கிழக்கிந்தியக் கம்பெனியார் வந்ததிலிருந்து, சீமைக்குச் சென்றிருக்கும் இந்தியாவின் செல்வங்களுக்கெல்லாம் ஜாப்தா கொடுத்து, மாம்பழத்தையும் அவ்வாறு போகவிடக்கூடாதென்றும், அதற்காகத் தமது உயிரை வேண்டுமானுலும் கொடுக்கத் தயாராயிருப்பதாகவும் கூறினுர்.

விஞ்ஞான மேதாவியாகிய ஸர் சி. வி. ராமன் ஒரு சர்வகலாசாலைப் பிரசங்கத்தில் இதைப்பற்றிக் குறிப்பிட்டு, "ஆகையால் மாணுக்கர்களே! புத்தகங்களை வீசி எறிந்து விட்டு மாம்பழம் சாப்பிடுங்கள்" என்று கூறினுர்.

டாக்டர் நாகராஜ சர்மா, ஸர் சி.வி. ராமன் சொல்

வ்து சுத்த அபத்தமென்று நிருபித்து 'ஹிந்து' பத்திரிகையில் மூன்று பத்தி எழுதினுர்.

வங்காளத்தில் ஒரு விஞ்ஞானப் புலவர் கிளம்பி, ஸர் சி. வி. ராமன் சொன்னதைத் தாம் மூன்று வருஷத்துக்கு முன் சொன்னதாகவும், தம்மை அவர் காப்பியடித்துவிட்டதாகவும் முறையிட்டார். 'மாடர்ன் ரிவியூ' அவர் கட்சியை ஏற்று, ஸர் சி. வி. ராமனுடைய யோக்கியதையை வெளிப்படுத்த ஆரம்பித்தது !

கவி ரவீந்திரநாத தாகூர் அவர்களிடம் இந்த விவாதத்தைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டபோது அவர், "ஓ மாங்கனியே ! நீ நாவிற்கு எவ்வளவு இனிப்பா யிருக்கிறுய்? ஆயினும் உன்னுடைய பெயரால் உலகில் எவ்வளவு அநீதிகள் இழைக்கப்படுகின்றன !" என்று தெரிவித்தார்.

டேராடூன் சிறைச்சாலைக்குள்ளிருந்து ஒரு மெல்லிய குரல் கேட்டதாக ஒரு வதந்தி பரவியது. அந்தக் குரல், "மாம்பழம் யாருக்குச் சொந்தம்? மாமரம் வைத்துப் பயிராக்கித் தண்ணீர் ஊற்றி வளர்த்தவனுக்கல்லவா ? அவன் சும்மா இருக்க, இவர்கள் அடித்துக்கொள்கிருர்களே! அடா ! இதென்ன அநியாய உலகம்?" என்று சொல்லிற்றும்.

* * * *

சேலம் ஒட்டு மாம்பழ வியாபாரிகள் பத்திரிகைகளின் முதல் பக்கங்களில் பெரிய பெரிய விளம்பரங்கள் செய்தார்கள். அவர்களில் கெட்டிக்காரரான ஒருவர் அச் சமயம் டெல்லியில் தங்கியிருந்த மகாத்மா காந்தியின் பெயருக்கு ஒரு கூடை ஒட்டு மாம்பழம் ரயில் பார்ஸலில் அனுப்பினுர். மாம்பழக்கூடையைக் 'கிராண்ட்டிரங்க் எக்ஸ்பிரஸ்' ஆதி வேகமாய்க் கொண்டு சேர்த்தது.

இரண்டு நாளைக்கெல்லாம் "மகாத்மா ஏழுநாள் உபவாச விரதம் தொடங்கி யிருக்கிருர்" என்னும் பயங்கரமான செய்தி தேசமெங்கும் பரவியது. விசாரித்ததில், மகாத்மா சேலம் ஒட்டு மாம்பழம் ஒன்றின் ரஸத்தைச் சாப்பிட்டுவிட்டு அதன் ருசியைப் பற்றி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்ததாகவும், இவ்வாறு நாவின் ருசிக்கு இடங்

கொடுத்துவிட்டது தவறு என்று பின்னல் உணர்ந்துபிராயச் சித்த உபவாசம் தொடங்கியிருப்பதாகவும் தெரியவந்தன

"உலகப் பெரியாரையே மயக்கி உபவாசம் இருக்கச் செய்த ஒப்பற்ற ஒட்டு மாப்பழம்" என்று எங்கெங்கும் விளம்பரங்கள் காணப்பட்டன.

நிற்க. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் வேண்டுகோளின்படி தேசத்தின் நாளுபாகங்களிலிருந்தும் மகாத்மாவுக்குத் தந்திகள் பறந்தன.

"மாம்பழம் சாப்பிட நாங்கள் இருக்கிறோம். தாங்கள் கவலைப்படவேண்டாம். உபவாசத்தை நிறுத்தவும்" என்று இந்திய மக்கள் ஒரு முகமாய் மகாத்மாவை வேண்டிக்கொண்டார்கள்.

இப்படி வேண்டிக்கொண்டவர்களில் நானும் ஒருவனுதலால், இதோ ஒரு மாம்பழத்தைச் சாப்பிட்டுத் தொலைக்கிறேன்.

# நோயற்ற வாழ்வு

இந்தக் கட்டுரையின் தலைப்பு வெகு அழகாயமைந் திருக்கிறதல்லவா? ஆனால் உள்ளுறை என்னவோ அவ்வளவு நன்றாயிராது. சந்தேகம் இருந்தால் படித்துப் பார்த்து விடுங்கள்.

மேற்படி கட்டுரைத் தலைப்பைப் பார்த்ததும், ஏ முதல் இ வரையில் உள்ள விடமின்களைப்பற்றியோ, எனிமா உபயோக தத்துவத்தைப்பற்றியோ, சீர்ஷாசனத்தின் (தலை கீழாய் நிற்பதின்) பெருமையைப்பற்றியோ, சுத்த உபவா சத்தின் சிறப்பைப்பற்றியோ, எழுதப் போகிறேனென்று நீங்கள் நினைத்துக் கொள்வீர்கள். சுருங்கச் சொல்லின், நோயற்ற வாழ்வுக்கு வழி காட்டுவேனென்று எண்ணு வீர்கள். அதுதான் கிடையாது. மேற்படி விஷயம் எதையும் நான் தொடப் போவதில்லை.

பின்னர் என்ன எழுதப்போகிறேனென்று கேட்டால், நோயற்ற வாழ்வு உண்மையில் அவசியந்தானா என்பதைப் பற்றித்தான். நோயற்ற வாழ்வில் அவ்வளவு மேன்மை என்ன இருக்கிறது? நான்தான் கேட்கிறேன்.

ஆம்; நோயற்ற வாழ்வு, உண்மையில் மிகவும் சாரமற்ற வாழ்வா யிருக்குமென்று எனக்குத் தோன்றுகிறது.

அன்பில்லா உலகம் வெறும் பாலைவனமே யாகுமென்று வேத சாஸ்திர புராணங்கள் கதறுகின்றன. கௌதம புத்தர் முதல் மகாத்மா காந்தி வரையில் உபதேசித்ததும், உபதே சிப்பதும் அன்பு—அன்பேயாகும். ஆகையால், வேண்டுவது அன்பு. ஆனால், இருதயப் பெட்டியில் வைத்துப் பூட்டப் பெற்றிருக்கும் அன்பினால் என்ன பயன்? ஒன்றுமில்லை. அது பூதங்காத்த புதையலைப் போலவேயாகும். அன்பு பயன் படவேண்டுமானால் அதை இருதயத்திலிருந்து வெளிக்

கொணர வேண்டும். அவ்வாறு அன்பை வெளிக் கிளப்பக் கூடிய சாதனங்களில், நோயில் வீழ்வதற்கு மிஞ்சித்தான் மற்றவையெல்லாம் என்று சொல்வேன்.

காலஞ்சென்ற வேதநாயக விற்பன்னர் தாம் இயற்றிய அழியாப் புகழ் படைத்த பிரதாப முதலியார் சரித்திரத்தில் இந்த உண்மையை வெகு அழகாக எடுத்து விளக்கியிருக் கிருர். பிரதாப முதலியார் குழந்தையா யிருந்தபோது அவர் வீட்டில் யாருக்கோ நோய் வந்தது. அப்படி நோயாய்க் கிடந்தவரை எல்லாரும் சிரத்தையுடன் கவனித்தார்கள். அவருக்கு எல்லாப் பணிவிடைகளும் செய்தார்கள். போவோர் வருவோர் எல்லாரும் நோயாளியைப்பற்றியே விசாரித்தார்கள். இவையெல்லாம் சிறுவனுடைய உள்ளத் தில் பொருமைத் தீயை வளர்த்தன. "எனக்கும் ஏன் நோய் வரக்கூடாது? வந்தால் எல்லாரும் என்னைக் கவனிப் பார்களல்லவா?" என்று ஏங்கியதாக வேத நாயகர் விவரித் திருக்கிருர்.

மண்ணில் பிறந்து, மண்ணுகப் போகிற உங்களுடைய உடம்பைப் பத்திரமாய்ப் பாதுகாப்பதில் எவ்வளவு பேருக்கு சிரத்தை உண்டென்று அறிய வேண்டுமாஞல், தயவுசெய்து நோயாய்ப் படுத்துக்கொள்ளுங்கள். எத்தனை பேர் வந்து உங்கள் தேகத்தைப்பற்றி விசாரிக்கிருர்கள். எவ்வளவு கவலை காட்டுகிருர்கள், எத்தனை விதவிதமான சிகிச்சை முறைகளைச் சொல்கிருர்கள் என்பதைக் காண்பீர்கள்.

நோய் விசாரணையில் இரண்டு விதம் உண்டு: ஒன்று கர்நாடக முறை; மற்ருென்று நவீன முறை. முதலில் கர்நாடக முறையைச் சொல்கிறேன்: நாராயணசாமி நோயாய்க் கிடக்கிருன். அவனைப் பார்க்கச் சேஷிப் பாட்டி வருகிருள். நாராயணசாமியைப் பார்த்ததும் சேஷிப் பாட்டிக்குத் துக்கம் நெஞ்சையடைக்கின்றது. "அடா! என் கண்மணியே! இப்படி எலும்பும் தோலுமாய்ப் போய் விட்டாயே? வயிறு பகீர் என்கிறதே! குடியைக் கெடுத்து விடாதேடா, அப்பா! குட்டியம்மாள் வயிற்றில் தீயை வைக்காதேடா!" என்று புலம்புகிருள். அச் சமயம் நாராயணசாமியின் தாயார் குட்டியம்மாள் அங்கு வர,

சேஷிப் பாட்டி அவனைப் பார்த்து, "அடி அம்மா! குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கோடி. எங்காத்திலே கடன்காரன் பொன்னு இருந்தானேல்யோ! இப்படியே தான் பத்து நாள் கிடந்தான். ஒரு நாள் திடீரென்று வலிப்பு மாதிரி வந்து இரண்டு இழுப்பு இழுத்தது. பொக்குன்னு உயிர் போயிடுத்து. அப்புறம் அப்பான்னு வருமா? அய்யான்னு வருமா? ஜாக்கிரதேடி அம்மா! ஜாக்கிரதை!" என்று கூறி, இறந்துபோன 'கடன்காரன்' பொன்னுவை நினைத்து அழத்தொடங்குகிறாள்.

சேஷிப் பாட்டியின் அநுதாபத்தைக் கிளப்புவதற்கு ஒருவன் நோயாய்ப் படுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் கூட இல்லை. சில நாள் பிரிந்திருந்து மறுபடியும் சந்தித்தாலே போதும். "ஏண்டாப்பா! இப்படி இளைத்துப் போயிருக்கிறாயே? உடம்பு கட்டோடே நன்றாயில்லையே?" என்று விசாரணை தொடங்கி விடுவாள். நான் என்னுடைய கிராமத்தை விட்டுச் சென்று பதினான்கு வருஷங்களாகின்றன. அதன் பின்னர், எப்போது ஊருக்குப் போனாலும், அப்போதெல்லாம் மேற்கூறிய அன்பான விசாரணைதான் எனக்கு நல்வரவு கூறும். இவ்வாறு விசாரிக்கப்படும் ஒவ்வொரு தடவைக்கும் அரைக்கால் அங்குலம் வீதம் இளைத்து வந்திருந்தேனானால் இதற்குள் உடம்பு முழுவதும் தேய்ந்து மறைந்து இப்போது காற்றுருவமாக யிருந்திருப்பேன். ஆனால், உண்மையில் பத்து வருஷத்துக்கு முன்பிருந்ததை விட இப்போது பத்து ராத்தல் அதிக கனமாயிருக்கிறேன்.

நமது நாட்டில் வாழ்வின் பல துறைகளிலும் தற்போது "பழையன கழிந்து புதியன புகுந்து" வருவதுபோல், நோய் விசாரணையிலும் பழைய கர்நாடக முறை மெள்ள மெள்ள மறைந்து நவீன முறை தலையெடுத்து வருகிறது. இப்போதெல்லாம் படித்தவர்களும் நாகரிகமுற்றவர்களும் சாதாரணமாய் ஒருவரை யொருவர் பார்க்கும்போது "என்ன ஸார்! உங்கள் உடம்பு இப்போது ரொம்ப நன்றாயிருக்கிறதே!" என்று சுகம் விசாரிப்பது வழக்கம். உடம்பு இளைத்துப் போயிருப்பதாகக் குறிப்பிடுவதே அநாகரிகம். நோயாளி யாரையாவது பார்க்க நேர்ந்தால், அவரைச் சுக

மாயிருப்பவராகவே பாவிக்கவேண்டும். அவருக்கு நோய் இருப்பதாக ஒப்புக்கொள்ள கூடாது. (நீங்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் அவருக்கு நோய் இல்லாமற் போய் விடுமா என்று கேட்காதீர்கள்; கேட்டால் நீங்கள் கர்நாடக மாவீர்கள்.) அவரே தமது வியாதியைப்பற்றிக் குறிப்பிட்டால்கூட, "ரொம்ப நன்ருயிருக்கிறது. உங்களுக்கு வியாதியுமில்லே, ஒன்றுமில்லே. எல்லாம் நீங்களாக நினேத்துக்கொள்வதுதான்" என்று சொல்லவேண்டும்.

நோயாளி படுத்த படுக்கையா யிருந்தால் அவருடைய நோயை ஒப்புக்கொள்ளாமல் சரிப்படாது. முழுப்பூசனிக் காயைச் சோற்றில் மறைக்க முடியுமா? இப்படிப்பட்ட 'கேஸ்'களில், நோயாளியிடம், "முன் தடவை பார்த்ததற்கு இப்பொழுது ரொம்பத் தேறியிருக்கிறீர்களே!" என்று சொல்லுதல் மரபு. அத்துடன், "இதென்ன பிரமாதம்? எங்கள் வீட்டுக் கோவிந்தசாமிக்கு இதே நோய்தான் வந்திருந்தது. இன்னும் ரொம்பக் கேவலமாயிருந்தான். இப்பொழுது சொஸ்தமாகிக் குண்டுபோல் இருக்கிருன்" என்று சொல்லுதல் அழகு.

இந்த நவீன முறையில் ஒரே ஓர் ஆபத்து இருக்கிறது: அதாவது, நோயாளியும் நாகரிக மனிதராதலால், அவர் யார் சொல்வதையும் நம்புவதில்லே. உண்மையாகவே அவருடைய உடம்பு தேறிக்கொண்டு வந்தாலும், அதை யாராவது சொன்ஞல் அவருக்குச் சந்தேகம் பிறந்து விடுகிறது. 'நம் உடம்பு ரொம்பக் கேவலமாய்த்தான் இருக்க வேண்டும். நமக்குத் தைரியமூட்டுவதற்காக இப்படிச் சொல்கிருர்கள்' என்று அவர் எண்ணிக்கொள்கிருர்.

இந்த இனத்தைச் சேர்ந்தவர் அடுத்த வீட்டு ஜானகியம்மாள். அவர் கல்வியறிவு அதிகமுள்ளவராதலால், சாதாரண நோயாளிகளேப்போல் தம்மை யாரும் ஏமாற்றமுடியாதென்று நினேக்கிருர். தமக்கு உடம்பு அபிவிருத்தியடைந்து வருகிறதென்று அவர் நம்புவது கிடையாது. பிறர் சொன்ஞல் சந்தேகம் இன்னும் அதிகம். தமது உடம்பு நிலேயைப்பற்றி அவர் புகார் சொல்லும்போதெல்லாம், அவருடைய தகப்பஞரும், "உனக்கு ஒன்றும் இல்லே.

நினைப்புத்தான். உடம்பு சரியில்லையென்று நீயாக நினைத்துக் கொள்கிறாய்'' என்று சொல்வது வழக்கம். ஜானகி தேவியின் பொருள் பொதிந்த புன்சிரிப்பு இதற்குப் பதில் சொல்லும்.

ஒரு சமயம் அவருடைய தந்தையார் எங்கேயோ ஊருக்குப் போய்விட்டு வந்தார். வந்தவுடன் புதல்வியைப் பார்த்து, ''உனக்கு உடம்பு ரொம்ப நன்றாயிருக்கிறதே? நான் போனதற்கு இப்போது பருத்திருக்கிறதே?'' என்று சொன்னார். அதற்கு ஜானகியம்மாள், ''என் உடம்பு பருத்திருக்கும் என்று நீங்கள் நினைத்துக்கொண்டே வந்திருக்கிறீர்கள்! அதனால் அப்படித் தோன்றுகிறது. உண்மையில் எனக்கு அதிக பலவீனமாயிருக்கிறது'' என்றார். இவ்வாறு 'நினைப்பு'த் தத்துவத்தை அவர் தலைகீழாகத் திருப்பி விட்டார். நவீன முறையிலுள்ள ஆபத்தைப் பாருங்கள்!

ஜனங்களின் அன்பும் ஆதரவும் வெளிப்படுவதில் மற்றொரு பெரிய சுகம் இருக்கிறது. அது என்னவெனில், நோய் நீங்கியபின் ஏற்படும் சுகந்தான். நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பார்கள். வயிற்று வலிக்காரனுக்குத் தெரியும் வயிற்றுவலி இல்லாதிருப்பதின் ஆனந்தம்! உங்களுக்கும் எனக்கும் என்ன தெரியும்? இது மட்டுமல்ல. நோயும் சிகிச்சையும் கொஞ்சம் நாகரிகமானவைகளாயிருந்துவிட்டால், பின்னால் அவைகளைப்பற்றி விவரிப்பதில் உள்ள இன்பம் வேறெதிலும் கிடையாது என்று சொல்லலாம்.

உதாரணமாக, நான் ஜலதோஷத்துக்குச் சிகிச்சை செய்துகொண்ட கதையை எடுத்துக் கொள்ளுங்கள். இதுவரையில் இருநூறு தடவை அதைச் சொல்லியிருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் அதைச் சொல்வதில் சந்தோஷம் அதிகரித்தே வருகிறது. ஏன்? இருநூற்றோராம் தடவையாக உங்களுக்குந்தான் சொல்லிவிடுகிறேனே! (இக் கட்டுரை நான் எழுத ஆரம்பித்ததின் நோக்கம் என்னவென்று இப்போது உங்களுக்கு விளங்கியிருக்கலாம்.)

மகாத்மா காந்திக்கும், வின்ஸ்டன் சர்ச்சிலுக்கும், பெர்னார்ட் ஷாவுக்கும், முஸோலினிக்கும், எனக்கும் பொதுவாயிருப்பது ஜலதோஷமாகும். வித்தியாசம் என்னவென்றால்,

அவர்களுக்கு ஜலதோஷம் வந்தால் உடனே அந்தச் செய்தி யானது தரைத் தந்தி, கடல் தந்தி, ஆகாயத் தந்திகளின் மூலம் உலகமெங்கும் பறக்கின்றது. ஆனால், என்னுடைய ஜலதோஷத்தைப்பற்றி நானே இப்போது உலகத்துக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டியதா யிருக்கிறது. பிறரை எதிர்பாராமல் அவரவர்களுடைய காரியங்களை அவரவர் களே பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதாக மகான் டால் ஸ்டாய், மகாத்மா காந்தி முதலியோர் சொல்லியிருப்பதால் என்னைப்பற்றிய செய்தியை நானே வெளிப்படுத்துவதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

(சட்டசபை அபேட்சகர்கள் சொல்லுவதுபோல்) நண்பர்கள், அபிமானிகள் பலருடைய வற்புறுத்தலுக் கிணங்கி, ஜலதோஷ சிகிச்சைக்காக நான் சென்னை நகருக் குப் புறப்பட்டுச் சென்றேன். கழுத்துக்கு மேற்பட்ட எல்லா வியாதிகளிலும் நிபுணர் என்று பெயர்பெற்ற டாக்டர் ரங்கராயணன் அவர்களிடம் முதலில் போனேன். அவர் மின்சார விளக்கு, பூதக்கண்ணாடி முதலியவைகளின் உதவி கொண்டு கழுத்துக்குமேல் உள்ள என்னுடைய எல்லா உறுப்புக்களையும் நன்றாகப் பரிசோதனை செய்துவிட்டு, "காது, மூக்கு, தொண்டை மூன்றும் ஆபரேஷன் செய்தாக வேண்டும். ஒவ்வோர் ஆபரேஷனுக்கும் இருபது நாள் வீதம் மொத்தம் இரண்டு மாதம் சிகிச்சையில் இருக்கவேண்டும்" என்றார். நான் யோசித்தேன். ஆபரேஷன் என்றால் எனக்கு எவ்வளவோ பிரியம். அதைப்போல் நாகரிகமான சிகிச்சை வேறு எதுவும் கிடையாது. அதிலும் பெயர்பெற்ற டாக்டர் களிடம் ஆபரேஷன் செய்துகொண்டுவிட்டால், அப்புறம் ஆயுள் பரியந்தம், "உங்களுக்குத் தெரியுமோல்யோ, ஸார்! நான் டாக்டர் ரங்கராயணனிடம் 'நோஸ்' ஆபரேஷன் செய்துகொண்டபோது..." என்று எவ்வளவோ பெருமை யுடன் சொல்லிக்கொள்ளலாம். மேலும், இதைப்போல் தொண்டை, செவி, நாசி மூன்றுக்கும் ஒரே அடியில் ஆபரேஷன் என்றால் நினைக்க நினைக்க எனக்கே குதூகலம் தாங்கவில்லை. ஆனால், கொஞ்சம் பயமும் உண்டாயிற்று.

ஒருவேளை தப்பித் தவறி ஆபரேஷன் சிறிது பிசகிவிட்டால், சூர்ப்பணகா பங்கமாகவல்லவா போய்விடும்?

இவ்வாறு யோசித்து, அங்கிருந்த உதவி டாக்டரிடம், "மூன்று ஆபரேஷனுக்கும் எவ்வளவு பணம் டாக்டருக்குக் கொடுக்கும்படி யிருக்கும்?" என்று கேட்டேன். அவர் "ஐந்நூறு ரூபாயாவது கொடுக்கவேண்டும்" என்றார். உடனே அங்கவஸ்திரத்தை எடுத்து உதறிப் போட்டுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினேன். அப்புறம் அந்தப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லையென்றால், நீங்கள் ஆச்சரியப் படமாட்டீர்களென்று நம்புகிறேன்.

டாக்டர் ரங்கராயணன் கழுத்துக்கு மேற்பட்ட நோய்களில் நிபுணர் எனில், டாக்டர் சங்கராச்சாரி எல்லா வகை ஆபரேஷன்களிலும் பிரசித்தி பெற்றவர். என்னைப் பார்க்க அவருக்கு மிகவும் சந்தோஷமா யிருக்குமென்று எண்ணினேன். என்னைப்போல், ஒரு சாண் இடத்திற்குள் மூன்று ஆபரேஷன் செய்யக்கூடிய 'கேஸ்' அவருக்குக் கிடைப்பது அபூர்வமல்லவா? அவரிடம் போனதும், "உங்களுக்கென்ன? சாவதானமாய்ச் சொல்லுங்கள்" என்றார். மிகவும் சாவதானமாக, எனது ஜலதோஷத்தின் சரித்திரத்தை எடுத்துச் சொன்னேன், பிறகு அவர் முந்தைய டாக்டரைப் போலவே தொண்டை, மூக்கு, காது எல்லாவற்றையும் பரிசோதனை செய்தார். பரிசோதனை முடிந்ததும் கருவிகளை யெல்லாம் வைத்துவிட்டு, "நல்லது; நீங்கள் என்ன தண்ணீரில் ஸ்நானம் செய்வது வழக்கம்?" என்று கேட்டார்.

"அந்த விஷயத்தில் நான் ரொம்ப ஜாக்கிரதையுள்ளவன். தப்பித் தவறிக்கூடக் குளிர்ந்த ஜலத்தில் குளிப்பது கிடையாது" என்றேன்.

"பார்த்தீரா? அதுதான் காரணம். வெந்நீரில் குளிக்கவே கூடாது. எப்போதும் குளிர்ந்த நீரில் குளித்தே பழக்கம் செய்துகொள்ள வேண்டும். அதிகமாகக் கம்பளி முதலியவற்றால் போர்த்திக் கொள்ளக்கூடாது. எல்லா வகைச் சீதோஷ்ண நிலைமைக்கும் உடம்பைத் தகுதியாக்கிக் கொள்ளவேண்டும்" என்றார்.

எனக்குண்டான ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது.

''ஆபரேஷன் ஒன்றும் வேண்டியதில்லையா?'' என்று கேட்டேன். ''ஆபரேஷனு? அது என்னத்திற்காக?'' என்றார் டாக்டர்.

''மருந்துகூட ஒன்றும் தேவையில்லையா?'' என்றேன். அந்தப் பொல்லாத டாக்டரின் கல்மனம் இளகவில்லை. ''இதற்கெல்லாம் இயற்கை வைத்தியந்தான் சிறந்தது'' என்று அவர் தெரிவித்தார்.

இப்போதுதான் விஷயம் விளங்கிற்று. இயற்கைப் பைத்தியம் பிடித்த புதுமை டாக்டர்களில் சங்கராச்சாரியும் ஒருவர்போலும். எனக்கென்னவோ இத்தகைய இயற்கை வைத்தியர்களைக் கட்டோடு பிடிப்பதில்லை. வியாதியென்று வந்தால் ஏதோ ஆபரேஷன் அல்லது இஞ்சக்ஷன் செய்யு வேண்டும். மிக்ஸ்சர் அல்லது மாத்திரை கொடுத்து அனுப்பினுலும் பாதகமில்லை. மருந்துப் புட்டியும், அவுன்ஸ் கிளாஸும் பக்கத்தில் வைத்துக்கொண்டு வேளைக்கு வேளை மருந்து ஊற்றிச் சாப்பிட்டுக்கொண்டிருந்தால் மனத்துக்கு ஒரு திருப்தி; பார்ப்பவர்களுக்கு ஒரு மதிப்பு; வைத்தியத்துக்கு அழகு. இதையெல்லாம் விட்டுவிட்டு, ''பச்சை ஜலத்தில் குளி; கம்பளி போர்த்திக்கொள்ளாதே; மூச்சை இழுத்து விடு; சோற்றை மென்று தின்னு'' என்று சொல்வதா வைத்தியர்களுக்கு இலட்சணம்?

இவ்வாறு இரண்டு பெரிய டாக்டர்கள் அபிப்பிராய பேதம் காட்டியிருப்பதால், மூன்றுவது வைத்தியர் ஒருவரைப் பார்த்துவிடுவதுதான் சரியென்று தீர்மானித்தேன். விசாரித்ததில் டாக்டர் மரியன் என்பவர் தொண்டை-மூக்கு -காது நோய்களில் பிரபல கெட்டிக்காரர் என்று தெரிந்தது. அவரைப் பார்த்ததுமே மற்றைய வியாதிகள் பீதியடைந்து செத்தேன் பிழைத்தேன் என்று ஓடிப்போகுமென்று சொன்ஞர்கள். முதல் நாள் போனபோது டாக்டர் மரியன் ஆஜரில் இல்லை. அவரிடம் பயிற்சி பெற்றுவரும் உதவி டாக்டர் இருந்தார். அவரிடம் மேற்கூறிய பெயர் பெற்ற டாக்டர்களின் அபிப்பிராய பேதத்தைப்பற்றிக் கூறினேன்.

உதவி டாக்டரும் மற்றவர்களைப்போலவே பரிசோதனை செய்துவிட்டு, ''தொண்டையில் ஒன்றுமில்லை. காதிலும்

ஒன்றும் கிடையாது. மூக்கு வழியாகக் காற்றுப் போகவே இல்லை. அதைக் கட்டாயம் ஆபரேஷன் செய்துதான் ஆகவேண்டும். சந்தேகமில்லை'' என்றார். எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. மூக்கைப் பிடித்துப் பார்த்து, காற்றுப் போகிறதாவென்று பரீக்ஷித்துப் பார்த்தேன். 'ஹூம்ஹூம்' என்று மூன்று நான்கு முறை கையில் பெருமூச்சுவிட்டுப் பார்த்துக்கொண்ட பிறகுதான் மூக்கு வழியாகக் காற்று வருகிறதென்று தைரியம் வந்தது. பிறகு, ''எல்லாவற் றிற்கும் நாளைக்கு வாருங்கள். டாக்டர் மரியனிடமும் காட்டிவிடலாம். ஆனால், அவரிடம் வேறு டாக்டர்களைக் கேட்டதாகச் சொல்லவேண்டாம்'' என்றார்.

அவ்வாறு மறு நாளும் சென்றேன். டாக்டர் மரியனைப் பார்ப்பதற்குப் பெரிய அடிதடி சண்டையா யிருந்தது. அவ்வளவு கூட்டம். அந்தக் கூட்டத்தில் புகுந்தால், மரித்துப் போகாவிட்டாலும் டாக்டர் மரியனிடம் போய்ச் சேர்வ தற்குள் மூக்கு காணாமற்போனாலும் போய்விடும் என்று தோன்றிற்று. உதவி டாக்டரின் சகாயத்தினால், மூக்கைப் பத்திரமாய்ப் பொத்திக்கொண்டு, எப்படியோ உள்ளே போய்ச் சேர்ந்தேன்.

டாக்டர் மரியன் அப்போது வேறொரு நோயாளியைப் பரிசோதனை செய்துகொண்டிருந்தார். அவரைச் சுற்றி ஏழெட்டு இளைஞர்களும், நாலைந்து யுவதிகளும் நின்று கொண் டிருந்தார்கள். அவர்கள் வைத்திய மாணாக்கர்கள் என்று தெரிந்தது. டாக்டர் மரியன் நோயாளியின் வாயை நன்றாய்த் திறக்கச் சொன்னார். உடனே சுமார் 15 ஜோடி கண்கள் அங்கு ஊடுருவிச் சென்றன. பிறகு டாக்டர் ஒரு சிறு கறண்டி போன்ற ஆயுதத்தினால் நாவை அழுத்திக் கொண்டு தொண்டையைக் காட்டிக் காட்டி ஏதேதோ அந்த மாணாக்கர்களுக்குக் கூறினார். இதே விதமாக அந் நோயாளியின் நாசி, செவி துவாரங்களும் பதினைந்து ஜோடி கண்களின் பரிசீலனைக்குள்ளாயின.

நான் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக என் விஷயத்தில் டாக்டர் மரியனாவது, வைத்திய மாணாக்கர்களாவது அவ்வளவு சிரத்தை காட்டவில்லை. டாக்டர் ஒரு நொடியில்

பரிசோதனையை முடித்துவிட்டுக் காகிதத்தில் ஏதோ எழுதி என் கையில் கொடுத்தார். அதை அந்த மாணுக்கர்கள் எல்லாரும் வாங்கிப் பார்த்தார்கள். 'சீ! இவ்வளவுதாஞ?' என்னும் பாவனையாக அவர்கள் சீட்டை அலட்சியமாய்ப் பார்த்துவிட்டு என்னிடம் கொடுத்தார்கள். நான் வெளியே வந்து அதைப் படித்துப் பார்த்தேன். தொண்டையில் தடவுவதற்கு அதில் ஒரு மருந்து எழுதப்பட்டிருந்தது. அத்துடன் "டான்ஸில்ஸ் பின்ஞல்'' என்றும் எழுதியிருந்தது. உதவி டாக்டரைப் பார்த்து, "என்ன ஸார்! மூக்கு ஆபரேஷன் கட்டாயம் செய்யவேண்டும் என்கிறீர்கள். அவர் இப்படி எழுதியிருக்கிருரே?'' என்று கேட்டேன். முதலில் என்னிடம் மிக்க பிரியமாயிருந்த உதவி டாக்டர் இப்பொழுது முகங்கொடுத்துக்கூடப் பேசவில்லே. ''ரொம்ப அவசர வேலே. எல்லாவற்றிற்கும் நீங்கள் போய்விட்டு ஒரு மாதங் கழித்து வாருங்கள், பார்க்கலாம்'' என்ருர்.

மொத்தத்தில் டாக்டர் மரியனேப் பார்த்ததில் எனக்குக் கொஞ்சத்துக்குக் கொஞ்சம் திருப்தி உண்டாயிற்று. டாக்டர் சங்கராச்சாரியைப்போல் ஒரேயடியாகப் பச்சை ஜலத்தில் குளியென்று சொல்லாமல், டான்ஸில் ஆபரேஷனுக்காவது சிறிது நம்பிக்கை கொடுத்தாரல்லவா? ஆஞல், துரதிர்ஷ்டவசமாக, அத்துடன் நான் திரும்பி வரவில்லே. கடைசியாக என்னுடைய நண்பரும், மேற் சொன்னவர்களேப்போல் பிரசித்திபெருதவருமான ஒரு எம்.பி.சி.எம். அவர்களிடம் போனேன். "டாக்டர்! என்னுடைய தொண்டையைச் சற்றுப் பாருங்கள்! டான்ஸில் ஆபரேஷன் செய்ய வேண்டியிருக்குமா?'' என்று கேட்டேன். அந் நண்பர் பார்த்துவிட்டு, ''எந்த ம.........ன் உங்கள் தொண்டையில் டான்ஸில் இருப்பதாகச் சொன்னது?'' என்று திருப்பிக் கேட்டார்.

முடிவாக, தொண்டை, மூக்கு, காது ஒன்றையும் பறிகொடுக்காமல் எல்லாவற்றையும் பத்திரமாய் எடுத்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி வந்து சேர்ந்தேன். ஜலதோஷமும் உடன் வந்து சேர்ந்தது. உண்மையில் யோசித்துப்

பார்க்கும்போது, இவ்வளவு விசுவாசமுள்ள ஒன்றை நம்மிட மிருந்து ஓட்டுவதற்கு ஏன் முயற்சி செய்யவேண்டும்? இத்தனை நாள் இருந்ததுபோல் இனியும் நம்முடன் இருந்து விட்டுப் போகட்டுமென்று கடைசியாகத் தீர்மானித்து விட்டேன்.

நோயற்ற வாழ்வில் பிரமையுள்ள நண்பர்களுக்கு ஒரு வார்த்தை. நோயற்ற வாழ்க்கையிலிருந்து இவ்வளவு ரசமான ஓர் அநுபவத்தை நீங்கள் எடுத்துச் சொல்ல முடியுமா?

# பகல் தூக்கம்

விஸ்தாரமான மைதானம். கண்ணுக்கெட்டிய தூரம் பச்சைப் பசேல் என்ற பசும்புற் கம்பளம் விரித்திருந்தது. மைதானத்தின் மேற்குத் திசையில்மட்டும் வெகு தூரத்துக் கப்பால் அடுக்கடுக்கான மலைத் தொடர்கள் காணப் பட்டன. மலையடிவாரங்களில் படர்ந்து நெருங்கிய கண்ணுக்கினிய சோலைகள் காட்சியளித்தன. திங்களஞ் செல்வன் இன்ப ஒளிக்கிரணங்களைப் பொழிந்து வானமும் பூமியும் ஜோதி மயமாகத் திகழும்படி செய்துகொண் டிருந் தான். மெல்லிய குளிர்ப் பூங்காற்று வீசிக்கொண் டிருந்தது.

இம் மைதானத்தில் நின்று நான் நாற்புறமும் சுற்றிப் பார்த்துக்கொண் டிருந்தேன். என் உடலும் உள்ளமும் ஒருங்கே இயற்கை இன்பத்தில் ஈடுபட்டுத் திளைத்துக்கொண் டிருந்தன. உற்சாகம் பொங்கித் ததும்பிற்று. இவ்வாறு நாற்பக்கமும் பார்த்துக்கொண்டு நிற்கையில், மேற்குத் திசையில் இருந்த வெண்மலைத் தொடர்களில் எல்லா வற்றிலும் உயரமாக நின்ற ஒரு சிகரத்தின்மீது என் பார்வை சென்றது. ஓ! அப்போது நான் கண்ட காட்சியை என்ன வென்று வர்ணிப்பேன்! என் கண்கள் அச்சமயத்தில் ஓர் அதிசய சக்தியைப் பெற்றிருத்தல் வேண்டும். இன்றேல், அவ்வளவு தொலைத் தூரத்தில் இருந்த மலைச்சிகரத்தில் ஒரு பெண்ணரசி தன்னந்தனியே தலைவிரிகோலமாய் நின்று கண்ணீர் உதிர்த்துக்கொண் டிருந்த காட்சி எனக்குத் தெள்ளத் தெளியக் காணப்பட்ட தெவ்வாறு? என் உள்ளங் குழைந்தது; மயிர் சிலிர்த்தது; கண்ணீர் ததும்பிற்று. அந்த மாதரசியின் அருகில் சென்று அவளுக்கு நேர்ந்த குறை யாது என்று வினவும்படி என் மனம் தூண்டிற்று. உடனே விரைந்து நடந்தேன். நான் இதுவரை என்றும்

கண்டறியாத ஒருவகைப் புதிய சக்தி பிடர்பிடித்து உந்த வாயுவேக மனோவேகமாகப் பறந்து சென்றேன். மலையடி வாரத்தை அடைந்தேன். மலைமீதேறினேன். அரை நொடிப் பொழுதில் சிகரத்தின் உச்சி சேர்ந்தேன். தொலைத் தூரத்திலேயே என் உள்ளத்தைக் கவர்ந்த அம் மாதரசியின் தோற்றம் என்னை இப்போது பரவசப்படுத்திவிட்டது. சற்றுநேரம் பேச நாவெழாது திகைத்து நின்றேன்.

அவள் தோற்றத்தை, அவள் சௌந்தர்யத்தை வர்ணிக்கச் சொல்கிறீர்களா? அந்தோ! அது என்னால் இயலாத காரியம். அவள் அழகு தெய்விகமானது. உருக்க மும், சோகமும், அன்பும், அருளும், அற்புத சௌந்தர்யமும் ஒன்றுகூடி ஒரு பெண் வடிவமெடுத்தனவென்று சொல்லும் படி விளங்கினாள். வேறு விதமாக அவளைப்பற்றி வர்ணிக்க நான் அறியேன். 'கடலினும் பெரிய' அவள் கண்களினின் றும் நீர்ப் பெருக்கெடுத்துப் பொழிந்துகொண் டிருந்தது. தலைவிரிகோலமாய் அவள் நின்ற காட்சி அனலிலிட்ட மெழு கென என் உள்ளத்தை உருக்கிற்று. அவளுடைய வயது என்னவாயிருக்கலாம் என்று எண்ணி எண்ணிப் பார்த்தேன். அதைமட்டும் என்னால் அறியக்கூட முடியவில்லை.

அவள் பாத தாமரைகளில் வீழ்ந்து வணங்கி, " தாயே, உனக்கு நேர்ந்த குறையென்ன, சொல்வாய்? நினது கண் களினின்றும் நீர் பெருகுவதென்னை? இளமைப் பருவத்தில் என்னைப் பெற்ற அன்னையை இழந்தேன். ஆனால், இன்று உன்னைப் பார்க்கும்போது நீயே என் தாய் என்று என் உள்ளத்தினுள்ளே ஏதோ ஒன்று கூறுகிறது. உன் துயரத் தின் காரணத்தைக் கூறுவாய். என் இன்னுயிரை ஈந்தேனும் உன் துயரம் தீர்ப்பேனென்று இதோ சத்தியம் செய்கிறேன்!" என்று நாத் தழுதழுக்கக் கண்களில் நீர் ததும்ப உருக்கத்தோடு உரைத்தேன்.

அப்போது அம் மாதரசியின் முகம் ஒரு சிறிதே மலர்ச்சியுற்றது. அன்றலர்ந்த செந்தாமரையையொத்த அவள் இதழ்களில் புன்னகையின் ஒரு சாயை மின்னல்போல் தோன்றி மறைந்தது. என் உள்ளமும் தண்ணென்று

குளிர்ந்தது. அப் பெண்ணரசி தனது பவழச் செவ்வாய் திறந்து சொல்வாள் : ''மைந்தா! முதலில் பாவியேனுகிய நான் யாரென்று உனக்குத் தெரிவிக்கிறேன். என்னைக் கண்டதும் உன் அன்னையென்னும் உணர்ச்சி பிறந்ததாகக் கூறினுய். ஆம்! உண்மையில் நான் உனது அன்னையே. ஒருவரல்ல, இருவரல்ல, முப்பது கோடி மக்களை ஈன்றெடுத்த தாய் நான். என்னைப் பாரதி என்றழைப்பார்கள்.''

இம்மொழிகள் இன்பத் தேன்மாரியென்ன என் செவிகளிற் புகுந்து சென்று என் ஆன்மாவை ஆனந்தக் கடலில் அமிழ்த்திவிட்டன. ஆனுல், அவ்வானந்தம் நீடித்திருக்கவில்லை. அன்னை மீண்டுஞ் சொல்வாள்: ''ஆம், முப்பது கோடிப் புதல்வர் புதல்விகளைப் பெற்றெடுத்தேனுயினும் அநாதையாய், பாரதீனயாய் இருக்கிறேன். என் மக்கள் படும் துன்பங்கள் சொல்லுக்கடங்கா. ஆனுல் எப்போதுமே நான் இப்படித்தான் இருந்து வந்தேனே? இல்லை, இல்லை. இப்பூவுலகெல்லாம் வந்து என் அடிபணிய நான் வீற்றிருந்த காலமும் உண்டு. ஆதிகாலந்தொட்டுச் சில நூற்றுண்டுகளுக்கு முன்புவரை நான் சீருஞ் சிறப்பும் பெற்று, மண்ணவரும் விண்ணவரும் புகழ்ந்தேத்தப் பெற்றவளாய், மணிமுடி தரித்து வாழ்ந்திருந்தேன். என் மக்களும் அக்காலத்தில் உண்ண உணவுக்கும், உடுக்க உடைக்கும் குறைவின்றிப் பஞ்சமும் பிணியும் அறியாதவராய், செல்வர்களாய், வீரர்களாய், ஞானிகளாய், கவிகளாய், இன்ப வாழ்வு நடாத்தி வந்தனர். இன்றே? பாவியேன் வயிற்றிற் பிறந்த அவர்கள் நிலையை எண்ணுந்தோறும் என் வயிறு எரிகிறது. அந்தோ! என் செய்வேன்?''

அன்னையின் இம்மொழிகள் எனக்குத் தாங்கமுடியாத பெருந்துக்கத்தை விளைத்தன. விம்மி விம்மி அழுதுகொண்டே நான் கூறினேன்: ''அன்னையே! உன்னைப்பற்றி நான் பாட்டிலே கேட்டிருக்கிறேன்; புத்தகத்திலே படித்திருக்கிறேன். இதுவரை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேனில்லை. இன்று அப்பேறடைந்தேன். ஆனுல், உன் துக்கத்தைக் காணும்போது என் நெஞ்சம் வெடித்துவிடும்போல் இருக்கிறது. இதோ உன்னுடைய தொண்டுக்காக என்

உடல் பொருள் ஆவியை அர்ப்பணம் செய்கிறேன். நீ உன் பெருமையிழந்து தாழ்வுற்றிருப்பதன் காரணம் என்ன, சொல்வாய். உன் மக்கள் படும் துன்பங்களைத் தெரிவிப்பாய். அவற்றைப் போக்க நான் செய்யவேண்டுவதென்னவென்று கட்டளையிடுவாய்.''

''மைந்தா! தொலைவில் நடக்கும் காட்சிகளை இருந்த இடத்திலிருந்து அவ்வப்போதே பார்ப்பதற்குரிய 'டெலிவிஷன்' என்னும் புதிய சாதனத்தைப்பற்றி நீ கேள்விப் பட்டதுண்டா?'' என்று அன்னை கேட்டாள்.

''மேனுட்டு விஞ்ஞான சாஸ்திரிகள் சிலர் இதுகுறித்து ஆராய்ச்சி செய்து வருவதாகப் பத்திரிகையில் படித்திருக் கிறேன்'' என்று நான் விடையளித்தேன்.

அன்னை பெருமூச்சு விட்டுச் சொல்வாள்: ''ஆம், ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள என் போன்ற நாட்டரசிகள் இதுபோழ்து சீருஞ் சிறப்பும் பெற்று விளங்கு கின்றனர். அவர்களின் புதல்வர்கள் தினந்தோறும் புதிய புதிய இயந்திரங்களைக் கண்டுபிடிப்பதாலும், பிறவற்ருலும் தங்கள் தாய்மார்களின் பெருமையையும், புகழையும் வளர்த்து வருகின்றனர். ஆனல், அதைப்பற்றி நான் இங்குக் கூற வந்தேனில்லை. இயந்திர சாதனம் எதுவுமின்றித் தொலை வில் நிகழும் காட்சிகளையெல்லாம் அந்தந்தக் கணத்திலேயே காணும் ஓர் அற்புத சக்தியைச் சிறிது நேரம் உனக்கு அளிக் கிறேன். அப்போது உன் கண்களாலேயே பார்த்து என் மக்களின் துயரங்களை அறிந்துகொள்வாய்.''

இவ்வாறு கூறி அன்னை பாரதி தன் திருக்கரங்களால் என் கண்களை ஒரு கணம் தொட்டாள். அந்த ஸ்பரிசத்தினுல் நான் புளகாங்கிதமடைந்தேன். ''குழந்தாய், அதோ பார்!'' என்ருள் தாய். அவள் சுட்டிக்காட்டிய பக்கம் நோக்கினேன். அதி ஆச்சரியமடைந்தேன். மைதானத் தைக் காணேன்; பசும்புற்றரையைக் காணேன்; வெண்ணில வைக் காணேன்; பஞ்சமர்கள் வசிக்கும் சேரி ஒன்று என் கண்முன்னே தென்பட்டது. அச் சேரியின் நடுவில் இருந்த ஒரு வீட்டின் மீது என் பார்வை சென்றது. அது ஒரு குச்சு; கூரையில் ஆயிரம் பொத்தல்கள் இருந்தன. அக்கம் பக்கத்

தின் ஆபாசம் சொல்லமுடியாது. குப்பைகள், எலும்புத் துண்டுகள், பிராணிகளின் அழுகிய உடல்கள், மலஜலங்கள் இவையே வீட்டைச் சுற்றிலும் உள்ளவை. அத்தகைய வீட்டின் உள்ளே ஒரு பெண் கண்ணீர் விட்டுக் கதறி அழுது கொண்டிருந்தாள். ஆடவன் ஒருவன் அவளைப் புடைத்துக் கொண்டிருந்தான். குழந்தை ஒன்று அழுதுகொண்டே வந்து அம் மனிதன் கால்களைப் பற்றியது. ஆனால், வெறி கொண்ட பித்தன்போல் அந்த ஆடவன் அக்குழந்தை யையும் நையப் புடைத்தான்.

"அன்னையே! இஃதென்ன கோரம்?" என்று நான் வினவினேன்.

"மைந்தா, மிருகத் தன்மையனாக உனக்குத் தோன்றும் அம்மனிதன் உண்மையில் நல்லவன். தன் மனைவியிடமும், குழந்தையிடமும் அடங்காத அன்பு கொண்டவன். ஆனால், அவன் இன்று குடித்துவிட்டு வந்திருக்கிறான். நாள் முழுதும் வேலை செய்து பெற்ற தானியத்தைக் கள்ளுக்கடையில் அழுதுவிட்டு வீட்டுக்கு வெறுங் கையுடன் வந்திருக்கிறான். வீட்டிலே கூழுக்குத் தானியம் இல்லை. குடிவெறியில் இதன் பொருட்டு மனைவியைப் போட்டு அடிக்கிறான். குழந்தைக் கும் இந்தக் கதியே. இனி, இன்னுமொரு காட்சியைப் பார்!" என்றாள் அன்னை.

உடனே, பஞ்சமர் சேரி மறைந்தது; குடியானவர் வசிக்கும் தெரு ஒன்று தோன்றியது. இங்கும் ஆபாசங் களுக்குக் குறைவில்லை. ஒவ்வொரு வீட்டு வாயிலிலும் கூரை முனையில் வேப்பிலைக் கொத்து ஒன்று செருகியிருந்தது; எங்கும் அழுகுரல் கேட்டது. தெருவின் மத்தியில் இருந்த ஒரு வீட்டின் உள்ளே என் பார்வை சென்றது. பெண் ணொருத்தி அடுப்பினருகில் உட்கார்ந்து கம்பங் கூழ் காய்ச் சிக்கொண்டிருந்தாள். அவளைச் சுற்றிலும் ஐந்தாறு குழந் தைகள், "அம்மா, கஞ்சி! அம்மா, கஞ்சி!" என்று கூச்ச லிட்டுக்கொண்டிருந்தன. குழந்தைகள்மீது ஆடையென்பது அணுவளவுமில்லை. குளிரால் விறைத்துக்கொண்டிருந்தன. ஒரு மூலையில் தள்ளாத கிழவன் ஒருவன் படுத்து இருமிக்கொண்டிருந்தான். மற்றொரு புறத்தில் இளம்

பெண் ஒருத்தி படுத்துக்கொண் டிருந்தாள். அவளுக்கு வைசூரி போட்டியிருப்பதாக அவளுடம்பில் இருந்த கொப்புளங்களினுல் தெரிந்தது. அப்போது நடுத்தர வயதுடைய மனிதன் ஒருவன் வெளியிலிருந்து வீட்டுக்குள் வந்து சுவர் ஓரமாக உட்கார்ந்தான். "தெய்வமே!" என்று கூறிப் பெருமூச்சு விட்டான். மூலையில் படுத்திருந்த கிழவன், "மகனே, போன சங்கதி என்னவாயிற்று?" என்று கேட்டான். "காரியம் ஆகவில்லை. எஜமான் நிச்சயமாக இல்லையென்று சொல்லிவிட்டார். அவர்கள் வீட்டுக்கே நெல் போதும் போதாதா யிருக்கிறதாம்" என்றுன் வந்தவன். கூழ் காய்ச்சிக் கொண்டிருந்த பெண், "ஐயோ! தை பிறக்கும் வரை இன்னும் மூன்று மாதப் பொழுது போக வேண்டுமே! இந்தக் குழந்தைகள் என்னைப் பிடுங்கித் தின்கின்றனவே?" என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

அன்னை கூறுவாள்: "மைந்தா, இவர்கள் வீட்டில் மிகுந்திருந்த கம்பை இன்று கடைசியாகக் கூழ் காய்ச்சி விட்டார்கள். அந்தக் கூழ் இவர்கள் எல்லாருக்கும் கால் வயிற்றுக்குக்கூடக் காணுது. இந் நிலையில் இவர்கள் வீட்டில் வைசூரி போட்டியிருக்கிறது. இனி, மற்ருெரு காட்சியைப் பார்" என்ருள்.

அக் காட்சி மறைந்தது. இப்பொழுது என் கண்முன் காணப்பட்டது ஒரு நகரம். எங்குப் பார்த்தாலும் ஆலைகளின் புகை போக்கிகள் காணப்பட்டன. சுத்த ஆகாயம் என்பதை எந்நாளும் கண்டறியாத ஒரு குறுகிய சந்து. எச்சில் இலைகளும் சாக்கடைக் கும்பியும் மற்றும் ஆபாசங்களும் அங்கு நிறைந்து காணப்பட்டன. இச் சந்தில் குகை போன்று இருளடர்ந்த ஒரு வீட்டுக்குள் என் பார்வை சென்றது. அங்கே வெறுந் தரையில் பூரணக் கர்ப்பவதியாக காணப்பட்ட ஒரு பெண்மணி படுத்திருந்தாள்; பக்கத்திலே ஓர் ஆடவன் உட்கார்ந்து அழுதுகொண் டிருந்தான். ஒரு மூலையில் சுமார் ஒன்றரை வயதுள்ள ஒரு குழந்தை கிடந்தது. அன்று; குழந்தையன்று; குழந்தையின் உடல். ஏனெனில், அவ் வுடலினின்றும் உயிர் பிரிந்து சில மணி நேரம் ஆகியிருத்தல் வேண்டும்.

"தாயே! போதும், போதும். இந்தக் கோரக் காட்சியை என்னால் சகிக்க முடியவில்லை" என்று கூறி நான் கண்ணை மூடிக்கொண்டேன்.

அப்போது அம் மாதரசி கூறுவாள்; "குழந்தாய்! உண்மை தெரியாதவண்ணம் கண்களை மூடிக்கொள்ளாதே. நன்றாகப் பார்த்துத் தெரிந்துகொள். இதோ இந்தப் பெண் மரணாவஸ்தையில் இருக்கின்றாள். அவள் பூரண கர்ப்பிணி. ஆனால், சில தினங்களுக்கு முன்வரை ஆலையில் வேலை செய்து கொண்டிருந்தாள். அதன் பயனாகவே இவள் சுகப்பிரசவம் ஆவதற்கின்றி உயிர்விடப் போகிறாள். அதோ, பிணமாய்க் கிடக்கிறதே, அந்தக் குழந்தை ஆலையில் வேலைசெய்யப் போகும்போது அழாமலிருப்பதற்கென்று அவள் அதற்கு அபினி ஊட்டி வந்தாள். இனிமேல் அக்குழந்தை என்றும் யாருக்கும் அழுது தொந்தரை கொடாது! பக்கத்திலிருந்து புலம்பி அழுபவன் அவள் கணவன். அவனும் ஆலைத் தொழிலாளி. பாவம்! அவன் சோகக் கடலில் மூழ்கியிருக்கிறான். என்ன செய்வதென்று தெரியாமல் புலம்புகிறான். இதுவரை நீ பார்த்த மூன்று காட்சிகளும் உனக்குப் பரிதாபத்தை விளைக்கின்றன அல்லவா? ஆயினும் மைந்தா, விஸ்தாரமான இப் பரத கண்டம் முழுவதிலும் இத்தகைய பரிதாபக் காட்சிகளே எங்கெங்கும் நிறைந்திருக்கின்றன. அடுத்தாற்போல் கொஞ்சம் சந்தோஷகரமான இன்னொரு காட்சியைப் பார்."

நீண்ட நாளாய் மழை பெய்யாமல் காய்ந்து தீய்ந்து போனதுபோல் காணப்பட்ட ஒரு பிரதேசத்தின் நடுவே பனை ஓலையால் வேயப்பட்ட கூரைகளையுடைய சில குச்சுகள் தென்பட்டன. அக் குச்சுகளில் ஒன்றினுள்ளே என் பார்வை ஊடுருவிச் சென்றது. அங்கே இரண்டு பெணமணிகளும், ஐந்து அல்லது ஆறு பிராயமுடைய ஒரு சிறுவனும் இருந்தனர். பெண்மணிகளுள் ஒருத்தி கிழவி. அவள் கூடை ஒன்றைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு வெளியே புறப்பட ஆயத்தமாயிருந்தாள். சுமார் இருபத்தைந்து வயதுடைய மற்றொரு பெண் இராட்டினத்தில் நூல் நூற்றுக் கொண்டிருந்தாள். அக்குழந்தை அவளுடைய கழுத்தைக்

கட்டிக்கொண்டு, "அம்மா! அப்பா, பசிக்கிறது" என்று அழுதுகொண்டிருந்தது. அப் பெண்மணி, "என் கண்ணே! இதோ ஆயாள் நூல் எடுத்துக்கொண்டு போகிருள். இன்னும் சற்று நேரத்திற்கெல்லாம் கேழ்வரகு வாங்கிக் கொண்டு வருவாள். வந்ததும் கூழ் காய்ச்சித் தருகிறேன், அப்பா, அழாதே" என்று சமாதானம் செய்துகொண்டிருந்தாள்.

அன்னை பாரதி கூறுவாள்: "மைந்தா! இந்தப் பிரதேசத்தில் சில ஆண்டுகளாக மழையின்மையால் மக்கள் சொல்லொணு வறுமைக்காளாகித் தவித்துக்கொண்டிருந்தனர். இந்த இளம் பெண்ணின் கணவன் இரண்டாண்டுகளுக்கு முன்பு மலாய் நாட்டுக்கு ஓடிவிட்டான். இந்தப் பெண்ணின் தாயார் அக் கிழவி; இவ்விரண்டு மாதர்களும், இச் சிறுவனும் திக்கற்றவர்களாயினர். இந் நிலைமையில் சென்ற ஆண்டில் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் சில தொண்டர்கள் வந்து கதர் உற்பத்திசாலை ஒன்றை ஏற்படுத்திஞர்கள். அநாதையான இந்தப் பெண்கள் இப்போது நூல் நூற்றுப் பிழைத்து வருகிருர்கள். துன்ப இருள் சூழ்ந்திருந்த இவர்கள் குடிசையில் இராட்டினம் என்னும் காமதேனு இன்ப ஒளியின் ஒரு கிரணத்தைப் புகுத்தி யிருக்கிறது. அந்தக் கிழவி சென்ற வாரத்தில் நூற்ற நூலை எடுத்துக்கொண்டு கதர் உற்பத்திசாலைக்குச் செல்கிருள். அவள் வரும்போது புதிய பஞ்சும், பாக்கிக் கூலியைக் கொண்டு தானியமும் வாங்கி வருவாள். அவள் வந்த பின்னர்த்தான் இந்த வீட்டில் அன்று சாப்பாடு. ஆனல், குழந்தாய்! இந்த நாட்டிலே இவ்வாறு வறுமை இருள் குடிகொண்ட குடிசைகள் லட்சக்கணக்காக இருக்கின்றன. இவற்றில் மிகச் சிலவற்றிற்குமட்டுமே இராட்டினம் இதுவரை ஒளி தந்திருக்கிறது. ஏனெனில், பலவகையிலும் தாழ்வடைந்திருக்கும் என் மக்கள் தங்கள் சொந்த நன்மை எதுவென்பதையும் உணர்ந்துகொள்ளல் அரிதாயிருக்கிறது. இதுகாறும் மைந்தா, இந்நாட்டில் மிகப் பெரும்பான்மையோரான ஏழை எளியவர்களின் நிலைமையை விளக்கும்

காட்சிகள் சில காட்டினேன். இனி, மற்றவர்களின் நிலைமையையும் நீ பார்த்துத் தெரிந்துகொள்.''

இப்படி அன்னை கூறியதும் மேற்சொன்ன காட்சி மறைந்தது. ஒரு கிராமத்தின் மத்தியில் ஒரு பெரிய மச்சு வீடு காணப்பட்டது. அதனுள்ளே கூடத்தில் சுமார் நாற்பது வயதுள்ள ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்தால் பெரிய மனிதர் என்று தோன்றியது. ஆனால், அவர் தலையில் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு மடியில் கிடந்த ஒரு காகிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஆழ்ந்த சிந்தனையில் இருப்பவராகக் காணப்பட்டார். அடிக்கடி பெருமூச்சு விட்டார்.

அப்போது அன்னை கூறுவாள்: ''குழந்தாய், இவர் இவ்வூரில் பரம்பரையாக வந்த பெரிய மனிதர். பூஸ்திதி நிரம்ப உள்ள மிராசுதார். ஆனால், இவருடைய ஆஸ்தியின் விலை மதிப்பில் பாதி அளவுக்கு இவருக்குக் கடன் இருக்கிறது. கையில் மூலதனம் இல்லாததால் விவசாயம் திருப்திகரமாக நடைபெறுவதில்லை. வரவர விளைவு குறைந்து வருகிறது. இவ் வருஷத்தில் இவருக்கு நெல் விற்று வந்த தொகை நிலவரிக்குத்தான் சரியாக இருந்தது. ஆனால், நாலாவது கிஸ்திக்காக வைத்திருந்த தொகையைக் கடன்காரன் வந்து பிடிவாதம் செய்து வட்டிக்காக வாங்கிக்கொண்டு போய்விட்டான். இப்போது கிஸ்திக்குப் பணம் கட்ட வகை தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார். இந்தத் தொந்தரவுகளைப் பொறுத்து நிலத்தை விற்றுக் கடன் அடைத்து விடலாமாவென்று யோசிக்கிறார். ஆனால், பூர்விகமான நிலத்தை விற்கவும் மனம் வரவில்லை. எவ்வளவு கடன் இருக்கிறது, எவ்வளவு நிலம் விற்கவேண்டும் என்று கணக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இனி, அடுத்த காட்சியைப் பார்.''

மூன்றடுக்கு மெத்தை வீடு. அதில் நன்கு அலங்கரிக்கப்பட்ட விஸ்தாரமான ஒரு ஹாலில் சுமார் முப்பத்தைந்து வயதுடைய ஒரு கம்பீர புருஷர் நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவர் ஆங்கில நடையுடை பாவனைகளைக் கொண்டவராகத் தோன்றினார். கையில் ஒரு பத்திரிகையை விரித்துப்

பார்த்துக்கொண் டிருந்தார். அதிகக் கோபமடைந்தவராகக் காணப்பட்டார். கண்கள் சிவந்திருந்தன; மீசை துடித்தது. சற்று நேரம் பார்த்துவிட்டுப் பத்திரிகையைக் கிழித்துக் கசக்கிக் கீழே எறிந்தார்.

"மைந்தா, இவர் வீர மறவர் குலத்தில் தோன்றிய ஜமீன்தார். இவரது முன்னோர்கள் செய்துள்ள வீரதீரச் செயல்களையெல்லாம் சொல்வதெனில் இப்போது நேரமில்லை. இன்று இவரது வீரமெல்லாம் வேலைக்காரர்களை விரட்டி மிரட்டுவதுடன் சரி. அரசாங்கத்தாரிடமிருந்து ஒரு பெரிய பட்டம் பெறுவதற்கென்று, விருந்துகளிலும், அரசியல் கட்சிகளுக்குப் பண உதவி புரிவதிலும் பிறவற்றிலுமாகச் சுமார் இரண்டு லட்சம் ரூபாய் வரை கடன் வாங்கிச் செலவு செய்தார். ஆயினும் எதிர்பார்த்தபடி 'ராஜா' அல்லது 'ஸர்' பட்டம் ஒன்றும் இல்லாமல் கேவலம் ராவ்பகதூர் பட்டந்தான் இவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகையில் இவ்விவரத்தைக் கண்டதும் இவருக்கு ஏமாற்றமும், கோபமும் உண்டாகி யிருக்கின்றன" என்று அன்னை கூறினாள்.

ஒரு பெரிய நகரத்தின் மத்தியில் இருந்த ஒரு வீதியில் சாதாரணமான வீடு ஒன்று அடுத்தாற்போல் என் கண்முன் தோன்றியது. இரண்டு, மூன்று குடும்பங்கள் அவ்வீட்டில் வசித்தபடியால் ஜனக்கூட்டம் அதிகமாயிருந்தது. ஓர் அறையில் கதவைச் சார்த்தித் தாழிட்டுக்கொண்டு, தம்பதி போற் காணப்பட்ட ஓர் ஆடவனும் ஒரு ஸ்திரீயும் முகவாட்டத்துடன் உட்கார்ந்திருந்தனர். அந்தப் பெண்மணி கண்ணீர் விட்டுக்கொண்டே தன் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி ஒன்றைக் கழற்றிக் கொடுத்தாள்.

"குழந்தாய்! இதோ இந்த இளைஞன் பி. ஏ. பட்டம் பெற்றவன்; மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் உத்தியோகத்தில் அமர்ந்துள்ளான். இவன் பெற்றோர் தங்களுக்கிருந்த சொற்பப் பிதுரார்ஜித நிலத்தையும் விற்றுச் செலவு செய்து இவனைப் படிக்க வைத்தார்கள். எனவே, சொத்து கொஞ்சமும் இல்லை. குடும்பம் தாயாரும் குழந்தைகளும் உள்பட மொத்தம் ஐந்துபேர் கொண்டது. ஐம்பது ரூபாயைக் கொண்டு கஷ்ட ஜீவனம் நடத்தி வந்தனர்

ஆனால், துரதிர்ஷ்டவசமாகச் சென்ற மாதத்தில் இவன் மனைவிக்கு நோய் வந்துவிட்டது. மலேரியா ஜுரத்தினால் நிரம்பக் கஷ்டப்பட்டாள். வைத்தியரை அழைத்து வந்து காட்டியதிலும், பிறவற்றிலுமாகச் சுமார் இருபத்தைந்து ரூபாய் தொலைந்து போயிற்று. எனவே, இம் மாதத்தில் 15உக்குள் அரிசி முதலிய எல்லாச் சாமான்களும் ஆகிவிட்டன. வேறு வழியின்றி அடகு வைத்துக் கடன் வாங்கி வருவதற்காக மனையாளின் நகையைக் கேட்டான். அவள் பதில் கூறாது சங்கிலியைக் கழற்றிக் கொடுத்தாளாயினும், பாவம், தன்னையறியாமல் துக்கம் பொங்கிக் கண்ணீர் விடுகிறாள். இதைக் கண்ட அவள் கணவன் மனமிடிந்து நிற்கிறான்'' என்று கூறினாள் அன்னை.

''தாயே, இந்தத் துயரக் காட்சிகள் போதும்! போதும்! இப்பாரத நாட்டில் பிறந்த எவருக்கும், அவர் எந்த வகுப்பை, எந்த இனத்தைச் சேர்ந்தவராயினும், வாழ்க்கை பெரும்பாலும் துன்பமயமாகவே இருக்கிறதென்பதை அறிந்துகொண்டேன். போதும்! போதும்!'' என்று கூவினேன்.

''ஆயினும், மைந்தா, என் மக்களான உன் சகோதரர் இன்னும் விழித்துக்கொண்டார்களில்லையே. என் செய்வேன்? பெற்ற தாயை மறந்து, தங்களுடைய சொந்த நலத்தையும் மறந்து, ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்வதிலும், வகுப்புப் பூசல்களை வளர்ப்பதிலும் ஈடுபட்டிருக்கிறார்களே! தங்களில் ஒரு பெரும் பகுதியாரைத் 'தீண்டத் தகாதவர்' என்று ஒதுக்கி வைத்திருக்கிறார்களே. என் வயிற்றில் பிறந்த மக்களுக்குள் இத்தகைய வேற்றுமைகள் வளர்வதைக் காண்பதற்கு, அந்தோ! பாவியேன் என்ன தீவினைகள் செய்தேன்? குழந்தாய்! இன்னும் ஒரு காட்சியைப் பார்.''

இவ்வாறு அன்னை கூறியதும் இயற்கை எழிலும் இணையற்ற அமைதியும் குடிகொண்ட ஒரு காட்சி என் கண் முன்னே தோன்றியது. விசாலமான ஆறு ஒன்றின் கரையோரமாகப் பளிங்குபோன்ற தெள்ளிய நீர் மணலை அரித்து ஓடிக்கொண்டிருந்தது. அந்தக் கரைமீது செழித்து வளர்ந்திருந்த பூஞ்செடிகளுக் கிடையிடையே குடில்கள்போன்ற

சிறு சிறு கட்டிடங்கள் காணப்பட்டன. ஆற்றின் எதிர்க் கரையில் வானத்தை அளாவிய புகைபோக்கிகள் நிரம்ப உள்ள பெரியதொரு நகரம் காணப்பட்டது. சபர்மதி ஆசிர மத்தைப்பற்றி நான் படித்திருந்தது உடனே நினைவுக்கு வந்தது. 'ஓ! காந்தியடிகளின் புனித வாசஸ்தலம் இது' என் பதை உணர்ந்தேன். அக் குடில்களுக்கு நடுவண் இருந்த குடில் ஒன்றினுள் என் பார்வை சென்றது. ஆம்! ஆம்! உலகம் போற்றும் உத்தம புருஷரே அவர்! படங்களில் அவரை அடிக்கடி பார்த்திருக்கிறேன். சென்னைக்கு வந் திருந்தபோது ஒருமுறை நேரிலும் தரிசித்திருக்கிறேன்.

ஆனால் படங்களிலும், நேரில் பார்த்தபோதும் காணப் படாத ஓர் அற்புத ஜோதி அவருடைய முகத்தில் அப்போது விளங்குவதைக் கண்டேன். அந்த ஜோதியின் பிரபை அவரது சிரசைச் சுற்றி ஒரு மின்னொளி வட்டமாகத் திகழ்ந்துகொண் டிருந்தது. அடிகள் அப்போது இராட் டினத்தில் நூல் நூற்றுக்கொண்டிருந்தார். ஓ! இஃதென்ன புதுமை! முதலில் காணப்படாத ஓர் அற்புத ஒளிவடிவமான சில உருவங்கள், வடிவத்தில் மனிதரை ஒத்திருப்பினும் அவை பரு உடல்களான உருவங்களல்ல. அவர்கள் தேவர் கள்! அவர்களனைவரும் பயபக்தியுடன் அங்கு நின்றனர். சிலர் மகாத்மாவை வலம் வந்தனர். சிலர் அவரது அடி பணிந்தனர். இப்போது கூரையின் வழியாகச் சில புதிய உருவங்கள் கீழிறங்கி வருவதைப் பார்த்தேன். அவ் வுருவங் களும் அங்கிருந்த தேவர்களின் உருவங்களை ஒத்திருந்தனவா யினும் அவைபோல் ஒளி வடிவமாயிராமல் கருநிறங்கொண் டவையாயிருந்தன. ஆனால், அவை கீழிறங்கி மகாத்மாவை மூன்று முறை வலம் வந்து வணங்கியதும் கருமை நீங்கப் பெற்று மற்றத் தேவர்களைப் போன்ற ஒளி வடிவம் பெறு தலைக் கண்டேன். இந்தத் தெய்விகக் காட்சியினால் பரவச மடைந்திருந்த என் செவிகளில் அன்னையின் மொழிகள் இன்னமுத மெனப் பாய்ந்தன.

"குழந்தாய், என் போன்ற நாட்டரசிகள் பலர் சீருஞ் சிறப்புமுற்று விளங்குவதாய் முன்னம் கூறினேன். ஆனால், இதோ இந்த உத்தமப் புதல்வனை ஈன்றெடுத்து ஓர்

அம்சத்தில் உலகில் எனக்கு இணையானவர் எவருமிலரென்று இறுமாந்துள்ளேன். இன்றும் சரி, என்றும் சரி, இப்பூவுலகில் மனிதவுடல் தரித்து வந்த மகான்களுள் இவருக்கிணையாகச் சொல்லக்கூடியவர் எவருமில்லை. குழந்தாய், நான் அளித்த சூக்ஷ்ம திருஷ்டியின் துணைகொண்டு விண்ணவர்களும் அவரைத் தேடிவந்து தூய்மை பெற்றுப் போவதைப் பார்க்கிறாயல்லவா? அந்தோ! கருநிறமுடையவர்களாய் வருகிறார்களே, அவர்கள் விண்ணுலகில் தீய எண்ணங்களுக்கு இடம் கொடுத்ததனால் பாவிகளாய்ப் போனவர்கள். அவர்கள் இம்மகாத்மாவிடம் வந்து அவருடைய தரிசனத்தின் பகிமையினால் தங்கள் பாவம் தீர்ந்து தூய்மையடைந்து மீண்டும் ஒளி வடிவம் பெற்றுத் திரும்பிச் செல்கின்றனர். அத்தகைய மகாபுருஷன், மைந்தா, அதோ கண்ணீர் விடுவதைப் பார்.''

மகாத்மாவின் தேஜோமயமான வதனத்தில் கண்ணீர் பெருகி ஓடுவதைக் கண்டேன். என் உள்ளம் உருகிவிட்டது; என் கண்களிலும் நீர் பொங்கி வழிந்தது.

''கோடிக்கணக்கான தம் ஏழைச் சகோதரர்களின் துன்பங்களை எண்ணி எண்ணி அவர் கண்ணீர் பெருக்குகிறார். ஆயினும், அவர் நம்பிக்கை இழந்து விடவில்லை. அவர் முகத்தில் குடிகொண்டுள்ள புன்னகை ஆண்டவன் அருளில் அவருக்குள்ள அழியா நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது'' என்றாள் அன்னை.

அந்த அற்புதக் காட்சி மறைந்தது. நான் அக்கணமே அன்னையின் பாதகமலங்களில் விழுந்து, ''தாயே, உன் பொற்றிருவடிகள்மீது ஆணை! உன் மக்களின் துன்பங்களை நீக்குவதே என் வாழ்நாள் தொண்டாகக் கொள்வேன். உன்னை, மீண்டும் புராதன கீர்த்தியுடன் விளங்கச் செய்ய எல்லாவற்றையும் தியாகம் செய்வேன்!''

''மைந்தா, நீ கூறுவது சத்தியமா?''

''சத்தியம், சத்தியம் முக்காலும் சத்தியம்.''

''உனது தேசக் கைத்தொழில் விருத்திசெய்யப் பாடுபட்டு உனது தேசத்திலேயே கிடைக்கும் சாமான்களையே உபயோகிக்க முயல்வாயா?''

"அவ்வாறே பிரதிக்ஞை செய்கிறேன்."

"இந் நாட்டில் உன் ஏழைச் சகோதரர்களின் குடியைக் கெடுக்கும் குடித் தீமையை ஒழிக்கக் கங்கணம் கட்டிக்கொள் வாயா?"

"அவ்வாறே செய்வேன்."

"சாதி ஒற்றுமை, சமய ஒற்றுமையை நிலைநாட்டவும், தீண்டாமையைத் தொலைக்கவும் முயல்வாயா?"

"முயல்வேன், சத்தியம்."

இவ்வாறு, அந்த வெண்ணிலவிலே மலைச்சிகரத்திலே, பாரதத்தாயின் முன்னிலையிலே நான் பிரதிக்ஞை செய்து வாய் மூடவில்லை; அதற்குள் 'கிண், கிண், கிண்' என்ற மணிச் சத்தம் எங்கேயோ வெகு தூரத்திலிருந்து மந்த மாருதத்துடன் கலந்து வந்து என் செவிகளில் ஒலித்தது.

"ஐயோ, என்ன அநியாயம்! உட்கார்ந்தபடி தூங்கு கிறீர்களே! மணி பத்து அடித்துவிட்டதே! ரயில் வந்து விடுமே!" என்று என் மனைவி கூச்சல் போடும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டு எழுந்தேன். கடிகாரம் 'கிண்' என்று பத்தாம் முறையாக அடித்து மீண்டும் வழக்கம்போல் டக், டக் சத்தம் செய்யத் தொடங்கிற்று. 10-5க்கு ரயில். அந்த வண்டி தவறிவிட்டால் அன்று ஆபீஸ் கிடையாது. சாப்பிட்டு விட்டு வந்து நாற்காலியில் உட்கார்ந்து சட்டை போட்டுக் கொள்ள ஆரம்பித்தேன். உண்ட களைப்பினால் அப்படியே உறங்கிக்கொண் டிருந்துவிட்டேன். அவசர அவசரமாகக் கோட், அங்கவஸ்திரம், கழுத்து சுருக்கு, தோல் அரைக்கச்சை எல்லாவற்றையும் எடுத்துத் தோளில் போட்டுக்கொண்டு, பிரம்பையும், குல்லாவையும் ஒரு கையிலும், மனைவி கொடுத்த சிற்றுண்டிப் பொட்டணத்தையும் கூடாருத பாத் திரத்தில் காப்பியையும் மற்றொரு கையிலும் எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு ஓடினேன். ரயிலில் உட்கார்ந்து சரியாக உடை தரித்துக்கொண்டேன்.

அன்று சம்பள தினம். தீபாவளி இன்னும் இரண்டே இரண்டு நாள் கழிந்ததும் வரவிருந்தது. எனவே, அன்று மாலை வீடு திரும்பியபோது கீழ்க்கண்ட சாமான்களை வாங்கிக்கொண்டு போனேன். எனக்கு உடுத்திக்கொள்ள

ஒரு பீஸ் உயர்ந்த மல்; இரண்டு ஷர்ட்டுக்குச் சீமை ட்வில்; இரண்டு ஷர்ட்டுக்கு நாணயமான பட்டு; கோட்டுக்கு அல்பாகா துணி; வித விதமான அரை டஜன் கழுத்துச் சுருக்குகள்; குழந்தைகளுக்குப் பாவாடை; சட்டைக்குச் சீனத்துப் பட்டு; சீமைச் சீட்டி, பிளானல் முதலியன; ஐந்து ரூபாய்க்குப் பட்டாசுக் கட்டு, மத்தாப்பு தினுசுகள்; இவைகளை வைத்து எடுத்துக்கொண்டு போவதற்குப் பளபள வென்று ஜொலித்துக்கொண் டிருந்தப் புதுத் தினுசு பிரயாணப்பெட்டி; குழந்தைக்கு மா புட்டி; ஊதல் வாத்தியங்கள்; மற்றும் சில சில்லறைச் சாமான்கள். ஸ்டேஷனில் பஞ்சமச் சீனன் நின்றுகொண் டிருந்தான். அவனைச் சாமான்களை வீட்டுக்கு எடுத்துக்கொண்டு வரச் செய்தேன். 'தண்ணி போடு'வதற்காக அவனுக்கு இரண்டணுக் கொடுத்தேன். "ஐயோ! பஞ்சமனுக்கு அவ்வளவு கிட்டப் போய்விட்டீர்களே! ஸ்நானம் செய்தால்தான் சாதம் போடுவேன்" என்ருள் என் வாழ்க்கைத் துணைவி. வெந்நீர் போடச் சொல்லி முழுகினேன். நாற்காலியில் உட்கார்ந்தவண்ணம் கண்ட கனவு நினைவுக்கு வந்து கொஞ்சம் உறுத்தியது. "சீச்சி! இனிமேல் பத்திரிகை படிக்கக்கூடாது. உழவுக்கும் அக்னி ஹோத்திரத்துக்கும் பொருந்துமா? நமது உத்தியோகமெங்கே? பாரத மாதாவும் மகாத்மா காந்தியுமெங்கே?" என்று முணுமுணுத்துக் கொண்டேன்.

# அடிமையா? எஜமானா?

''கர்ப்பத்தடைப் பிரசாரத்தைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன?'' என்று அன்றொரு நாள் ஒரு நண்பர் என்னைக் கேட்டார்.

''இப்போது கர்ப்பத்தடைப் பிரசாரம் செய்கிறார்களே, அவர்களுடைய பெற்றோர்களுக்குக் கர்ப்பத்தடை இரகசியம் தெரிந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்'' என்று பதில் கூறினேன்.

இது வெறும் மழுப்பல் என்று நேயர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. உண்மை என்னவென்றால், ''இரு தரப்பிலும் நியாயம் ரொம்ப இருக்கிறது'' என்று எனக்குத் தோன்றும் ஒரு சில விஷயங்களில் இந்தக் கர்ப்பத்தடைப் பிரசாரமும் ஒன்று. அதை ஆதரிப்பவர்களின் கட்சியைக் கேட்கும்போது, ''சுயராஜ்யம், கியராஜ்யம் எல்லாம் எப்படியாவது போகட்டும்; கர்ப்பத்தடை இயக்கம் ஒன்றுதான் அவசியமானது'' என்று தோன்றுகிறது. அதை எதிர்ப்பவர்களின் கட்சியைக் கேட்கும்போதோ, ''பகவானே! ஆறறிவுள்ள மனிதர்கள் இத்தகைய முழுமூட இயக்கத்தையும் தோற்றுவிப்பார்களா!'' என்று ஆச்சரியம் உண்டாகிறது.

ஆனால், கர்ப்பத்தடைக்குச் சாதகமாகச் சொல்லப்படும் ஒரு வாதத்தைப்பற்றிமட்டும் 'வெட்டு ஒன்றும் துண்டு இரண்டு'மாக நான் அபிப்பிராயம் சொல்லக்கூடும்: ''உலகில் ஏற்கனவே தரித்திரம் அதிகமாயிருக்கிறது. ஜனத்தொகை விருத்தியாக ஆக, தரித்திரம் வளரும். எல்லாருக்கும் போதிய அளவு வாழ்க்கைச் சாதனங்கள் கிடைக்காமல் போகும். ஆகையால் ஜனத்தொகை அதிகமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்'' என்பதே.

பூமிதேவியின் பாரம் அதிகமாகும்போதெல்லாம் அவள் ஸ்ரீமந் நாராயணனிடம் போய் முறையிடுவதாகவும், அவர் பூவுலகில் அவதரித்து, இங்குள்ளவர்களை மேலுலகுக்கு அனுப்பிப் பூபாரத்தைக் குறைப்பதாகவும் புராணங்களில் நாம் படித்திருக்கிறோம். மேற்கூறிய தரித்திர வாதத்தைச் சொல்கிறவர்களோ, "முதலில் பாரத்தைப் பெருக்கவிட்டு அப்புறம் மகாவிஷ்ணுவை அழைப்பனேன்? பிரம்மாவினுடைய வேலைக்கே முட்டுக்கட்டை போட்டுவிடலாமே" என்கிறார்கள்!

ஜனத்தொகை பெருகினால் தரித்திரமும் வளர்ந்தே தீர வேண்டுமென்பது கட்டாயமா? "ஒரு நாளுமில்லை" என்று நவீன இயந்திர சாஸ்திரிகள் அழுத்தமாய்ப் பதில் சொல்கிறார்கள்.

மனிதன் அறிவுடையவனாயிருந்தால், ஜனத்தொகைப் பெருக்கத்தை ஐசுவரியப் பெருக்கத்துக்குச் சாதனமாக்கிக் கொள்ளலாம். மனிதன் மூடனாயிருந்தால் ஜனத்தொகை எவ்வளவு குறைந்தாலும் தரித்திரம் தாண்டவமாடிக் கொண்டுதான் இருக்கும்.

வியாபாரம் செய்வோர் அனைவரும் நன்கறிந்துள்ள சாதாரண உண்மை யொன்றிருக்கிறது ரூபாய்க்கு ஒரு தம்படி நஷ்டத்துக்கு ஒருவன் வியாபாரம் செய்தால், அவன் எவ்வளவு லட்சக்கணக்கான ரூபாய் வியாபாரம் நடத்தினாலும், நஷ்டந்தான் ஏற்படும். வியாபாரம் பெருகப் பெருக நஷ்டமும் பெருகிக்கொண்டு வரும். அதே மாதிரி ரூபாய்க்கு ஒரு தம்படி லாபமாவது கிடைக்குமாறு வியாபாரம் செய்தால், வியாபாரம் பெருகப் பெருக, லாபமும் பெருகி வரும்.

குழந்தைகளின் உற்பத்தி தற்போது இவ்வுலகில் நஷ்ட வியாபாரமா யிருந்து வருகிறது. எவ்வளவு குறைவாகக் குழந்தைகள் உற்பத்தியானாலும் தரித்திரம் இல்லாமற் போகாது.

குழந்தைகளின் உற்பத்தியை லாபகரமான வியாபாரமாகச் செய்துகொள்ளுதல் சாத்தியம். மனிதன் அறிவுடன்

காரியம் செய்தால் ஜனத்தொகை அதிகமாக ஆக, ஐசுவரியமும் பெருகுமாறு செய்யலாம்.

ஒரு கமிஷன் வியாபாரியை எடுத்துக்கொள்வோம். அவன் எவ்வளவுக்கு அதிகமாகச் சாமான்களை விற்கிருனே, அவ்வளவுக்கு அவனுக்குக் கமிஷன் விகிதம் அதிகம் என்பதாக வைத்துக்கொள்வோம். அதாவது 100 ரூபாய் வரையில், ரூபாய்க்குக் காலணு கமிஷன்; 1000 ரூபாய் வரையில் ரூபாய்க்கு அரையணு கமிஷன். அதற்குமேல் ரூபாய்க்கு ஓரணு கமிஷன். இத்தகைய ஏற்பாட்டன்கீழ், மொத்த விற்பனை அதிகமாக ஆக மொத்த லாபம் பன்மடங்கு பெருகிக்கொண் டிருக்குமல்லவா? ரூ. 100-க்கு ரூ.1-9-0-ம், ரூ. 1000-த்துக்கு ரூ. 31-4-0-ம் இப்படியே மேலும் பெருகிக் கொண்டு போகும். இயந்திரமானது மனிதர்களுடைய பொருள் உற்பத்திச் சக்தியை இந்த முறையில் பெருக்குகிறது என்று அறிஞர்கள் சொல்கிருர்கள்.

ஒருவன் தேகத்தால்மட்டும் உழைத்துப் பாடுபட்டால் ஒரு நாளில் எவ்வளவு பொருள் உற்பத்தி செய்யலாமோ, அதைப்போல் 10 பேர் சேர்ந்து உழைத்தால் 10 மடங்கு உற்பத்தி செய்யலாம். 100 பேர் சேர்ந்து உழைத்தாலும் 100 மடங்குதான் உற்பத்தி செய்யலாம்.

இயந்திரத்தின் உதவிகொண்டு உழைப்பது இப்படியல்ல. ஒருவன் இயந்திரத்திஞல் உற்பத்தி செய்வதைவிட 10 பேர் சேர்ந்து 20 மடங்கு உற்பத்தி செய்யலாம். 100 பேர் சேர்ந்தால் 500 மடங்கு உற்பத்தி செய்யலாம். இவ்வாறே சேர்ந்து வேலை செய்வோர் அதிகமாக ஆக, இயந்திரத்தின் பொருள் உற்பத்தி விகிதமும் அதிகமாகிக்கொண்டே போகும். இந்நிலைமையில் எவ்வளவுக்கெவ்வளவு உலகில் ஜனத்தொகை பெருகுகின்றதோ, அவ்வளவுக்கு வாழ்க்கை வசதிகளும் பொதுவாகச் சுபிக்ஷமும் பன்மடங்கு பெருகிக் கொண்டு போகவேண்டுமல்லவா?

"எல்லாம் சரிதான்; அது அப்படியிருக்கலாம், இது இப்படியிருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண் டிருப்பதில் பயன் என்ன? தற்போது உலகில் ஒரு பக்கத்தில் இயந்திரங்களும், மற்ெருரு பக்கத்தில் ஜனத்தொகையும் அதிகமாகிக்

கொண்டுதானே வருகின்றன? இவைகளின் பலனாய், உலகில் சுபிக்ஷம் அதிகமாகக் காணோமே? தரித்திரமும், துயரமும் மிகுதியாகி வருவதைத்தானே பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறோம்?'' என்று கேட்டால், உண்மைதான்; ஆனால், இந்த விந்தையான துயரகரமான நிலைமைக்குக் காரணம் என்ன வென்று பார்ப்போம்.

* * * *

''கடவுள் உலகைப் படைத்தார்; மனிதன் அதை நரக மாக்குகிறான்'' என்று ஒரு பழமொழி உண்டு. தன்னுடைய நன்மைக்காக ஏற்படும் ஒவ்வொன்றையும் தனது தீமைக் குரியதாகச் செய்துகொள்ளும் வியப்பான சக்தி மனிதனிடம் இருக்கிறது.

மதம் இதற்குப் பெரியதோர் உதாரணமாகும். தெய் வானுக்ரஹம் பெற்ற மகாபுருஷர்கள் மனிதனுடைய நற் கதிக்காக மதத்தை ஏற்படுத்தினார்கள். அதைத் தன்னுடைய துர்க்கதிக்குரியதாக மனிதன் செய்துகொண்டிருக்கிறான். மதத்தின் பெயரால் எத்தனை அநீதிகள், எத்தனை கொடு மைகள், எத்தனை யுத்தங்கள், எத்தனை சித்திரவதைகள், இவ்வளவு இரக்கமற்ற செயல்கள் உலகிலே நடைபெற்றிருக் கின்றன!

தற்காலத்து விஞ்ஞான முனிவர்கள் தங்களுடைய ஆராய்ச்சி யக்ஞத்திலிருந்து இயந்திர பூதத்தைச் சிருஷ்டி செய்தார்கள். அப்பூதம் மனிதன் இட்ட கட்டளையை யெல்லாம் நிறைவேற்றவல்லது. மனிதன் அறிவுடைய வனாயின் தன்னுடைய உழைப்பில் பெரும் பகுதியை அதன் மேல் போட்டுவிட்டு, உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்னும் மூன்றுவகை வேலைகளினின்றும் விடுதலை பெற்று, மேலும் மேலும் அறிவு வளர்ச்சியிலும், கலைகளின் இன்பத்திலும் ஈடுபட்டுப் பூவுலகில் தேவ வாழ்க்கை நடத் தலாம்.

தனி மனிதன் தன்னுடைய சொந்தத் தேக உழைப்பினால் எவ்வளவு பொருள் உற்பத்தி செய்யக்கூடுமோ அதைப் போல் 1500 மடங்கு இப்போது இயந்திரங்களின் உதவி யினால் உற்பத்தி செய்யலாமென்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

எனவே, இயந்திரங்களைச் சரியாய்ப் பயன்படுத்திக்கொண்டால், மனித சமூகம் முன்னைவிட இந்நாளில் 1500 மடங்கு அதிக சுக சௌகரியத்துடன் வாழ்க்கை நடத்தக்கூடும்!

ஆனால், மனிதனுடைய சாமர்த்தியத்தை என்னவென்று கூறுவது? அதே இயந்திரத்தைக்கொண்டு தன்னைத்தான் அழித்துக்கொள்ள அவன் அதிதீவிரமாக முயன்று வருகிறான்! இம்முயற்சியில் அவன் வெற்றி அடைவானா, அல்லது நல்லறிவு பெறுவானா என்பதைப் பொறுத்து மனித சமூகத்தின் வருங்கால வாழ்வு அமையப்போகின்றது.

மகா வலிவுபெற்ற இயந்திர பூதத்தை மனித சமூகம் முழுவதற்கும் தொண்டு செய்யப் பண்ணாமல், மனிதனுடைய உடைமையாகச் செய்ததுதான் உலகின் தற்போதைய நிலைமைக்கு அடிப்படையான காரணமாகும்.

''கொண்டா வேலை!'' என்று இயந்திர பூதம் கதறுகின்றது. ''மக்கட்குலத்துக்கு ஊழியம் செய்'' என்று கட்டளையிட்டால் அதற்குத் தகுதியான வேலை கொடுத்ததாகும். அதைவிட்டு, ''எனக்குப் பணிவிடை செய்'' என்று அதை ஏவினால், முதலில் கொஞ்ச நாள் செய்கின்றது. அப்புறம் அதற்குப் போதிய வேலை கொடுக்க அவனால் முடியாமல் போகிறது. அப்போது மனிதனை அடிமைகொள்ளும் சக்தி இயந்திரத்துக்கு உண்டாகிவிடுகிறது.

இயந்திரங்களைத் தங்கள் சொந்த உடைமையாக்கிக் கொண்டவர்கள் முதலாளிகள் எனப்படுவர். இவர்களுடைய நோக்கமெல்லாம் தங்களுடைய சொந்தப் பண லாபமே. ஜனங்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளை இயந்திரங்களைக்கொண்டு எப்படி அதிகமாக உற்பத்தி செய்யலாம் என்று அவர்கள் யோசிப்பதில்லை. இயந்திரங்களை எந்த வழியில் உபயோகப்படுத்தினால் தங்களிடம் பணம் அதிகமாய்ச் சேரும் என்றே அவர்கள் சிந்திக்கிறார்கள்.

எனவே, எவ்வளவு குறைந்த ஆள்களைக்கொண்டு குறைவான சம்பளத்தில் அதிகமான பொருள்களை உற்பத்தி செய்யக்கூடுமோ, அவ்வாறு செய்ய முயற்சிக்கிறார்கள். இந்த முறையினால் முதலில் கொஞ்ச காலம் அவர்களிடம் பணம் சேர்கிறது. ஆனால், சில நாளைக்குப் பிறகு, இயந்திரம்

செய்து குவிக்கும் சாமான்களை வாங்குவதற்கு மற்றவர்களிடம் பணம் இல்லாமல் போகிறது. எனவே, முதலாளிகள் சாமான்களின் உற்பத்தியைக் குறைக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்! இவ்வாறுதான், இயந்திரம் மனித வாழ்வுக்குரிய வசதிகளைப் பெருக்குவதற்குப் பதிலாக ஏற்கனவே உள்ள வசதிகளையும் அபகரித்துவிடுகிறது!

ஏராளமான பூமியும், இயற்கைவளமும் பொருந்தியிருப்பதோடு, அபரிமிதமான இயந்திர வளர்ச்சியும் பெற்றுள்ள அமெரிக்காவில் இன்று பசியும், பட்டினியும், தரித்திரமும் காணப்படுகின்றனவென்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியமல்லவா?

அந்நாட்டில் சமீபத்தில் 300 இயந்திர சாஸ்திரிகள் சேர்ந்து ஒரு பெரிய ஆராய்ச்சி நடத்தினார்கள். அவ்வாராய்ச்சியிலிருந்து, அமெரிக்காவில் உழைக்கும் சக்தியுள்ள மக்கள் அனைவரும் இயந்திரத்தின் உதவிகொண்டு வேலை செய்தால், ஒவ்வொரு குடும்பமும் வருஷம் ஒன்றுக்கு ரூ. 75,000 பெறுமான வாழ்க்கை வசதிகளைப் பெறலாமென்று தெரியவந்தது.

ஆனால் இதுவரையில் ரொம்ப சுபிக்ஷமான நாட்களில் கூட அந்நாட்டுத் தொழிலாளர் குடும்பங்கள் வருஷத்தில் ரூ. 3000-த்துக்கு மேல் பெற்றது கிடையாது.

இங்கிலாந்தின் நிலைமையும் ஏறக்குறைய இப்படித்தான். அங்கும் வேலை செய்யக்கூடிய மனிதர்கள் எல்லாரும் வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டால் இங்கிலாந்தின் தேசீய வருமானம் இப்போதைப் போல் பத்து மடங்கு அதிகமாகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

முதலாளி முறையின்கீழ் இயந்திர வளர்ச்சி அபிவிருத்தியுற்றிருக்கும் நாடுகளில் இயந்திரத்தின் சக்தியும், மனிதனுடைய உழைப்பும் இரண்டு வழிகளில் வீண் போகின்றன. (1) முதலாளிகள் பண லாபத்துக்காக இயந்திரத்தைப் பயன்படுத்த விரும்புவதால், வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு ஆளாவோர் ஒரு புறம். (2) முதலாளி முறைக்கு

இன்றியமையாதவையான வீண் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் மற்றொரு புறம்.

இங்கிலாந்தில் வேலை செய்ய விருப்பமிருந்தும், வேலை கிடைக்காமல் சும்மா இருப்பவர்கள் எல்லாரும் இயந்திரங்களில் வேலை செய்தால் வருஷத்தில் 200 கோடி பவுன் (3000 கோடி ரூபாய்) பெறுமான சாமான்கள் உற்பத்தி செய்யக் கூடுமாம்!

தரைப்படை, கப்பற்படை, ஆகாயப் படைகளில் ஊழியம் செய்பவர்கள், யுத்த தளவாடங்கள் செய்வதில் ஈடுபட்டவர்கள், இவர்களுடைய உழைப்பெல்லாம் வீண் போவதேயாகும்.

முதலாளி முறையில் ஒரு சிலர் பெரும் பணக்காரர் ஆகிறார்கள். இவர்களுடைய மாளிகையில் குற்றேவல் செய்து பிழைப்போரும் இவர்களுக்காகச் சுகபோகப் பொருள்களை உற்பத்தி செய்வோரும் லட்சக்கணக்கானவர்கள். இவர்களுடைய உழைப்பெல்லாமும் வீண் போவதேயாகும்.

இவ்வாறு உலகிலிருந்து வறுமையை அடியோடு ஓட்டி, மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு அளித்திருக்கக்கூடிய இயந்திரத்தைக்கொண்டு மனிதன் ஒருபுறத்தில் ஆத்மாவை அழிக்கக்கூடிய சுகபோகத்தையும், சோம்பலையும் மற்றொரு புறத்தில் தரித்திரத்தையும், துயரத்தையும், அடிமைப் புத்தியையும் வளர்த்துக்கொண் டிருக்கிறான்.

ஒரு பக்கம் வேலையில்லையென்ற கூக்குரல்; மற்றொரு பக்கம் தொழிலாளிகள் பத்துமணி நேரம் சக்கையாகப் பிழிந்து வேலை வாங்கப்படுதல்; ஒரு பக்கம் பாங்கிலே ஏராளமாள தங்கம் குவிந்திருத்தல்; மற்றொரு பக்கம் குடியானவனுக்கு 100-க்கு 18 வீதம் வட்டிக்குக்கூடப் பணங் கிடைக்காதிருத்தல்; ஒரு பக்கம் பசியும், பட்டினியும், மற்றொரு பக்கம் 'தானியங்களை வாங்குவாரில்லையே' என்ற ஓலம் ஆகிய இந்த முரண்பாடுகள் எல்லாம் இயந்திரத்தைத் தனி மனிதன் சொந்தமாக்கிக்கொண்டதன் பலனேயாகும். இது எப்படிச் சாத்தியமாயிற்று? "தனி மனிதன் இஷ்டம்போல் பணம் சேர்த்துக்கொள்ளலாம்" என்னும்

ஏற்பாடு இருப்பதனுல்தான். இவ் வேற்பாடு மாறி, "மனித சமூகத்தின் வருமானம் முழுதும் மக்கள் அனைவருக்கும் சமமாகப் பங்கிடப்படும்" என்ற ஏற்பாடு அமலுக்கு வரும் போது, இயந்திரபூதம் மனித சமூகத்தின் உண்மை ஊழியனுகும்.

* * * *

இயந்திரத்தின் துர் உபயோகத்தினுல் விளைந்த தீமைகளைக் கண்டு மனன் சகியாத அறிஞர்கள், மகான்கள் சிலர், "இயந்திரத்தையே ஒழித்துவிடவேண்டும்" என்று சொல்கிருர்கள். இப்படிச் செய்வோர் மேனுட்டிலும் கீழ் நாட்டிலும் உண்டு. இதற்கு ஆட்சேபங்கள் இரண்டு இருக்கின்றன: முதலாவது, ஒரு பொருளின் துர் உபயோகத்தினுல் விளைந்த தீமைகளை அதன்பேரிலேயே சுமத்துவது தவறு. ரயிலில் மூன்ரும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்கிரேம். அதன் கஷ்டங்களை அநுபவிக்கும்போது, 'ஐயோ! இந்தப் பாழும் ரயிலை ஏன்தான் உண்டாக்கினுன்!' என்று நமக்குத் தோன்றுகிறது. இத்தகைய மனேநிலையில், 'ரயிலே ஒழிந்து விட்டால் என்ன?' என்று தோன்றுவதும் இயற்கையே யாகும். ஆனுல், இது நியாயமாகாது. மூன்ரும் வகுப்புத் தொல்லைகளை ஒழிக்க முயலுவதுதான் நியாயம். ரயிலைப் போலத்தான் மற்ற எல்லா இயந்திரமும்.

இரண்டாவது ஆட்சேபம், இயந்திரத்தை நாம் ஒழிக்க விரும்பினுலும் அது சாத்தியமில்லாத காரியம் என்பதே.

முரட்டுக் குதிரையின்மேல் ஏறி உட்கார்ந்தாகி விட்டது. குதிரை தலைகால் தெரியாமல் தறிகெட்டு ஓடுகிறது. அப்போது கடிவாளத்தைக் கையிலிருந்து விட்டு விட்டு, "ஐயோ! எனக்குக் குதிரை வேண்டாம்!" என்று கூச்சலிடுவதில் என்ன பயன்? அப்படிச் செய்தால் கீழே விழுந்து உயிர் துறக்க வேண்டியதுதான். குதிரைமேல் ஏறியவன் புத்திசாலியானுல், கடிவாளத்தைக் கெட்டியாய் இழுத்துப் பிடித்துத் தன்னுடைய பலம் முழுவதையும் பிரயோகித்துக் குதிரையை அடக்கிப் பத்திரமான இடம் போய்ச் சேர முயலுவான்.

இயத்திரக் குதிரைமீதிருந்து இப்போது மனிதன்

கீழிறங்குவது சாத்தியமில்லை. இறங்க முயன்ருல் நாசந்தான். அதை இழுத்துப் பிடித்து நல்லவழியில் செலுத்துவதுதான் முறை.

விஞ்ஞான முனிவர்கள் சிருஷ்டித்த இயந்திர பூதம் அழியா வரம் பெற்றதென்பது என்னுடைய அபிப்பிராயம். அதை மனித சமூகம் அடிமை கொள்ளாவிட்டால், அது மனித சமூகத்தை அடிமை கொண்டுவிடும்.

நீங்களும், நானும் "இயந்திரம் வேண்டாம்" என்று சொல்லலாம். ஆனல், இயந்திரத்தின் சொந்தக்காரர்களான முதலாளிகள் அதை ஒப்புக்கொள்ளப் போவதில்லை. நாம், "இயந்திரம் வேண்டாம், வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டிருக்கையில் அவர்கள் இயந்திரத்தின் துர் உபயோகத்தை அதிகப்படுத்திக்கொண்டே போவார்கள்.

இந்தியாவிலே மகத்தான தேசபக்தி அஸ்திவாரத்தின் மேல் கதர் இயக்கம் நிர்மாணிக்கப்பட்டது. ஆயினும் என்ன பயன்? ஜப்பானியர் பஞ்சு விலைக்கு இங்கே துணி கொண்டு வந்து விற்று அந்த அஸ்திவாரத்தைத் தகர்க்கிருர்கள். லங்காஷயர்க்காரர்கள் பம்பாய் மோடிகளுடன் உடன்படிக்கை செய்துகொண்டு கதரின் அஸ்திவாரத்தைப் பிளக்கிருர்கள். கதர் இயக்கம் இந்தமட்டும் இருந்து வருவதுதான் பெரிய அதிசயம். மகாத்மாவின் ஆத்ம சக்திதான் அதைத் தாங்கி நிற்கிறது என்பதில் சந்தேகமில்லை.

* * * *

'கதர்' என்ற பிரஸ்தாபம் வந்ததும் நேயர்களுடைய நெஞ்சிலிருந்த கேள்வி வெளியில் வருகிறது. "இயந்திரந்தான் வேண்டும்; அதைப் பொது உடைமையாக்குவதன் மூலம் மனித சமூகம் நல்வாழ்வு பெறலாமென்னும் பக்ஷத்தில் இந்தக் கதர் இயக்கம் எதற்காக? கை ராட்டினத்தைத் தாங்கி நிற்பதற்கு ஏன் இந்தப் பிரம்மப் பிரயத்தனம்?"

கதர் இயக்கம் நமது தேசத்தில் இப்போது ஏன் வேண்டும் என்பதற்கு முக்கியமான காரணம் இருக்கிறது.

இயந்திரம் சரியாக உபயோகிக்கப்படுகிற புது உலகத்தில் மனிதர்கள் தேவர்களைப்போல் வாழலாம் என்பது உண்மையே. ஆனல், அந்தப் புது உலகம் நாளைக்கு ஏற்பட்டு

விடப்போவதில்லை. மனித சமூகத்தைச் சூழ்ந்துள்ள அறியாமை இருள் எப்போது நீங்குமென்று சொல்ல முடியாது.

உலகத்தில் தற்போது ருஷியா தேசம் ஒன்றில்தான் அப் புது உலகைச் சிருஷ்டிக்க முயற்சி நடந்து வருகிறது. மற்ற நாடுகளில் உள்ள இயந்திர முதலாளிகள் பாதிப்பேர் மூடத்தனத்தினாலும், பாதிப்பேர் குறுகிய சுயநல திருஷ்டியாலும் அம் முயற்சிக்கு இடையூறு விளைவித்து வருகிறார்கள்.

இயந்திர வளர்ச்சி பூரணமாய்ப் பெற்று, அரசியல் சுதந்திரமும் உள்ள நாடுகளிலேயே இந்தக் கதியென்றால், நமது தேசத்தில் சமதர்ம ஆட்சி நாளைக்கோ, மறுநாளோ ஏற்பட்டுவிடப் போவதில்லை.

எனவே, அத்தகைய சமதர்ம ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் வரையில் நமது நாட்டு ஏழை மக்கள் உயிரோடிருக்க வேண்டுமல்லவா?

''மேலைக்கு வாழ்க்கைப்படுகிறேன், கழுத்தே! சுகமாயிரு'' என்று சொன்னால், ஒருவேளை கழுத்து கேட்டாலும் கேட்கும். ஆனால் வயிறு கேட்காது; உயிரும் நிற்காது.

''புது உலகம் வரும்போது வரட்டும்; அதற்காகப் பாடு படுவோம். ஆனால், அதுவரையில் ஏழைகளுக்கு அரை வயிறு உணவாவது கிடைக்கட்டும்'' என்ற கருத்துடனேதான் நான் கதர் அணிகிறேன். அதே காரணத்தினால்தான் மற்றவர்களையும் கதரணியும்படி கேட்டுக்கொள்கிறேன்.

# ஓர் அநுபவம்

"தற்புகழ்ச்சி, பரநிந்தனை என்னும் இரண்டு குறைகளும் என்னிடம் அணுவளவும் கிடையாதென்பது நீர் அறிந்ததே. அக் குறைகள் என்னிடம் உண்டு என்று யாரேனும் சொன்னால் அவன் சுத்தக் கெட்டவன், அயோக்கியன் என்பதில் சந்தேகமில்லை" என்று என் நண்பர் சகோதரப் பத்திரிகாசிரியர் கூறினார்.

"என் விஷயம் தெரியுமல்லவா! புகழ்ச்சி என்பது எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. நான் எழுதிய விஷயம் ஏதாவது நன்றாயிருக்கிறது என்று யாராவது சொல்லிவிட்டால் எனக்குக் கெட்ட கோபம் வந்துவிடும். ஒரு தடவை ஒரு பத்திரிகைப் பிரியர் என்னிடம் வந்து நான் எழுதிய ஒரு கதை நன்றாயிருக்கிறதென்று சொல்லிவிட்டார். உடனே நான் அன்றுமுதல் ஒருவாரம் வரை உபவாசம் இருப்பதென்று உறுதிகொண்டேன். அன்றைய தினம் வீட்டில் வெங்காய சாம்பார் சமையலென்று தெரிந்த பிறகு தான் அந்த உறுதியை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிருந்தது" என்று கூறினேன்.

பத்திரிகைத் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்தால், பத்திரிகைகளையும் கட்டுரைகளையும்பற்றித்தான் பேசுவார்கள் என்று நேயர்களுக்குச் சொல்லவேண்டியதில்லை.

அந்த நண்பர் சிறிது ஆத்திரத்துடன், "சரிதான். இவ்வளவு சொல்லுகிறீரே, சென்ற ஒரு வருஷ காலத்தில் நான் எழுதின எக்கட்டுரையையும் பற்றி யாரிடமும் அபிப்பிராயம் கேட்டது கிடையாது. உம்மால் அப்படிச் சொல்ல முடியுமா?" என்றார்.

"பேஷாகச் சொல்ல முடியும்! ஏன் முடியாது?" என்று பதில் சொன்னேன்.

''இந்த நல்ல புத்தி உமக்கு எப்போது ஏற்பட்டது?'' என்று வினவினார்

சொல்லுகிறேன் கேளும்: பன்னிரண்டு வருஷத்துக்கு முன்னால் நான் காங்கிரஸ் தொண்டனா யிருந்தபோது சென்னையிலிருந்து ஒரு பிரபல தேசியத் தலைவர் நான் காங்கிரஸ் வேலை செய்துகொண்டிருந்த கிராமத்திற்கு வந்திருந்தார். அவருடைய விஜயத்தை முன்னிட்டு ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்தோம். தலைவர் பிரசங்கம் செய்தார். அவர் பேசியது அங்கே கூடியிருந்த கிராமவாசி களுக்கு ஒரு வார்த்தையாவது புரியவில்லை. பிரசங்கம் முடிந்து தலைவர் மேடையிலிருந்து இறங்கியதும் பக்கத்தி லிருந்த எங்களைப் பார்த்து, 'பிரசங்கம் எப்படி இருந்தது?' என்று கேட்டார். நாங்கள் சிரிப்பை அடக்குவதே பிரம்மப் பிரயத்தனமா யிருந்தபடியால் பேசாமலிருந்தோம். 'நான் நன்றாகப் பேசினேனில்லையா? இதற்குமுன் வேறு யாராவது இவ்வளவு நன்றாக இங்கே பேசியிருக்கிறார்களா?' என்று அவர் கேட்டுக்கொண்டே போனார். 'ஆமாம், ஆமாம்; இல்லை, இல்லை' என்று ஒருவாறு பதில் சொல்லிச் சமாளித் தோம்.

இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் நான் எழுதும் விஷயங் களைப்பற்றி யாரிடமும் அபிப்பிராயம் கேட்பதில்லையென்று உறுதியாகத் தீர்மானித்துக்கொண்டேன்.''

"அப்படியானால் உம் கட்டுரைகளைப்பற்றிப் பிறர் அபிப்பிராயம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசை உம் மனத்தில்கூடக் கிடையாதா?'' என்று கேட்டார்.

''ஆஹா, அது வேறு விஷயம். ஆனால் அந்த ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கு நான் வாயைத் திறக்க வேண்டிய அவசியமில்லை. கேட்காமலே அபிப்பிராயம் சொல்லுகிறவர்கள்தான் நம் நாட்டில் எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்களே. அது இருக்கட்டும்; உம்முடைய விஷயம் என்ன?'' என்று கேட்டேன்.

''ஒரு வருஷத்துக்கு முன்புவரை பிறருடைய அபிப் பிராயம் தெரிந்துகொள்வதில் எனக்கு ரொம்ப பிரமை இருந்தது. அப்போது எனக்கு ஏற்பட்ட ஓர் அநுபவத்தி

லிருந்து அந்தப் பிரமை அடியோடு நீங்கிற்று. இப்போதெல் லாம் பிறர் அபிப்பிராயத்தை நான் பொருட்படுத்துவதே இல்லை'' என்றார் நண்பர்.

''ஆமாம்; இந்த அபிப்பிராயம் என்னும் வஸ்து ஒரு பெரிய நம்பத்தகாத விஷயம்தான். சென்ற வாரத்தில் ஒரு பத்திரிகை நேயர் அவசரம் அவசரமாகக் காரியாலயத்துக்கு வந்து, 'ஸார்!.........போன வார இதழ் மிகவும் நன்றாயிருந் தது. ஆனால், இந்த வாரத்து இதழ் அவ்வளவு ரஸிக்க வில்லையே?' என்று தமது அருமையான அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். நான் அவரிடம் அன்றையத் தபாலில் அப் பொழுதுதான் வந்த ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினேன். அதில், 'தங்கள் பத்திரிகையின் சென்ற இதழ் சுமாராய்த் தான் இருந்தது. ஆனால், இந்த வாரத்து இதழ் ஒண்ணும் நம்பர்!' என்று எழுதியிருந்தது. பத்திரிகை நேயர், 'சரிதான், உலகம் பலவிதம்' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். ஆனால் அதெல்லாமிருக்கட்டும், உம்முடைய அநுபவத்தைப்பற்றிச் சொன்னீரே, அது என்ன?''

''நல்ல வேளை: எங்கே அதை மறந்துவிட்டு உம்முடைய கதையையே சொல்லிக்கொண்டு போகப் போகிறீரோ வென்று பயந்தேன்'' என்று கூறி, நண்பர் ஒரு கனைப்புக் கனைத்துவிட்டுச் சொல்லத் தொடங்கினார்:

தமிழ்நாட்டில் நல்ல நாடகம் ஒன்று நடப்பது குதிரைக் கொம்பைவிட அருமை என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா? ஆகையினால்தான் கொஞ்ச காலத்துக்குமுன் சுமாராக நன்றாயிருக்கிறதென்று நான் கருதிய ஒரு நாடகத் தின்போது எனக்குப் பின் வரிசையிலிருந்த ஒரு இளைஞனின் சேஷ்டைகள் எனக்குப் பெரிதும் ஆச்சரியத்தை அளித்தன.

நாடகம் நடந்து வருகையில் அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்ட அபிப்ராயங்கள் என் செவிகளைத் துளைத்தன. ''சீ!'' ''தரித்திரம்!'' ''மூதேவி!'' ''சிரிப்பென்ன வேண்டியிருக்கிறது?'' ''மூஞ்சியைப் பாரு!'' ''பாட்டு வேறேயா; சுத்த அபஸ்வரம்!'' ''தமிழ் நாடகம் ரொம்பக் கெட்டுப் போச்சு!'' ''நடிகர்களே கிடையாது!''

''இரண்டு ரூபாய் தண்டம்!'' "இனிமேல் வருவதேயில்லை!'' என்று இம்மாதிரியெல்லாம் அவன் கூறிவந்ததைக் கேட்கக் கேட்க, 'சுமாராய் நல்லதாக இருக்கிறது என்று நாம் நினைக்கும் இந்த நாடகத்திற்கே இவ்வளவு வசைமொழி கூறும் இந்த மகாரஸிகன் யார்?'' என்று தெரிந்துகொள்ளும் ஆவல் எனக்கு உண்டாயிற்று. அடிக்கடி அவனைத் திரும்பிப் பார்க்கலானேன். அவன் சுமார் இருபது வயதுள்ள இளைஞன். நாகரிகமாகக் கதர் உடை தரித்து, கிராப்புத் தலையை அழகாக வாரிவிட்டுக்கொண்டு, மூக்குக் கண்ணாடி தரித்திருந்தான். அவனுக்குப் பக்கத்திலிருந்த நாற்காலி 'ரிஸர்வ்ட்' என்ற சீட்டு ஒட்டப்பெற்றுக் காலியாயிருந்ததையும், அந்த நாற்காலியின்மீது மூக்குக் கண்ணாடிக் கூண்டு ஒன்றும், ஒரு பத்திரிகை இதழும் இருந்ததையும் கண்டேன். அது என்ன பத்திரிகை என்று நினைக்கிறீர்கள்?

ஆமாம், சந்தேகமில்லை. எனவே, அந்த இளைஞன் ஒரு ரஸிகன் என்பதைப்பற்றி எனக்குச் சிறிதளவும் ஐயமில்லாமல் போயிற்று. கெட்ட நாடகங்களைப் பார்த்துப் பார்த்து எனக்குத்தான் ருசி கெட்டுப்போயிருக்கவேண்டுமென்றும், இந்த நாடகம் உண்மையில் அந்தப் பையன் சொல்வது போல் அபஸ்மாரமாய்த்தானிருக்க வேண்டு மென்றும் கருதத் தொடங்கினேன்.

இந்தச் சமயத்தில் நாடகத்தில் திரை விட்டார்கள். கொட்டகை முழுவதும் 'கல்' என்று ஜனங்கள் பேசும் சத்தம் எழுந்தது. நான் இளைஞனைக் கவனித்தேன். அவன் முதலில் தன் இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டான். பிறகு ஒரு பெருமூச்சுவிட்டு, பக்கத்து நாற்காலியிலிருந்த பத்திரிகையை எடுத்துப் பக்கங்களைப் புரட்டினான்.

அப்போது எனக்கேற்பட்ட ஆவலையும் பரபரப்பையும் சகோதரப் பத்திரிகாசிரியரான உம்மைத் தவிர வேறு யாரால் அறிய முடியும்? பத்திரிகையில் எந்தப் பகுதியை அவன் படிக்கிறான், எதை எதை ரஸிக்கிறான், முக்கியமாக நான் எழுதியிருந்த கதைக்கு அவன் வருவானா என்றெல்லாம் எண்ணங்கள் உதித்தன. நேரில் சொல்லப்

படும் அபிப்பிராயத்தைக் காட்டிலும் இப்படி அறிந்து கொள்ளும் அபிப்பிராயத்திற்கே மதிப்பு அதிகமல்லவா?

முதன்முதலில் அவ்விளைஞன் விகடத் துணுக்குகளைப் படிக்கத் தொடங்கினன். ஒன்றையாவது அவன் ரஸித்த தாகத் தெரியவில்லை. முகம் அடிக்கடி சிணுங்கிற்று. எனக்கு முதலில் கொஞ்சம் சந்தோஷம் ஏற்பட்டது. இந்தத் தடவை விகடத் துணுக்குகள் அவ்வளவு சுகமில்லை என்று முன்னமே உதவி ஆசிரியரிடம் நான் தெரிவித்திருந்தேன். இதை முன்னிட்டு, ஒண்ணும் நம்பர் விகடத் துணுக்கு ஒன்றை நானே பொறுக்கியெடுத்துக் கடைசியில் போட்டிருந்தேன். ஆனல் அவ்விளைஞன் அதைப் படித்துவிட்டுக் கூட, "ஹாம்! இதெல்லாம் ஒரு விகடமாம்! தரித்திரம்! பத்திரிகை ரொம்ப மோசமாய்ப் போச்சு!" என்று சொல்லி வேறு பக்கம் புரட்டியதும் கொஞ்சம் மனத்தாங்கல் ஏற்பட்டது.

பிறகு அவன் சிறுவர் பகுதிக் கதையைப் படிக்கத் தொடங்கினன். 'அட பாவி!' என்று மனத்திற்குள் அவனை வைதேன். 'இவன் ஏன் சிறுவர் கதையைப் படிக்கவேண்டும்? நிச்சயமாய் அது இவனுக்குப் பிடிக்கப் போவதில்லை. அடுத்தாற்போல் புரட்டினல் என்னுடைய அரிய இனிய காதல் கதை இருக்கிறதே. அதற்கு எப்போது வருவானே?' என்று என் மனம் துடிதுடித்துக்கொண்டிருந்தது!

இளைஞனே சிறுவர் கதையை வெகு சாவதானமாகப் படித்துக்கொண்டு வந்தான். இடையிடையே தன்னுடைய அதிருப்தியையும் தெரிவித்துக்கொண்டிருந்தான்.

நாடகத்தில் திரை தூக்கினர்கள். மிகவும் சோகமான கட்டம். கதாநாயகன் முகாரி ராகத்தில் வெகு உருக்கமாக விருத்தம் பாடுகிருன். சபையோர் எல்லாரும் கண்ணீர் உகுக்கிருர்கள். இந்தப் பெரிய கூட்டத்தில் இரண்டே இரண்டு மனிதர்கள் மட்டுந்தான் அச்சமயம் உருகாதிருந்தவர்கள். அவ்விளைஞன் ஒருவன்; நான் ஒருவன். இடையிடையில் அவ்விளைஞன் நாடக மேடையை நோக்கி நிமிர்ந்து பார்த்து, "சூ! என்ன அழுகை வேண்டியிருக்கிறது?

இதைவிடச் செத்த வீட்டில் போய் ஒப்பாரி வைக்கலாமே!'' என்று சொல்லிக்கொண் டிருந்தான்.

மறுபடியும் திரை விழுந்தது. நான் மிக ஆவலுடன் எதிர்பார்த்த நேரம் வந்தது. இளைஞன் என்னுடைய கட்டுரையைப் படிக்கத் தொடங்கினான். தூக்குத் தண்டனையை எதிர்பார்த்துக் கூண்டில் நிற்கும் கைதியைப் போல எனக்குத் திக்குத் திக்கென்று அடித்துக்கொண்டது. இரண்டு வரி படித்ததும் இளைஞன் உதட்டை மடித்தான். தூக்கு மரத்தைக் கண்முன்னால் காணத் தொடங்கினேன். ஒரு பாரா படித்துவிட்டு அவன் புத்தகத்தை மூடியதும் என் கழுத்தில் கயிறு இறுகியது. உடம்பு ஜில்லிட்டது. ஆனால் உயிர்மட்டும் போகவில்லை. ஏனெனில், அவன் என்னுடைய எழுத்துத் திறமையைப்பற்றிக் கூறிய அபிப்பிராயம் நன்றாய் என் காதில் விழுந்தது. தூக்குத் தண்டனைக்குமேல் சித்திர வதை!

ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் அந்த எமகாதகன் எழுந்து காலில் செருப்பை மாட்டிக்கொண்டு டக், டக்கென்று நடந்து போய்விட்டான். பிறகு நாடகம் முடியும் வரையில் அந்த இரண்டு ஆஸனங்களும் காலியாகவே இருந்தன......

நண்பர் பெருமூச்சு விட்டுச் சும்மா இருந்தார்.

''இவ்வளவுதானா கதை?'' என்று கேட்டேன்.

''கதை இவ்வளவுதான்; ஆனால் அநுபந்தம் பாக்கி யிருக்கிறது. இரண்டு நாளைக்குப் பிறகு நான் ஒரு நாள் மாலை கடற்கரையில் அலைகள் ஓரமாக உலாவிக் கொண் டிருந்தபொழுது, அங்கே ஓரிடத்தில் அந்த இளைஞனும், அவன் அருகில் ஒரு யுவதியும் உட்கார்ந்திருக்கக் கண்டு திடுக் கிட்டேன். அவனைக் கண்டதனால் ஏற்பட்ட திடுக்கிடுதலை விட, அவன் கையிலிருந்த ஒரு பொருள் என்னை அதிகம் திடுக்கிடச் செய்தது. அது என்னவென்று சொல் பார்க்க லாம்?''

''என்ன கைத்துப்பாக்கியா?''

''இல்லை.''

''கடலைப் பட்டாணியா?''

''சீ! அதுவும் இல்லை.''

"நீயே சொல்லிவிடு."

"அது ஒரு புஸ்தகம்."

"சரி; தெரிந்தது."

"ஆம், அவன் கையில் நாடகக் கொட்டகையில் பார்த்த அதே பத்திரிகை இதழ்தான். இதில் எனக்கு இன்னும் ஆச்சரியமளித்தது என்னவென்றால், அவன் அதைப் பிரித்து வைத்திருந்த பக்கத்தில் என்னுடைய கட்டுரையின் தலைப்பு காணப்பட்டதேயாகும். நான் அப்பக்கம் போன சமயத்தில் அவன் தன் காதலியிடம், 'ஆமாம், நாடகம் நன்றாய்த்தான் இருந்தது. ஆனால் நீ வராதபடியினால் எனக்கு ஒன்றும் ரஸிக்கவில்லை; நடுவில் எழுந்து வந்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

"'அட பாதகா! சண்டாளா! ஓர் ஏழைப் பத்திரிகாசிரியனை மூன்று நாட்களாக இப்படி மனவேதனைக்கு உள்ளாக்கினாயே!' என்று அவனை மனத்திற்குள் வைதேன். அப்புறம் ஏதோ பாசத்தினால் கவரப்பட்டவன்போல் குறுக்கும் நெடுக்குமாக அந்தப் பக்கமே நாலைந்து தடவை சென்று திரும்பினேன். ஒரு தடவை அந்தப் பாவி மகன் என்னுடைய புனைபெயரைக் குறிப்பிட்டு, அருமையான ஏக வசனத்தில் அபிமானமாய்த் திட்டிப் பாராட்டிக் கொண்டிருந்தான். இது எனக்குத் திருப்தியாகவே இருந்தது. ஆனால், மற்றொரு தடவை அவன் சிறுவர் பகுதிக் கதையை வெகு சுவாரஸ்யமாக அவளுக்கு வாசித்துக் காட்டிக்கொண்டிருந்தபோது எனக்குச் சற்றுத் திகைப்புண்டாயிற்று. அதற்கு அடுத்த தடவை அவன், சற்றும் உப்புச் சப்பில்லாதது என்று நான் நினைத்த ஒரு விகடத் துணுக்கைப் படிக்க, இருவரும் இடி இடியென்று சிரித்தார்கள். இதைக் கேட்டபோது எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும்போல் இருந்தது. இரண்டு நாளைக்குள் ஒருவனுடைய அபிப்பிராயம் இப்படித் தலைகீழாக மாறக் கூடுமானால் இந்த அபிப்பிராயம் என்பது பக்கத்திலுள்ளவர்களையும் சமய சந்தர்ப்பங்களையும் பொறுத்தல்லவா ஏற்படுவதாகத் தோன்றுகிறது? அன்றுமுதல் இன்றுவரை என்

னுடைய கட்டுரைகளைப்பற்றி யாரையுமே அபிப்பிராயம் கேட்டது கிடையாது'' என்று நண்பர் கதையை முடித்தார்.

''பேஷ்! மிகவும் ரஸமான அநுபவம்தான்; மிக்க வந்தனம்'' என்று சொல்லிவிட்டு எழுந்தேன்.

நண்பரும் எழுந்தார்.

''ஆனால், நான் சென்ற இதழில் எழுதிய 'மேதாவி பூயாஸம்' என்னும் ஹாஸ்யக் கட்டுரையைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லையே'' என்று வினவினேன்.

''ஆமாம்; ரொம்ப பேஷாயிருந்தது. என்னுடைய 'விநாயகரின் தொந்தி' என்ற கதையை நீங்கள் படித்தீர்களா?'' என்று நண்பர் கேட்டார்.

''கேட்க வேண்டுமா, என்ன! அதைப்போன்ற கதையை நான் இதுவரை படித்ததில்லை'' என்றேன்.

இருவரும் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்றோம்.

# ஸோஷலிஸம் வேண்டாம் !

இப்போதெல்லாம் பொதுஜனங்களுடைய மனத்தைக் கலக்கிக்கொண்டிருக்கும் பிரச்னை இன்னதென்பதை நாம் அறிவோம். அது, 'ஸோஷலிஸம் வேண்டுமா? வேண்டாமா?' என்பதுதான். பெரிய பெரிய கைகள் எல்லாம் இந்தப் பிரச்னையில் உட்புகுந்து குட்டை குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். ''இச் சமயம் தப்பினால் எச்சமயம் வாய்க்குமோ, வாய்க்காமல் போகுமோ அறிகிலேன்'' என்று ஸ்ரீ மாமியுமானார் ஸ்வாமிகள் சொல்லியிருக்கிறபடியாலும், 'எழுங்கள்; விழியுங்கள்; குழப்புங்கள்; மழுப்புங்கள்' என்று பெரியார் ஸ்ரீ கலகாஸ்பதானந்தர் அருளியிருக்கிறபடியாலும், நானும் இந்தக் குழப்பத் திருப்பணியில் ஈடுபட முன் வந்து விட்டேன்.

அப்படி முன்வரும்போது, எதிரில் முட்டுக்கட்டையாக நிற்பது, எந்தக் கட்சியில் சேருவது என்னும் கேள்விதான். அதாவது, 'ஸோஷலிஸம் வேண்டும்' கட்சியில் சேருவதா, 'ஸோஷலிஸம் வேண்டாம்' கட்சியில் சேருவதா? இதைப் பைஸல் செய்துகொண்டுதான், மேலே குழப்பவேண்டியிருக்கிறது.

இந்தப் பூர்வாங்கப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அநேக வழிகள் இருக்கின்றன. பம்பாய் முதலாளிகளும், சென்னை ஐரோப்பியர்களும் எந்தக் கட்சியைச் சேர்ந்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து முடிவு செய்வது ஒரு வழி. ஆனால், நான் புதிய முறை ஒன்றைக் கைக்கொண்டேன். 'வேண்டும்', 'வேண்டாம்' என்று இரண்டு சீட்டுகளில் எழுதிப் பிள்ளையார் முன் குலுக்கிப்போட்டு, கண்ணை மூடிக்கொண்டு ஒன்றை எடுத்தேன். 'வேண்டாம்' சீட்டு வந்தது. ஆகவே, 'வேண்டாம்' கட்சியில் சேர்ந்துவிடத் தீர்மானித்தேன்.

இனிமேல், ஸோஷலிஸம் வேண்டாம் என்பதற்கு என்னுடைய காரணங்களை வரிசைக் கிரமமாகச் சொல்லப் போகிறேன். அதற்குமுன், 'ஸோஷலிஸம் என்றால் என்ன?' என்பதைப்பற்றியும் ஒரு வார்த்தை சொல்லி விடுதல் நலமென்று தோன்றுகிறது. இந்த விவாதத்தில் ஈடுபட்ட பெரிய மனிதர்கள் பேச்சைக் கேட்கும்போது இது அவ்வளவு அவசியமாகத் தோன்றவில்லை. இருந்தாலும், அதைச் சொல்லிவிடுவதில் எந்தவிதக் கெடுதலுமில்லை.

'ஸோஷலிஸம்' என்பதற்குத் தமிழிலே அநேக வார்த்தைகளை உபயோகித்து வருகிறோம். 'சமதர்மம்', 'பொது உடைமை', 'அபேதவாதம்' என்றெல்லாம் சொல்கிறோம். இவற்றில் 'அபேதவாதம்' என்பது சிலருக்குப் பக்கவாதத்தை நினைவூட்டுகிறது. 'அபேதவாதி' என்றால், "அது என்ன வாந்தி பேதிக்குத் தம்பியா?" என்று கேட்கிறார்கள். ஆகையால், அபேதவாதத்தை நாம் கைவிட்டு விடுவோம். மற்ற இரண்டு சொற்றொடர்களும் 'ஸோஷலிஸம்' என்பதன் சரியான பொருளைக் குறுப்பிடுவதில்லை. மேலும் 'கம்யூனிஸம்', 'போல்ஷிவிஷம்' இவைகளைக் குறிப்பிடுவதற்கும் 'சமதர்மம்', 'பொது உடைமை' என்னும் சொற்றொடர்களை உபயோகித்து வருகிறோம். ஆகவே, இந்தக் கட்டுரையில் 'ஸோஷலிஸம்' என்னும் வார்த்தையையே உபயோகப்படுத்தி, அதன் விஷயம் என்ன வென்பதைமட்டும் விளக்கிக் கொள்ளலாம்.

'ஸோஷலிஸம்' என்பது ஒரு கொள்கை; மக்களின் வாழ்வு முறையைத் திருத்தி அமைப்பதுபற்றிய கொள்கை. அந்தக் கொள்கையின்படி, உலகத்தில் உற்பத்தியாகும் செல்வமெல்லாம், உலகிலுள்ள மனிதர்கள் எல்லோருக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படும். யார் என்ன வேலை செய்தாலும், வருமானம்மட்டும் சமமாகத்தான் இருக்கும். ஒருவனுக்கு அதிகம், ஒருவனுக்குக் குறைவு என்பது கிடையாது. அந்த ஏற்பாட்டின்கீழ் மைசூர் மகாராஜாவுக்கும், மண் வெட்டும் மறவனுக்கும் ஒரே வருமானந்தான்; கவர்னர் துரைக்கும் கிராமத் தலையாரிக்கும் ஒரே சம்பளந்தான்; உடையார்பாளையம் ஜமீன்தாருக்கும், உழுது பயிரிடும்

குடியானவனுக்கும் பொருளாதார அந்தஸ்து ஒன்று தான்.

"இப்படி எல்லோருக்கும் பங்கு போட்டால், தலைக்கு என்ன கிடைக்கும்?" என்று கேட்பவர்களுக்கு, மேற்படி கொள்கையைப் பிரசாரம் செய்பவர்கள் திட்டமான பதில் சொல்கிறார்கள். "இந்த ஏற்பாட்டின்கீழ், நவீன இயந்திர சாதனங்களைப் பூரணமாய்ப் பயன்படுத்தக் கூடுமாதலால், எல்லாருக்கும் வயிறு நிறைய உணவும், போதுமான உடையும், குடியிருக்க வசதியான வீடும், இன்னும் நாகரிக வாழ்வுக்குரிய சாதனங்களும் கிடைக்கும். நாட்டில் தரித்திரம் என்பதே இராது" என்று கூறுகிறார்கள். இதுமட்டுமல்ல; அத்தகைய ஏற்பாட்டின்கீழ் மனிதர்கள் எல்லாரும் தினம் சில மணி நேரம் வேலை செய்தால் போதுமென்றும், மற்ற நேரமெல்லாம் அறிவு வளர்ச்சி, கலை வளர்ச்சி முதலியவைகளில் ஈடுபட்டுக் குதூகலமாய் வாழலாமென்றும் சொல்கிறார்கள். இது வெறும் கனவல்ல, நடக்கக்கூடியதே என்பதற்கு உதாரணமாக ருஷியா தேசத்தைக் காட்டுகிறார்கள்.

அத்தகைய பயங்கரமான நிலைமை நம் தேசத்தில் ஏற்படுவதாக ஒரு நிமிஷம் வைத்துக்கொள்வோம். அதனால், நமது வாழ்வு முறையில் என்னென்ன விபரீதமான மாறுதல்கள் ஏற்பட்டுவிடும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தோமானால், 'ஸோஷலிஸம் வேண்டாம்!' என்று கதறுவோமென்பதில் சந்தேகமில்லை.

**முதல் விபரீதம்:**

இந்தியர்களாகிய நாம் 'போகும் கதிக்கு வழி' தேடுவதில் நம்பிக்கை கொண்டவர்கள்; புண்ணியம் சம்பாதிக்க விரும்புகிறவர்கள். நமக்குப் புண்ணியம் சம்பாதிக்க ஒத்தாசை செய்கிறவர்கள் யார்? ஏன், பிச்சைக்காரர்கள் தான்.

இப்போது நம் தேசத்தில் பிச்சைக்காரர்கள் விஷயத்தில் எவ்விதக் குறைவுமில்லை. பொழுது விடிந்ததும், அவர்கள் ஒருவர்பின் ஒருவராக நம்முடைய வீட்டைத் தேடி வந்துகொண் டிருக்கிறார்கள்; நம்முடைய புண்ணிய மூட்டை

யைப் பெருக்குவதற்காகவே அவர்கள் வருகிருர்கள். அவர்களுக்குத்தான் என்ன சிரத்தை? நாம் தூங்கி முழிப்பதற்குள் வாசலில் வந்து நிற்கிருர்கள். "என்ன, அம்மா! இன்னுமா தூங்கறீங்க? எழுந்து பிச்சை போட்டுட்டுத் தூங்குங்க!" என்கிருன், அந்த அதிகாலைப் பிச்சைக்காரன். பிறகு ஒருவர் பின் ஒருவராய் வருகிறவர்கள் ஒவ்வொரு முறையைக் கையாளுகிருர்கள். சிலர் கெஞ்சிக் கேட்கிருர்கள்; சிலர் பாடிக்கொண்டு வருகிருர்கள்; சிலர் லபோ லபோ என்று கத்துகிருர்கள்; சிலர் வயிற்றில் அடித்துக்கொள்கிருர்கள். சில கரார்ப் பிச்சைக்காரர்கள், "ஒரு வீட்டிலேயே எத்தனை நேரம் காத்திருக்கிறது? உண்டுன்ன உண்டேன்னு சொல்லுங்க; இல்லேன்ன இல்லேன்னு சொல்லுங்க" என்று கண்டிப்பாய்க் கேட்கிருர்கள். "நாம்ப அரிசி வாங்கிற தில்லே; காசு கொடுத்தாக் கொடுங்க, இல்லாபோன ஒன்றும் வேண்டாம்" என்று உலகத்தையே துச்சமாக நினைத்துப் பிச்சை கேட்பவர்களும் உண்டு. இன்னும், "நாங்க பிச்சைக்கு வரலே; திருப்பதி வேண்டுதலே" என்றும், "பிள்ளைக்குப் பூணூல்", "பெண்ணுக்குக் கலியாணம்" என்றும் சொல்லிக்கொண்டு பலர் வருகிருர்கள். ஒரு பெண்ணும் பெருமலே கன்னிகாதான பலனை அடைய அவர்கள் நமக்கு வழி காட்டுகிருர்கள்.

மற்றும், தலையில் காந்தி குல்லாவும், சட்டையில் ஜவஹர்லால் பெண்டன்டும் தரித்து, தோளில் கதர் ஹாவர்ஸாக்குடன் சிலர் வந்து, "கண்ணனூர்ச் சிறைச் சாலையிலிருந்து விடுதலை யடைந்தோம்; ஊருக்குப் போக ரயில் சார்ஜுக்குப் பணமில்லை" என்று கேட்கிருர்கள். "ஏன்? இந்த ஊர்க் காங்கிரஸ் தலைவர்களைப் போய்ப் பாருங்களேன்" என்ருல், "காங்கிரஸ் தலைவர்களா அவர்கள்? சுத்த அயோக்கியர்கள்! மூன்று வருஷத்துக்குமுன் அவர்களிடம் ரயில் சார்ஜ் வாங்கிக்கொண்டதை இன்னும் நினைவு வைத்துக்கொண்டு கேட்கிருர்கள்! எல்லாரும் சுயகாரியப் புலிகள்; அப்படி, இப்படி......" என்று வசை புராணம் தொடங்குகிருர்கள். இந்த இனத்தில் இன்னும் சிலர், "வேலூர் ஜில்லா போர்டு தேர்தலுக்குப் பிரசாரம்

செய்யவந்தேன்'' என்றும், ''லக்னௌ காங்கிரஸுக்குப் போய்விட்டுத் திருப்புகிறேன்'' என்றும் கூறுகிறார்கள். இவர்கள் உங்களிடம் கேட்பதெல்லாம்கூட ரயில் சார்ஜுக் குத்தான். ஆனால், தரித்திரம் பிடித்த நீங்கள் ஓரணா இரண் டணாவுக்குமேல் கொடுப்பதில்லை யாதலால், அதெல்லாம் காப்பி ஹோட்டலிலேயே செலவழித்து, ரயில் சார்ஜுக்குப் பணம் சேர்வதேயில்லை.

இன்னும் ஒரு வகையான பிச்சையும் உண்டு. அது உங்களுடைய வாலிபப் பருவத்தின் மனோராஜ்யக் காதல் வாழ்க்கையை நினைவூட்டுவதாகும். சென்ட்ரல் ஸ்டேஷனுக் கெதிரில் நீங்கள் பஸ்ஸுக்காகக் காத்திருக்கும்போது திடீரென்று யாரோ உங்கள் தோளைத் தோட, நீங்கள் கூச்சமுற்றுத் திரும்பிப் பார்க்கிறீர்கள். ஆறரை அடி உயரமும் அதற்குத் தகுந்த அகலமும் உள்ள ஆஜானு பாகுவான ஒரு பட்டாணி ஸ்திரீ நின்று ஒரு புன்னகை புரிந்து கையை நீட்டுகிறாள். ஒரு கணம் உங்களுக்கு என்ன வெல்லாமோ தோன்றிவிடுகிறது. வீட்டிலே உங்கள் வரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் பரதேவதையின் ஞாபகம் வருகிறது. 'ஆனாலும், வாழ்க்கையில் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் அருமையாய்த்தானே நேர்கின்றன?' என்ற ஓர் எண்ணம் மின்னல்போல் தோன்றி மறைகிறது. ''பாபு! ஏக் பைஸா தீஜியே!'' என்ற குரலைக் கேட்ட துந்தான் சொப்பன உலகத்திலிருந்து கீழிறங்கி, 'சீ! இவள் பிச்சைக்காரியா?' என்று நினைக்கிறீர்கள். உங்கள் திகைப் பைப் பார்த்துப் பக்கத்தில் நிற்பவர்கள் எல்லாரும் சிரிக் கிறார்கள். இதற்குள் பஸ் வந்துவிட, நீங்கள் அவசர அவசரமாய் ஏறி வழக்கம்போல் ஓரத்து ஸீட்டுக்குச் சண்டையிடாமல் நடுமத்தியில் பத்திரமாய் உட்கார்ந்து விடுகிறீர்கள். பஸ் கிளம்புகிற வரையில் உங்கள் இருதயம் பக்குபக்கென்று அடித்துக் கொள்கிறது.

இப்படிப் பல்வேறு ரஸமான முறைகளைக் கடைப் பிடிக்கும் பிச்சைக்கார வர்க்கமே மறைந்துவிடுவதை நாம் விரும்ப முடியுமா? 'ஸோஷலிஸம்' பூரணமாய் அமலுக்கு வரும்போது, அந்த வர்க்கம் இல்லாமல் போவது நிச்சயம்.

எல்லோருக்குமே உண்ண உணவும், உடுக்க உடையும், தங்க வீடும் இருந்துவிட்டால், பிச்சை எடுக்க யார்தான் முன்வருவார்கள் ? அத்தகைய நிலைமையில் - பிச்சைக் காரர்களே இல்லாத உலகத்தில் - உங்களையும் என்னையும் போன்ற புண்ணியாத்மாக்கள் வாழ்வதற்கே இஷ்டப்பட மாட்டோம். ஒரு பிடி அரிசி வாங்கிக்கொள்ள ஒரு பிச்சைக் காரன் இல்லையென்முல், வேறு எந்த வழியில் நாம் புண்ணி யம் சம்பாதிப்பது? 'ஐயமிட்டுண்' என்று அரிச்சுவடி வகுப்பிலேயே படித்தோமே, அதை எப்படி நிறை வேற்றுவது? அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுத்தக் கூடிய 'ஸோஷலிஸம் வேண்டாம்' என்று நாம் சொல்லாவிட்டால், வேறு எதைத்தான் வேண்டாமென்று சொல்லப் போகிறோம்?

**இரண்டாவது விபரீதம் :**

"கிடக்கிருர்கள் பிச்சைக்காரப் பயல்கள் !" என்று ஒருவேளை பிச்சைக்காரர்களை நாம் தள்ளிவிடலாம் ; ஆனால், திருடர்களை அப்படித் தள்ளிவிட முடியுமா ?

'ஸோஷலிஸம்' அமலுக்கு வரும்போது, திருடுவதற்கு அவசியம் எதுவும் இராது ; ஏனென்முல், எல்லாருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும் கிடைக்கும். திருடு வதற்கு வசதியும் இராது ; ஏனெனில், வருங்காலத்துக் கென்று யாரும் பணத்தைச் சேர்த்துவைக்க மாட்டார்கள். ஆகவே, திருடர்களே இல்லாமலே போய்விடுவார்கள்.

திருடர் இல்லாத உலகம் எவ்வளவு சாரமற்றதா யிருக்குமென்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். அப்புறம் கதாசிரியர்கள் என்னதான் செய்வார்கள் ? திருடர் இல்லாத உலகில் 'லா மிஸரபிளே' போன்ற ஒரு காவியம் வரக் கூடுமா ? மாயாண்டித்தேவன் இல்லாவிட்டால் 'கமலாம்பாள் சரித்திர'ந்தான் எவ்வளவு ரஸமற்றதாகிவிடும் ?

இன்னும் திருடர்களே இல்லாமற் போனால், நமது தீர அலங்காரப் போலீஸாருக்கு வண்டிகளுக்குக் கை காட்டு வதைத் தவிர வேறு வேலையில்லாமல் போய்விடு மென்பதை யும் கவனிக்கவேண்டும். பிறகு யாரைப் பிடித்து அவர்கள் சிறைக்கு அனுப்புவார்கள் ? எப்படிப் 'பிரமோஷன்' வாங்கு வார்கள் ?

சிறைக் கூடங்கள் - எவ்வளவோ பணம் செலவழித்துக் கோட்டைகள் மாதிரி கட்டியிருக்கும் சிறைக்கூடங்கள் - எல்லாம் காலியாகவல்லவா போய்விடும்? அவற்றை என்ன செய்வது?

**இன்னும் பல விபரீதங்கள் :**

எல்லாருக்கும் சமமான வருமானம் இருந்தால், ஒருவரும் கடன் வாங்க மாட்டார்கள்; கடன் கொடுக்கவும் மாட்டார்கள். கடன் கொடுக்கல், வாங்கல் சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கான விகடத் துணுக்குகள் அர்த்தமற்றுப் போய்விடும். எல்லாரும் வட்டிக் கணக்கை மறந்து விடுவார்கள். அந்தப் பாடத்தையே கணக்குப் புஸ்தகங்களினின்று எடுக்க நேரிடும். புதுச்சேரியின் மகிமையும் போய் விடும்.

பிரசித்திபெற்ற நாகேசுவர அய்யரைப் போன்றவர்கள் தங்கள் கைத் திறமையைக் காட்ட இடமிராது; 'போர்ஜரி' என்னும் அரிய கலை அநியாயமாய்ப் போய்விடும்!

அநியாயம் என்றதும், நியாயத்தின் ஞாபகம் வருகிறது. நியாயத்திற்கு அப்போது கௌரவம் இராது. நியாயம் என்பது சாமான்யமானதா? பெரிய விஷயமல்லவா? அதன் பெருமைக்குத் தகுந்தபடி பணம் செலவழிப்பவர்களுக்குத்தான் இப்போதெல்லாம் நியாயம் கிடைக்கிறது. உங்கள் 'ஸோஷலிஸ'த்தின்கீழ் இது தலைகீழாய் மாறிவிடும். அப்போது பணத்திற்கும் நியாயத்துக்கும் சம்பந்தமிராது. எல்லாருக்கும் ஒரே நியாயம் என்று ஏற்படும். சுருங்கச் சொன்னால், நியாயம், கேவலம் காலணாப் பெறாததாகி விடும். இக் காரணத்தினால் கோர்ட்டுகளையே மூடிவிடும் படியான நிலைமைகூட ஏற்பட்டுவிடலாம்.

கோர்ட்டுகளுக்கு ஏற்படும் விபத்து, ஆஸ்பத்திரிகளுக்குக்கூட ஏற்படக்கூடும். இப்போது நம் தேசத்தில் சிலர் பணக்காரர்களாகவும், பலர் ஏழைகளாகவும் இருக்கிறார்கள். பணக்காரர்களுக்கு டிஸ்பெப்ஸியா, டயபிடீஸ், அபெண்டிஸிடிஸ் முதலிய பணக்கார வியாதிகள் வருகின்றன. ஏழைகளுக்கு அவர்களுக்குத் தகுந்தாற் போல் பழைய கர்நாடக ஏழை வியாதிகள் வருகின்றன. அதிக

மாய்ச் சாப்பிட்டு விட்டு வேலையின்றி உட்கார்ந்திருப்பதால் பணக்கார வியாதிகளும், வயிறு நிரம்பச் சாப்பிட நல்லுணவு இல்லாததால் ஏழை வியாதிகளும் பெரும்பாலும் வருகின்றன. 'ஸோஷலிஸ'த்தின் கீழ் இந்த இரண்டு நிலைமையும் இராததலால், அந்த நிலைமைகளுக்குரிய வியாதிகளும் இல்லாமற் போகும்.

இன்னும் யோசித்தால், நம் கல்யாண ஏற்பாடுகள்கூட விபரீதமாக மாறிவிடலாமென்று தோன்றுகிறது. சம வருமானமுள்ள சமூகத்தில், அவரவர்களும் தங்களுக்குப் பிடித்தவர்களைக் கல்யாணம் செய்துகொள்வது என்று ஏற்பட்டுவிடலாம். ஐம்பது வயதுப் பணக்காரக் கிழவர்களும் பதின்மூன்று வயது ஏழைச் சிறுமிகளும் உட்கார்ந்து நலங்கிடும் அபூர்வமான காட்சிகளைப் பார்க்க மாட்டோம்.

கடைசியாக, நமது 'வழுக்கி விழுந்த சகோதரி'களின் ஞாபகம் வருகிறது. 'ஸோஷலிஸ'த்தின் கீழ் அவர்களுடைய கதி அதோகதியாய்ப் போய்விடும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். அதாவது, அப்படி ஒரு வர்க்கமே இல்லாமல் போய்விடும். எல்லாருக்கும் சமமான வருமானம் என்று ஏற்படும்போது, ஒருவரும் 'வழுக்கி விழ' மாட்டார்கள்! ஒருவருமே 'வழுக்கி விழா'விட்டால், அப்புறம் யாரைப் பார்த்துத்தான் சிரிக்கிறது?

அப்படி வந்துவிட்டால் - 'விபசாரம்' என்னும் ஒரு தொழிலே இல்லாமல் போய்விட்டால் - அப்புறம் பதிவிரதா தர்மத்துக்குத்தான் என்ன மகிமை இருக்கும்?—இந்த விபரீதத்தை நினைக்கும்போது, மேலே எனக்கு எழுதவே ஓடவில்லை, போங்கள்!

'ஸோஷலிஸம் வேண்டாம்' என்பதற்கு வேறு காரணமும் வேண்டுமா, என்ன? வேண்டவே வேண்டாம்!

# காதல் எங்கே ?

அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லக்கூடியவர்கள் தயவு செய்து மீசையை முறுக்கிக்கொண்டு முன்னுல் வாருங்கள். ஏனெனில், அதற்குப் பதில் வெகு அவசரமாகத் தேவையா யிருக்கிறது. இல்லாத வரையில், பெரிய பெரிய ஆபத்துக்கள் எல்லாம் நேரிடலாம். உதாரணமாக, தமிழ் இலக்கியத்தின் நவீன வளர்ச்சி தடைப்பட்டுப் போகலாம்.

சென்ற வாரத்தில் சென்னையில் பிரபல வக்கீல் ஒருவரை நான் சந்திக்க நேர்ந்தது. அவர் தமிழ் வளர்ச்சியில் மிக்க ஆர்வம் கொண்டவர். எனவே, 'விகட'னை வெகு ஆர்வத் துடன் வாரந்தோறும் படித்து வருபவர். 'விகடன்' தலையங் கங்களில் முக்கியமானவற்றைச் சேகரித்து ஒரு புத்தகமாக வெளியிட்டால், சிறந்த அரசியல் நூலாகுமென்று அவர் ஓர் அபிப்பிராயம் தெரிவித்தார். அதன் பிறகு, ''சரிதான் ; சென்ற விகடன் இதழில் காதல் கதை ஒன்றுகூட இல்லையே; காதல் என்ற வார்த்தைகூட ஓரிடத்திலேனும் காணப்பட வில்லையே ? ஏன் அப்படி ?'' என்று கேட்டார். அதற்கு என்னுடைய பதில் : முழித்தல்.

வேண்டுமானுல் அவருடைய இரண்டாவது கேள்விக்கு இடமில்லாதபடி வெகு சுலபமாகச் செய்துவிடலாம். அதாவது, ஒரு பக்கம் முழுதும் 'காதல்—காதல்—காதல்—' என்று சிலர் 'ஸ்ரீராமஜயம்' எழுதுவதுபோல் அச்சிட்டு நிரப்பிவிட லாம். ஆனுல், இதனுல் என்ன பிரயோஜனம்? யாருக்குப் பிரீதி ? 'சர்க்கரை', 'சர்க்கரை' என்று ஒரு தஸ்தா காகிதம் முழுவதும் எழுதி வைத்திருந்தாலும், துளியாவது வாயில் தித்திக்குமா ? அல்லது சர்க்காருக்கு ஒரு காலணு வருமானந் தான் கிடைக்குமா ?

* * * *

மேற்சொன்ன பிரமுகர் கேள்வியின் பயனாக, 'விகடன்' காரியாலயம் அல்லோலகல்லோலப் பட்டது. ஆறு மாதமாக வந்து தள்ளுபடியான கையெழுத்துப் பிரதிகள் எல்லாம் திரும்ப எடுத்துச் சோதிக்கப்பட்டன. அவைகளில் இருந்த சிறுகதைகளை நூறு நூறாகப் பிரித்து எடுத்துக்கொண்டு ஆராய்ந்தபோது சராசரியில் அவை பின்வரும் இனங்களா கப் பிரிக்கக் கூடியவையா யிருந்தன :

| | | |
|---|---|---|
| (1) | வக்கீல்களைப் பற்றியவை | 30 |
| (2) | டாக்டர்களைப் பற்றியவை | 25 |
| (3) | வேலையில்லாத் திண்டாட்டம் | 20 |
| (4) | வரதட்சிணைக் கொடுமை | 15 |
| (5) | தமிழ் பண்டிதர்களைப் பரிகசிப்பது | 8 |
| (6) | காதல் கதைகள் | 2 |

இப்படி அருமருந்தைப்போல் கிடைக்கும் இரண்டு காதல் கதைகளில் ஒன்று கைம்பெண்ணின் காதல் கதையா யிருக்கும். (பரிதாபம் !) மற்றொன்று தூக்கத்தின்போது கனவில் காதல் செய்து, விழித்தெழுந்ததும் ஏமாறுவதா யிருக்கும். (பெரும்பாலும் இது சினிமா பார்த்ததன் பயனாக ஏற்படும்.) பிந்தைய இனத்தைச் சேர்ந்த காதல் கதை ஒன்றின் ஆரம்பத்தை இதோ கேளுங்கள் :

"ஆ ! என்ன அழகான பெண் ! என்ன ஒய்யாரமான நடை! என்ன சௌந்தரியமான முகம்! ஆ! முத்துப்போன்ற அந்தப் பற்கள் ! செந்தாமரை போன்ற அம் மெல்லிய அத ரங்களினிடையே பாதிதெரிந்தும் தெரியாமலும் அவை இருக் கும் அழகுதான் என்னே ! பத்தரை மாற்றுப் பசும் பொன் னைப் பழித்த அம் மடமயிலின் தேகம் மாலைக் கதிரவன் செந் நிறக் கிரணங்களால் என்ன தேஜஸுடன் திகழ்கிறது ! அதோ நிற்கிறாள். சரி! நானே கிட்ட நெருங்குகிறேன். ஆ! அம் மடவன்னம் புன்னகை புரிகின்றாள். ஏன் ? என்னை நோக்கிச் சிரிக்கிறாள்."

இந்த இனிய காதல்கதையின் தலைப்பு 'கண்டேன்! காதல் கொண்டேன் !' என்பது. இம்மாதிரியான கதைகளைப் பிரசுரித்தால் 'விகட'னுக்குக் கோடையின் வெப்பத்தினால் மூளை கலங்கிவிட்டது என்று தீர்மானித்து விடமாட்டீர்

களா? ஆகவே காதல் கதைகள் வெளியிடாமைக்காக 'விகடன்' மீது குறை கூறுகிறீர்கள்.

பின்னர், தமிழ்நாட்டின் நவீன கதாசிரியர்கள்மீது குற்றம் சொல்லலாமா? அதுவும் சரியில்லையென்றே தோன்றுகிறது. அவர்கள்தான் என்ன செய்வார்கள்? சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்? அவர்களும், "காதல் எங்கே? எங்கே? எங்கே?" என்று தேடித் தேடி அலைகிறார்கள். எல்லாம் நிஷ்பிரயோஜனமாகவே முடிகிறது. வாழ்க்கையில் காதல் இருந்தால்தானே, கதைகளிலும் காதல் வரக்கூடும்?

* * * *

ஒரே ஒரு வகைக் காதலை அடிப்படையாக வைத்துக் கொண்டு வேண்டுமானால் கதைகள் எழுதலாம். இது முறை பிறழ்ந்த, அதாவது கலியாணத்துக்குப் புறம்பான காதல். ஆனால், இத்தகைய காதல் கதைகளை நீங்களாவது நானாவது விரும்புவதில்லை. அதிலும் முக்கியமாக அவை தமிழில் எழுதப்படுவதை நாம் விரும்பவில்லை. கேவலம் மிலேச்ச பாஷையில் அவை வெளிவந்தால் தொலைந்து போகட்டும். நமது அருமைத் தமிழ் மொழியில் வேண்டாம்!

நாம் வேண்டும் காதல் கதைகள் நேர்மையான, சுத்த சன்மார்க்கத்துக்குகந்த, முறைபிறழாத, கலியாண வரம்பிற்குட்பட்ட காதல் கதைகளாயிருக்கவேண்டும்.

இது வெகு பிரயாசை யல்லவா, ஸ்வாமி! சென்ற மூன்று மாத காலமாக நானும் அத்தகைய கலியாண வரம்பிற்குட்பட்ட காதல் சம்பவங்களைத் தேடி வருகிறேன். எனக்குக் கிடைத்ததெல்லாம் கீழ்வரும் மூன்று சம்பவங்கள் தான்.

1

கலியாணமான கொஞ்ச நாளைக்கெல்லாம் மாமனாரின் வீட்டுக்கு மாப்பிள்ளை வந்திருந்தான். பெண் கொஞ்சம் தைரியசாலி. புருஷன் தன்னுடன் பேச விரும்புவானென்று நினைத்து, அவன் தனியாய் இருக்கும்போதெல்லாம் அவன் அருகில் அருகில் போய்க்கொண்டிருந்தாள். ஆனால் அவனோ, அவள் புடைவைத் தலைப்பைக் கண்டதும் ஓடி ஓடிப்

போய்க்கொண்டிருந்தான். கடைசியாக, ஒரு தடவை அவன் அவ்வாறு ஓடத் தொடங்கினபோது, அவள் அவனுடைய அங்கவஸ்திரத்தைக் கையில் பிடித்துக் கொண்டு வெட்கத்தினால் தலை குனிந்தாள். ஒரு நிமிஷம் அவ்வாறு நின்றும் பேச்சு ஒன்றும் வராமல் போகவே நிமிர்ந்து பார்த்தாள். ஆசாமியைக் காணோம்! அங்க வஸ்திரம் மட்டும் சுவரில் அடித்திருந்த சட்டத்தில் மாட்டிக் கொண்டு தொங்கிற்று?

2

கொஞ்சம் சீர்திருத்தக்காரரான ஒரு தகப்பனார் தம் பெண்ணுக்குச் சாந்திக் கல்யாணம் பதினெட்டு வயதுக்கு மேல்தான் நடத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருந் தார். இடையில் புக்ககத்தில் நடந்த ஏதோ விசேஷத்துக் காகப் பெண்ணை அனுப்பிவைத்திருந்தார்கள். கொஞ்ச நாளைக்கெல்லாம், தகப்பனாருக்கு ஒரு கடிதம் வந்தது. 'பகவத் கிருபையை முன்னிட்டு' சுபதினத்தில் அவருடைய பெண்ணுக்கு ருது சாந்தி முகூர்த்தம் நடந்தேறியதாகவும், அதற்குரிய சன்மான வகையராக்களையெல்லாம் அனுப்பி வைக்கும்படியும் எழுதியிருந்தது. பையனுடைய காதல் மிகுதிதான் இதற்குக் காரணமாயிருக்க வேண்டுமென்று சொல்லவேண்டியதில்லை.

3

ஒரு மாப்பிள்ளை பெண்பார்க்க வந்திருந்தான். பெண், பார்ப்பதற்குக் கொஞ்சம் சுமாராய்தான் இருக்கு மென்பதை முன்னிட்டுப் பெண் வீட்டார் ஒரு யுக்தி செய்தார்கள். மாட்டு வியாபாரத்தைப்போல் பெண்ணை எதிரில் கொண்டுவந்து நிறுத்த மாட்டோமென்று சொல்லி, குறுக்கே நெடுக்கே போய்க்கொண்டிருக்கும் போது காட்டு வதாகவும், பார்த்துவிடும்படியும் சொன்னார்கள். குறுக்கே நெடுக்கே போய்க்கொண்டிருந்த அடுத்த வீட்டுப் பெண்ணைக் காட்டிவிட்டார்கள். பையனும் சம்மதித்துப் போய்விட் டான். பிறகு கலியாணத்தன்று மணையில் உட்கார்ந்த போது பெண்ணைக் கடைக்கண்ணால் பார்த்ததும் மிரண்டு விட்டான். சற்றுநேரம் முழித்துவிட்டு, ''நான் பார்த்தது

இந்தப் பெண் இல்லை'' என்று சொல்லிக்கொண்டு எழுந்தான். ஒரே அல்லோலகல்லோலம். ஏகக் கூச்சல்; களேபரம். மாப்பிள்ளையைப் பலவந்தமாகப் பிடித்து உட்காரவைக்க முயன்றார்கள். அவன் திமிறிக்கொண்டு ஓடிப் பெண்கள் கூட்டத்தில் இருந்த அடுத்த வீட்டுப் பெண்ணருகில் சென்று, ''இதோ இவளைத்தான் நான் பார்த்தது. இவளைத்தான் கலியாணம் செய்துகொள்வேன்'' என்று சொல்லி அவள் கையைப் பிடிக்க முயன்றான். அவள் ஏற்கனவே ஒரு ஜி. டி. ஏ. பாஸ் பண்ணியவனைக் கலியாணம் செய்துகொண்டவளாதலால், ''அடே! உன்னை ஏழாயிரத்து ஐந்நூற்றி இருபத்துநாலு பாம்பு பிடுங்க'' என்று வைதுவிட்டு ஓடினாள். அப்போது மணப்பெண் செய்த ஒரு காரியத்தினால் இந்த நெருக்கடியான நிலைமை சீர்திருந்தியது. அவள் கண்ணைக் கசக்கிக்கொண்டு, ''இவள் எதற்காக என் ஆத்துக்காரரை வைகிறாள்? இவள் ஆம்படையானைத்தான் பதினாயிரத்து இருநூற்று எழுபத்தேழு தேள் பிடுங்கட்டுமே?'' என்றாள். இது மாப்பிள்ளையின் காதில் விழவே, உடனே அவன் முகம் மாறுதல் அடைந்தது. மளமள வென்று மணையில் வந்து உட்கார்ந்து, ''இனிமேல் மூன்று லட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்றிருபத்தைந்தரைப் பேர் வந்து வேண்டாமென்று சொன்னாலும் சரி, நான் இந்தப் பெண்ணைத்தான் கலியாணம் செய்துகொள்வேன்'' என்று பிடிவாதமாகச் சொன்னான். விவாகம் இனிது நடந்தேறியது.

* * * *

நேயர்களே! இதுபோன்ற சம்பவங்களைக் 'காதல் கதைகள்' என்று பெயர் கொடுத்து எழுதினால் நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா? தேகத்திலுள்ள முந்நூற்றுச் சொச்சம் நரம்புகளையும் துடிக்கப் பண்ணி, கால் கட்டைவிரல் முதல் உச்சந்தலை வரையில் மின்சாரசக்தி ஊடுருவிப் பாய்ந்தது போன்ற உணர்ச்சி வருவித்து, இரவு பகல் இருபத்துநான்கு மணி நேரத்தையும் சொர்க்கமாகவோ நகரமாகவோ ஆக்கும் அதிசய, அற்புத, அபார, அதிவேக, ஆச்சரிய, ஆனந்த, அபூர்வ, அதிசய, அற்புத, (இவ்வாறு திருப்பித்

திருப்பித் தொண்ணூறு தடவை படிக்க) ஆபூர்வக் காதல் எங்கே? மேலேகூறிய 'கக்கேபிக்கே' காதல் கதைகள் எங்கே?

இத்தகைய நமது தேச நிலைமையை எண்ணி எண்ணி நான் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கையில் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றிற்று. அந்த யோசனையைச் சொல்லி விடுகிறேன். ஆனால், யாராவது அதைத் திருடிக்கொண்டு போய் என்னை முந்திக்கொண்டு காரியத்தில் நிறைவேற்றி விடாதீர்கள். யோசனை இதுதான்: 'நமது தேசத்தில் சுத்த சமரச சன்மார்க்கத்துக்குகந்த காதலை வளர்க்கும் நோக்கத்துடன் **காதல் கல்யாணக் கம்பெனி** என்பதாக ஒரு கம்பெனி ஏன் ஏற்படுத்தக் கூடாது?'

இந்த யோசனை என்ன பெறும் என்று நினைக்கிறீர்கள்? ஆயிரம்—பத்தாயிரம்—லட்சம்—இன்னும் அதிகமா? வெறும் யோசனையையே இவ்வாறு நீங்கள் மதித்தீர்களானால், யோசனையை அமலில் கொண்டு வருவதற்காக நான் தயாரித்து வைத்திருக்கும் முறைகளுக்கு எவ்வளவு ரூபாய் மதிப்புப் போடுவீர்களோ தெரியவில்லை. அவைகளைக் கொஞ்சம் கேளுங்கள்.

## காதல் கல்யாணக் கம்பெனி

நமது தேசத்தின் புராதன தர்மங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும், ஆசார அனுஷ்டானங்களுக்கும் மாறுபடாத முறைகளில் **காதல் கல்யாண**த்தைப் புனருத்தாரணம் செய்யும் உத்தம நோக்கத்துடன் இந்தக் கம்பெனி ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. சன்மார்க்கத்துக்குகந்த காதல் இன்பத்தை அநுபவிக்க வேண்டுமென்னும் அவாவுடையஸ்திரீபுருஷர்கள் அனைவரும் முறைப்படி இந்தக் கம்பெனிக்கு விண்ணப்பம் செய்துகொண்டு தங்கள் தங்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

## விண்ணப்ப நமூனு

**காதலுடையீர்!**

நான் காதல் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும் என்று தீவிரமாக ஆவல் கொண்டிருப்பதால், தயவு செய்து

எனக்குத் தகுந்த ஒரு காதல் மனைவியைத் தேர்ந்தெடுத்துத் தரவேணுமாய் வேண்டிக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் தாங்கள் எடுத்துக்கொள்ளும் சிரமத்திற்கு என்னுடைய காதல் கட்டணமாக ரூபாய் ஐந்து அனுப்பியிருக்கிறேன். எக் காரணத்தை முன்னிட்டும் தாங்கள் இத் தொகையை வாபீஸ் செய்யவேண்டியதில்லை யென்று நான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிற பெண்ணிடம் நான் கொள்ளப் போகிற காதலின் பெயரால் உறுதி கூறுகிறேன். கீழே என்னைப் பற்றிய விவரங்களும், நான் காதல் புரியக்கூடிய பெண்ணைப்பற்றிய விவரங்களும் தந்திருக்கிறேன் :

**விவரங்கள்**

(1) விண்ணப்பதாரரின் பெயர் :

(2) விலாசம் :

(3) வயது :

(4) மதம் ஹிந்துவானால் :

1. ஜாதி
2. உட்சாதி
3. கோத்திரம்

(5) தேகத்தின் உயரம், மார்பின் குறுக்களவு, எடை :

(6) நிறம் (கறுப்பா யிருந்தால் 'சியாமளம்' என்று குறிக்கவும்) :

(7) அங்கஹீனம் உண்டானால், விவரம் :

1. பார்வை
2. கேள்வி
3. கால், கை
4. பற்கள்
5. இதர குறைகள்

(8) வியாதி (டாக்டர் சர்டிபிகேட்டுடன்) :

(9) மூளைக்கோளாறு உண்டானால், விவரம் :

(10) கல்வி (கலாசாலைப் பட்டதாரியா யிருந்தால் சொல்லாமல் விடுவதே நல்லது) :

(11) தொழில், மாத வருமானம் :

(12) சொத்து இருந்தால், விவரம் : 1. சுயார்ஜிதம்
2. பிதுரார்ஜிதம்

(13) பிரம்மசாரியா, பெண்டிழந்தவரா, முன்னமே மனைவி அல்லது மனைவிகள் உள்ளவரா ? :

(14) முன்னமே மனைவியுள்ளவரானால், எத்தனை பேர்? அவர்களுடைய வயது :

(15) முந்தைய தாரங்களினால் குழந்தைகள் இருந்தால்:
1. ஆண்கள்
2. பெண்கள்

(16) ஜாதகம் உண்டா? (இருந்தால் தனியாய்ச் சேர்க்கவும்):

(17) போட்டோ உண்டா? (இருந்தால் தனியாய்ச் சேர்க்கவும், போட்டோ ஒரு மாதிரியா யிருந்தால், மாலியைக் கொண்டு சித்திரம் எழுதுவித்துச் சேர்க்கலாம்) :

(18) எதிர்பார்க்கும் வரதட்சிணை அல்லது கொடுக்கக் கூடிய கன்யாசுல்கம் :

(19) எதிர்பார்க்கப்படும் சீர் வரிசைகள் :

(20) தேவையான மணப்பெண்ணின் விவரம் :
(அதாவது கன்னியா, வயது வந்தவளா, பால்ய விதவையா, முது விதவையா, படிப்பு வேண்டுமா, சொத்து இருக்க வேண்டுமா, வயது, நிறம் முதலிய விவரங்கள். ஆனால், இந்த விவரங்களை யெல்லாம் கம்பெனியாரின் உசிதத்துக்கு விட்டுவிடுவதே நலம்.)

**மேற்கண்ட நிபந்தனைகளையும் விவரங்களையும் அநுசரித்துத் தாங்கள் தேர்ந்தெடுக்கும் பெண்மீதில் கண்டதும் காதல் கொள்வதாக என் ஹிருதயபூர்வமாயும் தெய்வசாட்சியாயும் பிரமாணம் செய்கிறேன்.**

**(கையொப்பம்) ....................**

நேயர்களே! மேற்கண்ட மணப்பெண் விண்ணப்பம் மிகவும் ஹாஸ்யரஸத்துடன் நன்றாய் அமைந்திருப்பதாகக் கருதுகிறீர்களல்லவா? இந்த இடத்தில் என்னுடைய மனச்சாட்சி கொஞ்சம் எனக்குத் தொந்தரவு கொடுக்கிறது. "உனக்கு நியாயமாகப் பாத்தியதையில்லாத பாராட்டுதலை

நீ அடையப் பார்க்கிறுயே? இது நியாயமாகுமா? காந்தி பிறந்த நாட்டில் நீயும் பிறந்திருக்கிறுயே?'' என்று அது இடித்துக் காட்டுகிறது. எனவே, உண்மையை ஒப்புக் கொண்டுவிடுகிறேன். மேற்படி விண்ணப்ப நமூனு நான் தயாரித்ததன்று. சென்னையில் ஸ்தாபிதமாகி யிருக்கும் ஓர் அசல் கல்யாணக் கம்பெனியார் தயாரித்தது அது. நான் சும்மா அங்கோர் எழுத்தும் இங்கொரு வார்த்தையும் மாற்றியிருக்கிறேன்; அவ்வளவுதான். ஆகையால், உங்கள் பாராட்டுதலுக்கு நான் அருகனல்லன் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

# பெரிய மனிதர்!

"மாயவரம் போய்விட்டு வந்தீர்களே, அங்கே என்ன விசேஷம்?" என்று எங்கள் அடுத்த வீட்டு 'ஸார்', அவருக்கு அடுத்த வீட்டுக்காரரைப் பார்த்துக் கேட்டார்.

"மாயவரம் ஆஸ்பத்திரியில் ஒரு புது ஸர்ஜன் வந்திருக்கிருராம். அவரைப்பற்றி எல்லாரும் பிரசித்தியாகப் பேசிக்கொள்கிருர்கள்" என்ருர் மாயவரம் போய் வந்தவர்.

"அப்படி என்ன அவர் செய்துவிட்டார், பிரசித்தியாய்ப் பேசிக்கொள்வதற்கு?" என்று 'ஸார்' கேட்டார்.

"ரொம்ப நன்ருய் வைத்தியம் செய்கிருராம். ஆபரேஷனில் வெகு கெட்டிக்காரராம். பெரிய பெரிய பிளவை, சிரங்கு எல்லாவற்றையும் கொஞ்சங்கூடத் தயக்கமின்றிப் பனங்காய் பிளப்பதுபோல் அறுத்து எறிந்து குணப்படுத்தி விடுகிருராம். எல்லாரிடமும் விசுவாசமாய்ப் பேசுகிருராம். இதையெல்லாம்விட விசேஷமாய் இன்னொரு சமாசாரம் சொல்கிருர்கள்: ஒரு தீண்டாச் சாதிப் பெண்பிள்ளை காலில் பிளவையுடன் ஆஸ்பத்திரிக்கு வந்தாளாம். தூரத்திலேயே நின்றுகொண்டிருந்தாளாம். அதற்கு முன்னெல்லாம் தீண்டாச் சாதியினர் வந்தால் தூரத்திலேயே நிற்க வைத்து, கம்பவுண்டரைக்கொண்டே ஏதாவது மருந்து ஊற்றி அனுப்பிவிடுவது வழக்கமாம். ஆனல் இந்த டாக்டர் அவளை ஆஸ்பத்திரிக்குள் அழைத்துவரச் செய்து, தாமே சிரங்கை அறுத்துக் கட்டுக்கட்டி அனுப்பினராம். அதற்கப்புறந்தான் மற்ற வியாதியஸ்தர்களைக் கவனித்தாராம். உத்தியோகஸ்தர்கள் முதற்கொண்டு பெரிய மனிதர்கள் எல்லாம் அது வரை காத்துக்கொண்டிருந்தார்களாம்!......"

"அப்படியா? இந்தப் புது டாக்டர் பெயர் என்னவோ?"

''டாக்டர் ரங்காச்சாரி என்று பெயர்''

*　　*　　*　　*

மேற்படி சம்பாஷணை நிகழ்ந்த வருஷம், மாதம், தேதி ஒன்றும் எனக்கு ஞாபகமில்லை. வெகு, வெகு, வெகு நாளைக்கு முன்பு நடந்தது என்றுமட்டுந்தான் சொல்லக் கூடும். ஏதோ கனவில் கேட்டதுபோல் ஞாபகம் இருக்கிறது. ஆயினும் 'பசுமரத்தாணிபோல் பதிதல்' என்று சொல்வார்களே, அப்படிச் சிறுபிள்ளைப் பிராயத்தில் என் மனத்தில் பதிந்த விஷயங்களினுல் இதுவும் ஒன்று. இந்தச் சம்பாஷணை சம்பந்தமான இன்ஞெரு முக்கியமான அம்சமும் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஊர் சாஸ்திரிகள் உள்பட அந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண் டிருந்தவர்களில் ஒருவராவது, "பிராமணன் தீண்டா வகுப்பு ஸ்திரீயின் காலைத் தொட்டு வைத்தியம் செய்யலாமா?'' என்ற பிரச்னையைக் கிளப்பவில்லை.

அநேக வருஷங்களுக்குப் பிறகு 1923இல், நான் சென்னைக்கு வந்தபோது, டாக்டர் ரங்காச்சாரியார் எனக்கு முன்பே இங்கு ஸ்தாபிதமாகி யமனுடைய வேலை சரிவர நடைபெருமல் முட்டுக்கட்டை போட்டு வருவதாகத் தெரிய வந்தது. 'டாக்டர் ரங்காச்சாரியின் பெயரைச் சொன்னுல் போன உயிர்கூடத் திரும்பி வந்துவிடும்!' என்ற நம்பிக்கை பரவியிருக்கக் கண்டேன்.

அப்போது ஒரு சமயம் ஏ. ஜி. ஜி. என்னும் பிரசித்த ஆங்கில ஆசிரியர் எழுதிய 'சமூகத்தின் தூண்கள்' என்னும் புத்தகத்தை நானும் சில நண்பர்களும் சேர்ந்து படித்தோம். அப்புத்தகத்தில் இங்கிலாந்தின் சமூக வாழ்க்கையில் பிரசித்தி பெற்றிருந்த பிரமுகர்களைப்பற்றி, அவர்களுடைய குணு குண விசேஷங்களை ஆராய்ந்து அந்த ஆசிரியர் எழுதியிருந்தார். அதைப்போல் நமது தமிழ் நாட்டின் பிரமுகர்களைப்பற்றியும் ஏன் ஒரு புத்தகம் எழுதக்கூடாது என்ற கேள்வி பிறந்தது. எழுதுவதாயிருந்தால், அந்தப் புத்தகத்தில் யார் யாரைச் சேர்க்கலாமென்று விவாதம் செய்தோம். அநேகமாக ஒவ்வொரு பெயரைப்பற்றியும் சேர்க்கலாமா கூடாதா என்று அபிப்பிராயபேதம் காணப்பட்டது. ஆனுல்

ஒரு பெயரைமட்டும் கட்டாயம் சேர்க்கவேண்டுமென்று ஒருமுகமாக எல்லாரும் ஒப்புக்கொண்டோம். அது டாக்டர் ரங்காச்சாரியின் பெயர்தான்.

டாக்டர் ரங்காச்சாரியாரின் பரோபகார குணத்தைப் பற்றிப் பிரசித்தமாய்ப் பேசிக்கொள்கிறீர்கள் அல்லவா? இத்தகைய புகழ் அவருக்கு ஏற்படுவதற்கு ஏதோ நானும் சிறிதளவு காரணமாயிருந்திருக்கிறேன் என்பதை நினைக்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. வேறு விதமாய்ச் சொன்னால், பணம் எதுவும் கொடுக்காமல் அவருடைய வைத்திய உதவியைத் தேடிப் பெற்றிருக்கிறேன். எல்லாரும் பணங்கொடுத்து வைத்தியம் செய்து கொள்கிறவர்களாகவே அவரிடம் போயிருந்தால் 'பரோபகாரி' என்ற புகழ் அவருக்கு எப்படி உண்டாகியிருக்கும்?

உயிரில் ஆசை பணக்காரனுக்கு அதிகம், ஏழைக்குக் குறைவு என்பது இல்லை. எல்லாருக்கும் ஒரே விதந்தான். பெண்சாதி பிள்ளைகளிடம் பிரியமும் பணக்காரன் - ஏழை என்பதற்காக வித்தியாசப்படுவது கிடையாது. ஆகவே உயிரைக் காப்பதற்கு வைத்தியரைத் தேடுவது என்று ஏற்படும்போது, மிகவும் கெட்டிக்காரர் என்று பெயர்பெற்ற வைத்தியரையே எல்லாரும் தேடிப் போவது இயற்கையல்லவா? இவ்வாறு அவரைத் தேடிச்சென்ற பல்லாயிரக் கணக்கான ஜனங்களில் நானும் ஒருவன். மூன்று தடவை அவருடைய உதவியை நாடியிருக்கிறேன். இந்த மூன்று தடவைகளிலும் அவருடைய குணத்தின் மூன்று விசேஷ அம்சங்களைக் காணுமாறு நேர்ந்தது.

ஒரு தடவை, உயிர் நீங்குந் தறுவாயிலிருந்த ஒரு குழந்தையைப் பார்ப்பதற்காக டாக்டர் ரங்காச்சாரியை இரவு பத்தரை மணிக்கு டெலிபோனில் கூப்பிட்டோம். அவரை அப்போது அழைப்பது அவருக்கு வீண் சிரமம் கொடுப்பதாகுமென்று மனத்திற்குள் தெரிந்தே யிருந்தது. ஆனாலும் பாசம் கேட்கவில்லை. டெலிபோனில் விஷயத்தைச் சொன்னதும், "மோட்டார் டிரைவர் வீட்டுக்குப் போய் விட்டான். வருவதற்கில்லை. வருத்தப்படுகிறேன்" என்று பதில் வந்தது. டெலிபோனில் பேசியவர் கெட்டிக்காரர்.

"கார் நாங்கள் அனுப்புகிறோம்" என்றார். "சரி" என்று கூறி மேலே ஒரு வார்த்தையும் பேசாமல் டெலிபோனை வைத்து விட்டார் டாக்டர்.

மோட்டார் சென்று வீட்டு வாசலில் நின்ற அடுத்த விநாடியில் 'டக் டக்' என்று நடந்துவந்து வண்டியில் ஏறிக் கொண்டதாக டிரைவர் கூறினான். அவனிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையாம்.

குழந்தையைப் பார்த்த பிறகு, "சிகிச்சை ஒன்றும் வேண்டாம். குழந்தைக்குத் தாகம் அதிகமாயிருக்கிறது. ஜலம் நிறையக் கொடுங்கள்" என்று கூறி, தாமே ஒரு பாலாடையில் ஜலம் வாங்கிப் போட்டினார். "பார்த்தீர்களா? எவ்வளவு ஆவலாய்க் குடிக்கிறது?" என்று சொல்லிவிட்டு வெளிக் கிளம்பினார். மோட்டாரில் ஏறும்போது, "உங்களைச் சிரமப்படுத்தினோம். மன்னிக்கவேண்டும்" என்று கூறிக் கொண்டே பத்து ரூபாய் நோட்டு ஒன்று நீட்டப் பெற்றது. கையை வீசியபடி, "வேண்டாம், வேண்டாம்; வந்தனம்!" என்று சொல்லிவிட்டு வண்டியில் ஏறிக் கொண்டார்.

அந்த நேரத்தில் அவரை அழைத்துத் தொந்தரவு கொடுத்ததுபற்றி எங்கள் எல்லாருக்கும் கொஞ்சம் மனச்சாட்சியின் தொந்தரவு ஏற்பட்டது. ஆயினும் ஓர் உயிரைக் காப்பாற்றுவதற்கு எவ்வளவு முயற்சி செய்யலாமோ, அவ்வளவும் செய்தாகிவிட்டது என்ற ஆறுதல் அடைந்தோம்.

*    *    *    *

அடிக்கடி காதுவலி உபத்திரவம் ஏற்பட்டு, வரவரக் காது மந்தமாகி வந்த ஒரு சிறுவனை அவரிடம் அழைத்துப் போயிருந்தேன். சோதனை செய்து பார்த்துவிட்டு, "தொண்டையில் ஆபரேஷன் செய்யவேண்டும்" என்றார். "செய்கிறது" என்று நானும் செட்டாகப் பதில் சொன்னேன். "நானே செய்யவேண்டுமா?" "அதற்காகத்தான் தங்களிடம் வந்தது." டைரியை எடுத்துப் பார்த்துவிட்டு, "சரி; அடுத்த புதன்கிழமை காலையில் ஆறரை மணிக்கு இங்கே தயாராயிருக்கவேண்டும். ஆறரை மணி என்றால் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியும்; ஆறடித்து முப்பது நிமிஷம்!"

புன்னகையுடன், "ஆமாம்; ஆறரை மணி என்ருல் ஏழு மணி அல்ல. சரியாக ஆறரை மணி. ஐந்து நிமிஷம் தாமதித்து வந்தாலும் அன்றைய தினம் என்னுடைய அலுவல்கள் எல்லாம் கெட்டுப் போய்விடும்" என்ருர்.

குறிப்பிட்ட தினத்தில் நான் ஆவரை மணிக்கே தயாராய்ப் போயிருந்தும், டாக்டர் ஏழரை மணிக்கு வந்து எட்டரை மணிக்குத்தான் ஆபரேஷன் செய்தார் என்பதை இந்த இடத்தில் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பெரிய மனிதர்கள் சமாசாரமே இப்படித்தான் போலும்! போகட்டும்; அவருடைய நேரம் என்னுடைய நேரத்தைவிட அதிகப் பெறுமானமுள்ளது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

* * * *

'பெரிய மனிதர்கள்' என்றதும், நான் முக்கியமாய்ச் சொல்லவேண்டுமென்றிருந்த சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது.

ஆபரேஷன் செய்யப்பெற்ற சிறுவனை இரண்டு நாள் கழித்துத் தாம் பார்க்கவேண்டுமென்று டாக்டர் தெரிவித்திருந்தபடியால் அவனை அழைத்துக்கொண்டு போய் எல்லாரும் காத்திருக்கவேண்டிய இடத்தில் உட்கார்ந்திருந்தேன். குட்டி டாக்டர் ஒருவர் பரிசோதனை அறைக்கு வெளியில் நின்று, ஒவ்வொருவராய் உள்ளே அனுப்பி வந்தார்.

நாங்கள் உட்கார்ந்திருந்தது ஒரு ஹால். அதன் ஒரு பக்கத்தில் அறைகள் இருந்தன. முதல் அறையில் டாக்டர் இருந்தார். இரண்டாவது அறை, ஸ்திரீகளின் பரிசோதனைக்காக ஏற்பட்டது. அதாவது, முதல் அறை வழியே செல்லும் ஸ்திரீகளுக்குத் தனிப்பட்ட பரிசோதனை செய்யவேண்டியிருந்ததால், உள் வழியாகவே இரண்டாவது அறைக்கு அழைத்துவந்து சோதனை செய்துவிட்டு, அப்படியே வெளியில் அனுப்பிவிடுவது வழக்கம்.

வெளியில் காவல்புரிந்துகொண்டிருந்த குட்டி டாக்டர் சற்று அசந்திருந்த சமயத்தில் ஓர் அசந்தர்பம் நிகழ்ந்துவிட்டது. காத்துக்கொண்டிருந்தவர்களில் பட்டிக்காட்டுக்

கிழவன்போல் தோன்றிய ஒருவன் இரண்டாவது அறையின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். யாரும் அவனைக் கவனித்துத் தடுப்பதற்கு முன்னால் அது நிகழ்ந்து விட்டது. நான் திடுக்கிட்டுப் போனேன். ஏனென்றால், அதற்கு ஒரு நிமிஷத்துக்கு முன்புதான் டாக்டரைப் பார்க்க ஒரு ஸ்திரீ உள்ளே சென்றிருந்தாள்.

அறையில் நுழைந்த கிழவன் அடுத்த கணத்தில் 'திறு திறு'வென்று விழித்துக்கொண்டு வெளியே வந்தான். அதே சமயத்தில் உள்ளிருந்து ஓர் உரத்த, கோபக்குரல் வந்தது. குட்டி டாக்டர் கதிகலங்கிப் போய்விட்டார்.

அந்த உரத்த கோபக்குரல் என்ன சொல்லிற்று என்பது தான் முக்கியமானது: "சங்கர்! இந்தப் பெரிய மனுஷர் இங்கு ஏன் நுழைந்தார்?" என்று அது கர்ஜித்தது.

அவர் உபயோகித்த 'Old gentleman' என்னும் வார்த்தைகள் என் காதில் ஸ்பஷ்டமாக விழுந்தன.

அத்தகைய சந்தர்ப்பத்தில் அவ்வளவு மரியாதையாகப் பேசக்கூடியவர் தமிழ்நாட்டில் இன்னொருவர் உண்டா என்பது எனக்குச் சந்தேகந்தான். 'இந்த மடையன்', 'இந்தப் பட்டிக்காட்டு மிருகம்', 'இந்தக் கிழப் பிசாசு', 'இந்தப் பீடை' என்பது போன்ற சொற்றொடர்களை ஒருவருக்குப் பிரயோகிக்கத் தெரியுமென்றால், அதற்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் வேறு கிடைக்காதென்பது நிச்சயம். ஆயினும், அந்த வேளையில் கோபம் பொங்கிய குரலில். 'பெரிய மனுஷர்' என்ற சொற்றொடரை அவர் உபயோகப் படுத்தினார்! அப்போது எனக்கேற்பட்ட வியப்பும், அவரிடம் உண்டான மரியாதையும் சொல்லத் தரமல்ல. 'இவரல்லவா உண்மையில் பெரிய மனிதர்!' என்று எண்ணி எண்ணி ஆச்சரியப்பட்டேன்.

*    *    *    *

பிரசித்திபெற்ற என்னுடைய ஜலதோஷத்தைப் பார்க்கவில்லை என்ற அபகீர்த்தி டாக்டர் ரங்காச்சாரியாருக்கு ஏற்படக்கூடாதென்று ஒரு சமயம் தீர்மானித்து அவரிடம் சென்றேன். அதற்குமுன் பார்த்த பெரிய டாக்டர் ஒருவர் தொண்டை, காது, மூக்கு ஆகிய மூன்றிலும் ஆபரேஷன்

செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தபடியால், டாக்டர் ரங்காச்சாரி குறைந்தது ஆறு ஆபரேஷனாவது அவசியமெனச் சொல்லுவார் என எதிர்பார்த்தேன். ஆனால் நடந்தது முற்றும் மாறானது.

'ஆ!' என்று வாயைத் திறக்கச் சொன்னார். உள்ளே பார்த்துவிட்டு, "தொண்டையில் ஒன்றுமில்லை" என்றார். காதைப் பிடித்துப் பார்த்தார். "காதில் ஒன்றுமில்லை" என்றார். மூக்கை வெகு நிதானமாகப் பார்த்துவிட்டுக் கடைசியில், "மூக்கிலும் ஒன்றுமில்லை" என்றார். எனக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது. "ஆபரேஷன் ஒன்றும் தேவையில்லை; நீர் என்ன ஜலத்தில் தினம் குளிக்கிறது?" என்று கேட்டார். "வெந்நீரில்" என்றேன். "குளிர்ந்த ஜலத்தில் குளித்துப் பழக்கம் செய்துகொள்ள வேண்டும். இரவில் கனமான போர்வைகளைப் போர்த்திக் கொள்ளக்கூடாது. நாளடைவில் சரியாய்ப் போகலாம். சிகிச்சை ஒன்றும் வேண்டாம்" என்று முடித்தார்.

அவர் பேச்சில் அம்போது எனக்குச் சிறிதும் நம்பிக்கை ஏற்படவில்லை. 'இந்த மனிதர் இலவச சிகிச்சை செய்ய வேண்டுமே என்பதற்காக இப்படி ஒன்றுமில்லை யென்று சொல்கிறாரோ?' என்றுகூடத் தோன்றிற்று.

கடைசியாக, எத்தனையோ டாக்டர்களின் ஆலோசனைகளுக்குள்ளே அவருடைய யோசனைதான் கிட்டத்தட்ட சரியானதென்று ஏற்பட்டது. அநுபவ வைத்தியர் ஒருவரின் ஆலோசனையின் பேரில், ஸ்நான சிகிச்சையை முறையாகக் கையாண்டு ஜலதோஷத்தை வெற்றிகொண்ட கதையை முன்னொரு முறை விரிவாகச் சொல்லியிருக்கிறேனல்லவா? அதனுடைய உத்தர காண்டத்தை இன்னொரு தடவை நேயர்கள் எதிர்பார்க்கலாம்.

* * * *

"டாக்டர் ரங்காச்சாரியாரின் வாழ்க்கையிலிருந்தும் மரணத்திலிருந்தும் நமக்கு விளங்கும் நீதிகள் என்ன?" என்று பண்டிதமணி பட்டாபிராமன் என்னைக் கேட்டார். அடுத்தாற்போல் அவர் எழுதப்போகும் ஏழாம் பாடப்

புத்தகத்தில் 'டாக்டர் ரங்காச்சாரியார்' என்று ஒரு பாடம் சேர்ப்பதாக அவருக்கு உத்தேசமாம்.

நான் சொன்னதாவது: "நீதிகள் நான்காகும். அவை யாவன: (1) பூமியில் பிறந்தவர்களுக்கு நிச்சயமாய் இறத்தல் உண்டு. (2) மனிதனுடைய புத்தி சாமர்த்தியங்கள், முயற்சிகள், முன்ஜாக்கிரதைகள் எல்லாம் ஓரளவுதான் பயன்படும். மனிதனுடைய கைக்குள் அடங்காத சந்தர்ப்பங்கள் பல, மனித வாழ்க்கையைப் பாதிக்கின்றன. அவைகளுக்குத் தலை வணங்குவதைத் தவிர வேறு வழியில்லை. (3) ஆகையால், மனிதன் உயிரோடு இருக்கிற வரையில் 'நல்லவன், பரோபகாரி' என்று பெயர் வாங்கிவிட்டுப் போகவேண்டியது. (4) ஒருவன் நல்ல காரியத்தை எவ்வளவு இரகசியமாகச் செய்தாலும் அது கட்டாயம் வெளிப்பட்டே தீரும். காங்கிரஸ் இயக்கங்கள் முதற்கொண்டு, பீஹார் பூகம்ப நிவாரணம் வரையில் டாக்டர் ரங்காச்சாரியார் பெருந் தொகைகள் நன்கொடையாக அளித்ததெல்லாம் 'அநாமதேய'மாகவே செய்த போதிலும், எப்படியோ எல்லாருக்கும் அவருடைய கொடையின் மகிமை தெரிந்துதானே வந்தது?"

# பேச்சு பலவிதம்

சில நாளைக்குமுன், பிராட்வே முனையில், சற்று நேரம் நான் நின்றுகொண்டிருக்க நேரிட்டது. அங்கே என்னை ஒருவரும் உட்காரச் சொல்லவில்லை யாதலாலும், வண்ணாரப் பேட்டை டிராம் வண்டியை நான் பிடிக்க வேண்டியிருந்த தாலும், அவ்வாறு நின்றுகொண்டிருந்தேன். அங்கே என் னருகில் இன்னும் இரண்டு பேரும் நின்றுகொண்டிருந்தார் கள். அவர்களுக்குள் பின்வரும் சம்பாஷணை நடந்தது :

**முதல் மனிதர் :** ஏன் ஸார்? நீங்கள் எழும்பூர் டிராமுக் காகக் காத்துக்கொண் டிருக்கிறீர்களோ?

**இரண்டாம் மனிதர் :** ஆமாம்; அரைமணியாய்க் காத் துக்கொண் டிருக்கிறேன். அம்பட்டன் வாராவதிக்கு நூறு டிராம் போய்விட்டது. லஸ்ஸுக்கு ஒரு வண்டிகூட வர வில்லை. பஸ்ஸிலே போகவேண்டியதுதான் போலிருக்கிறது.

**மு. மனிதர் :** என்ன சொல்கிறீர்கள்? பஸ்காரன் அம்பட்டனைத் தேடிக்கொண்டா போயிருக்கிறான்? அவ னுக்கு என்ன இன்றைக்கு க்ஷவரக் கல்யாணம் பண்ணிக்க உத்தேசமோ?

**இ. மனிதர் :** என் பெண்ணுக்குத்தான் கல்யாணம்; டாக்டர் குருநாதனின் பிள்ளைக்கு நிச்சயம் செய்திருக்கிறது. அப்பா! என்ன சத்தம் இங்கே? தலைவலி வந்துவிடும் போல் இருக்கிறது.

**மு. மனிதர் :** டாக்டருக்கே தலைவலி வந்துவிட்டால் ஆபத்துத்தான். ஏதாவது மருந்து வாங்கிப் போட்டுப் பார்க்கிறதுதானே?

**இ. மனிதர் :** பார்க்காமலென்ன? அதுதான் அவ்வளவு

ஸ்பஷ்டமாய் எழுதியிருக்கிறதே, 'காங்கிரஸுக்கே வோட்டுக் கொடுங்கள்; சாதிக் கட்சியை ஒழியுங்கள்' என்று.

மு. மனிதர்: நான் ஒன்றும் சாதிக்கட்சி பேசவில்லை. மாசிலாமணிதான், "நாங்கள் எப்படியும் உங்களைவிட ஒசத்தி; தொண்டைமண்டலம் முதலியார் அல்லவா?" என்ருன். எனக்குக் கோபம் வந்துவிட்டது.

இ. மனிதர்: தொண்டையிலே புண்ணிருந்தால், கோபித்துகொண்டு என்ன செய்வது? ஆஸ்பத்திரிக்குப் போய் மருந்து தடவிக்கொள்ள வேண்டும்.

மு. மனிதர்: ஆஸ்பத்திரியில்தான் என் சம்சாரத்தை விட்டிருக்கிறேன். அவளைப் பார்க்கத்தான் அவசரமாய்ப் போகவேண்டும். இந்த 'நர்ஸு'கள் இருக்கிருர்களே, அவர்கள் சரியாய்க் கவனிப்பதேயில்லை.

இ. மனிதர்: நர்ஸுக்கென்ன கவலை? அவளா பிரசவிக்கப் போகிருள்? இதை உத்தேசிக்கும்போதுதான் கர்ப்பத்தடை அவசியம் என்று தோன்றுகிறது. ராமேசம் கூட அதுதான் சொல்கிருர்.

மு. மனிதர்: ஆமாம், ராமேசுவரம் போனுல் குழந்தை பிறக்குமென்பதுதான் பிரசித்தியாயிற்றே. போன வருஷத்தில் எங்கள் அடுத்த வீட்டுச் சின்னசாமியும் அவர் சம்சாரமும் போய்வந்தார்கள். இந்த வருஷம் குழந்தை பிறந்தது.

இ. மனிதர்: பின்னே, வருஷம் பிறக்காமல் என்ன செய்யும்? பிறந்துதானே ஆகவேண்டும்? யுவ வருஷத்துக்கப்புறம், தாது வருஷமாம். தாது வருஷத்துப் பஞ்சம் எப்படியிருக்குமோ தெரியவில்லை. எல்லாரும் சாப்பாட்டுக்குத் திண்டாட வேண்டியதுதான்.

மு. மனிதர்: சாப்பாடு இறங்காவிட்டால், பலகாரமாய்ச் சாப்பிட்டு விடுங்களேன்; அதில் என்ன கஷ்டம்?

இ. மனிதர்: கஷ்டப்படாவிட்டால், குடும்பத்தை எப்படிக் காப்பாற்ற முடியும்? பூர்வ ஜன்மத்தில் பட்ட கடனைத் தீர்த்துத்தானே ஆகவேண்டும்?

மு. மனிதர்: ஐயோ! பாவம்! கடனில் ஒன்றுக்குப்பாதி கூடக் கொடுக்க முடியவில்லையா? செட்டி நாட்டில் யாரோ

ஒருவர் கடன் மிஞ்சிப் போய்ப் பட்டினி கிடந்தாராம். வியாபாரத்தில் நஷ்டம் போலிக்கிறது. அதைவிட இன்ஸால் வென்ட் கொடுத்திருக்கலாம்.

இ. மனிதர்: ஓஹோ! உங்களுக்கு இன்ஸால்வென்ட் வியாபாரமோ? அதில் நல்ல வருமானம் போல் இருக்கிறது. என்னுடைய சிநேகிதர் ஒருவர் ஹோட்டல் நடத்துகிறுர். அத்துடன் அவர் இன்ஸால்வென்ட் தொழிலும் நடத்தி வருகிறுர்.

இதற்குள் வண்ணுரப்பேட்டை டிராம் வந்துவிட்டபடி யால், மேற்படி ரஸமான சம்பாஷணையை நடுவில் விட்டு விட்டு நான் போகவேண்டியதாயிற்று.

* * * *

மேற்படி சம்பாஷணை முறை எனக்கு மிகவும் பிடித் திருந்தது. அந்த முறையில், ஒருவர் சொல்வதை இன் ஞெருவர் கவனிக்கவேண்டிய அவசியமேயில்லை. ஒருவர் சொல்வதில் ஏதாவது ஒரு வார்த்தையை எடுத்துக்கொண்டு இன்ஞெருவர் தமக்கிஷ்டமானதைப் பேசவேண்டியது. இந்த முறையில் மூளைக்குக் கொஞ்சம்கூடச் சிரமம் கிடையா தல்லவா?

ஆனல், வேறு சிலர் இருக்கிறுர்கள். அவர்கள் பேசும் போது தாங்கள் சொல்வதை எதிராளி கிரஹியம் செய்து கொண்டாலல்லாமல் மேலே போகமாட்டார்கள். இப்படிப் பட்டவர்களுடன் சம்பாஷிப்பது மிகவும் சிரமமான காரியம்.

தமிழ் நாட்டில் பிரசித்திபெற்ற வடமொழி—தென் மொழிப் புலவர் ஒருவர் இருக்கிறுர். அவர் பேசும் போதெல்லாம் இடையிடையே, "விளங்கிற்ரு?", "புரிந்ததா?", "நான் சொல்றது அர்த்தமாச்சா?" என்று கேட்டுக்கொண்டுதான் மேலே போவார். இதுமட்டு மல்ல. "இந்த விஷயம் வேறே யாராவது சொல்லி யிருக் கிறுர்களா?", "இப்படிச் சொல்லி யிருக்கிறுர்களா?" என்றும் கேட்டுக்கொள்வார்.

ஒரு சமயம் இப் புலவர்பெருமானுடன் சில நண்பர்கள் பேசிக்கொண் டிருந்தார்கள். ஏதோ பேசிக்கொண் டிருந்தவர் சட்டென்று நிறுத்தி, என் அருகிலிருந்த

நண்பரைப் பார்த்து, "அய்யாசாமிப் பிள்ளை! உங்களுக்கு அர்த்தமாச்சா?" என்று வினவினர். நான் அந்த நண்பருடைய காதோடு, "உங்களுடைய கிராஹ்யத் திறமையில் மட்டும் அவர்களுக்கு அவ்வளவு சந்தேகம் ஏன் வந்தது?" என்று கேட்டேன். "அப்படி இல்லை; இங்குள்ளவர்களில் அவர் சொன்னதைத் தெரிந்துகொள்ளக்கூடிய சக்தி மற்றவர்களுக்குக் கிடையவே கிடையாது என்பது அவருக்கு நிச்சயம்; என் விஷயத்தில்தான் கொஞ்சம் நம்பிக்கை" என்றார் அய்யாசாமிப் பிள்ளை.

மேற்கூறிய புலவரைப்போல், அடிக்கடிச் சந்தேகப் பட்டு, "தெரிந்ததா?", "என்ன நான் சொல்கிறது?" என்று கேட்டுக்கொண்டு பேசுகிறவர்களிடம் எனக்கு ரொம்பப் பயம். அவர்களைக் கண்டால் ஓட்டம் பிடிக்கக் கூடத் தயங்கமாட்டேன்.

* * * *

இன்னும் சிலருக்கு, அவர்கள் பேசுவதை நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்பதில் அவ்வளவு சிரத்தையில்லை. அவர்கள் இடைவிடாமல் பேசுவதற்குமட்டும் நாம் இடங் கொடுத்துவிட்டு மௌனமாய்க் கேட்டுக்கொண் டிருந்தால் போதும்; மூச்சுக்கூட விடாமல் பேசிக்கொண்டே இருப்பார்கள். மூச்சு விடுகிற நேரத்தில் இன்னும் இரண்டு வார்த்தை பேசலாமே என்று இவர்களுக்கு ஆசை.

இப்படிப்பட்டவர்கள் இதிகாசப் புருஷர்களாயிருக்கத் தகுந்தவர்கள் என்று நான் சொல்வேன். இதிகாசப் புருஷர்கள் எல்லாரும் ஏறக்குறைய அப்படித்தான் பேசுவார்கள். சாதாரண ஜனங்கள் வாக்கியம் வாக்கியமாகப் பேசினால், அவர்கள் அத்தியாயம் அத்தியாயமாய்ப் பேசுவார்கள்!

ஓர் உதாரணம் கவனிக்கலாம்: நீர் உமது தர்ம பத்தினியுடனும், சகோதரனுடனும் தூரதேசம் போவதாக வைத்துக்கொள்வோம். அங்கே ஓர் ஊரில் தங்கியிருக்கும் போது, உமக்கு வெளியே ஏதோ காரியமாகப் போக வேண்டியிருக்கிறது. சகோதரனிடம், "அப்பா! பத்திரமாய் இங்கேயே மன்னியின் கால் விரல்களைக் கவனமாய்ப் பார்த்துக்கொண்டிரு; இந்த ஊர் பொல்லாத ஊர்" என்று

சொல்லிவிட்டுப் போகிறீர். உமது காரியம் முடிந்து திரும்பி வருகையில் எதிரில் உமது சகோதரன் தனியே வருவதைக் காண்கிறீர். உடனே என்ன சொல்வீர்? "அட பாவி! ஏனடா மன்னியின் கால்விரல்களிலிருந்து கண்ணை எடுத்து விட்டு இங்கு வந்தாய்? என்னடா சமாசாரம்?'' என்று கேட்பீரல்லவா? அவன் சொல்லும் சமாசாரத்தைக் கேட்டுக்கொண்டு, பிறகுதான் அவனைத் திட்டவோ அல்லது உமது மனைவியை நினைத்துப் புலம்பவோ தொடங்குவீர்.

ஆனால், இதிகாச நாயகனாகிய ஸ்ரீராமபிரான் உம்மைப் போல் நடந்துகொள்ளவில்லை. வால்மீகி முனிவர் நடந்தது நடந்தபடியே கண்ணால் பார்த்து* ஆரண்ய காலத்தில் எழுதியிருப்பதைக் கேளுங்கள் :

### ஐம்பத்தெட்டாஞ் சருக்கம்

லக்ஷ்மணர் முகம்வாடிச் சந்தோஷமின்றிச் சீதை இல்லாமல் வந்ததைப் பார்த்துத் தருமாத்மாவான இராமர், "ஓ லக்ஷ்மணா! தண்டகாரண்யத்துக்கு என்னைத் தொடர்ந்து வந்த அந்தச் சீதை எங்கே? அவளை விட்டுவிட்டு நீ எங்கு வந்தாய்? இராச்சியத்தை இழந்து துன்பமடைந்து தண்டகாரணியத்தில் அலைந்து திரியும் எனக்கு என் துக்கத்தின் கட்டுணையாயினாள் எங்கே? வீரா, அவள் இல்லாமல் நான் ஒரு நொடிப் பொழுதும் உயிர்வாழேன். என் உயிர்த் துணையாகிய அமர மாதருக்கொப்பான அந்தச் சீதை எங்கே? உருக்கின தங்கத்துக்கொப்பான நிறமுடைய சீதையின்றி நான் இவ்வுலகத்தின் அரசல்ல, தேவலோகத்தின் அரசும் வேண்டேன்.

"ஓ லக்ஷ்மணா! சீதை பிழைத்திருக்கிறாளா? இல்லையா? நீ சொல். உன்னுடைய அஜாக்கிரதையினால் அவளை யாராவது அரக்கர்கள் புசித்துவிட்டார்களா? மிகச் சிறியவளும் மெல்லியவளும் ஒரு நாளும் துன்பமென்பதை அறியாதவளுமாகிய சீதை யான் பிரிந்த காரணத்தால் அழுகின்றாள் என்பது நிச்சயம். அந்தத் துஷ்டனான அரக்கன் பெருங் குரலால் 'லக்ஷ்மணா!' என்று கூப்பிட்டபொழுது நீயும் பயந்தனையோ?

---

*பண்டித நடேச சாஸ்திரியாரின் மொழிபெயர்ப்பு.

"ஆ! தெவ்வரை அடக்குந் திறலுடையானே, நான் விசனத்தில் மூழ்கிவிட்டேன்; இப்பொழுது என்ன பண்ணப் போகிறேன். ஐயோ! இவ்வித அவஸ்தைகள் நான் பட வேண்டுமென்பது என் விதிபோலும்!"* என்று இவ்வண்ணம் உத்தமியான சீதையைப்பற்றிப் புலம்பிக்கொண்டே அதிவேகமாக லக்ஷ்மணருடன் ஜனஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார்...

இவ்வாறு நடுவிலே ஒரு வார்த்தை சொல்லக்கூட லக்ஷ்மணனுக்கு இடங்கொடாமல் ஒரே மூச்சாய் ஓர் அத்தியாயம் முடியும்வரை ராமர் பேசிக்கொண்டு வந்து ஜனஸ்தானத்தை அடைந்து ஆசிரமத்துக்குள்ளும் புகுந்து விடுகிறார். அதற்குப் பிறகுதான் லக்ஷ்மணனுக்குத் தான் சீதையை விட்டு வந்த காரணத்தைச் சொல்ல இடம் கிடைக்கிறது.

ஸ்ரீராமபிரானை இவ் விஷயத்தில் பின்பற்றி அத்தியாயக் கணக்கில் பேசுவோர் சிலர் இந்தக் காலத்திலும் இருக்கிறார்கள். சேலத்திலே ஒரு வக்கீல் இருந்தாராம். அவர் பேசும் போதெல்லாம் எதிராளியின் இரண்டு கைகளையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு விடுவாராம்! இப்படி அவர் செய்வதில் இரண்டு நோக்கங்கள் உண்டு என்று எனக்கு அவரைப்பற்றித் தெரிவித்தவர் கூறினார். முதலாவது, தான் சொல்வதைச் சொல்லி முடிக்கும் வரையில் எதிராளி தப்பித்துக்கொண்டு போகமுடியாமல் செய்வது; இரண்டாவது, நடுவிலே அவர் குறுக்கிடாமல் தடுப்பதற்கு வாயைப் பொத்துவதற்குப் பதிலாகக் கைகளை அமுக்கிக் கொள்வது!

இப்படி இடைவிடாமல் பேசுகிறவர்களிலும் இரண்டு ரகம் உண்டு. சின்ன வாக்கியக்காரர், பெரிய வாக்கியக் காரர் என்பதாக அவர்களைப் பிரிக்கலாம். பெரிய வாக்கியக்

---

* முதலில் ஸ்ரீராமரின் பேச்சு முழுவதையும் கொடுத்திருந்தேன். பிறகு யோசித்ததில், அப்படிச் செய்தால் வாசகர்களும் இராமரைப் போலவே விசனத்தில் மூழ்கி மேலே படிக்கமாட்டார்களென்று பயந்து, நடுவில் சில பகுதிகளை எடுத்துவிட்டேன்.

காரர்கள் இருக்கிறார்களே. கமா, ஸெமிகோலன்கூட இல்லாமல் ஒரே வாக்கியத்தில் தாங்கள் சொல்ல விரும்புவதையெல்லாம் சொல்லிவிடுவார்கள். இவர்களுடைய சம்பாஷணை முறை, தமிழ் நாட்டிலுள்ள ஒரு சிறந்த தேசீய உபந்யாசகரின் பிரசங்க முறையை ஒத்தது. இப்போதைக்கு அவர் பெயர் ஸ்ரீமான் பிராணாயாம முதலியார் என்றிருக்கட்டும். அவருடைய பிரசங்க முறை வருமாறு :

"அதாவது, ஸ்வாமி விவேகாநந்தர், அமெரிக்காவிலே சிகாகோ நகரிலே கூடிய சர்வமத சமரச மகாசபையிலே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெற்றெனச் சொன்னது என்னவென்றால், 'எவனுடைய இருதயமானது ஏழைகளுக்காகப் படீரென்று வெடித்துச் சுக்கு நூறாகிறதோ, அவனே மகாத்மா; மற்றவர்கள் எல்லாம் துராத்மா' என்று கூறியிருப்பதுபோல, நாம் நம்முடைய ஏழை ஜனங்களுக்கு வயிற்றுக்கு உணவும், உடுத்துவதற்குத் துணியும் கொடுக்க வேண்டியது அவசியமா யிருக்கிறபடியினால், 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்று நமது ஔவை மூதாட்டியார் கூறியிருப்பதைப் பசுமரத்தாணிபோல் மனத்தில் பதிய வைத்துக்கொண்டு, ஒரே பிடிவாதமாய் நின்று உழைத்து......"

இப்படியே அரை மணி, ஒரு மணி நேரம் வரையில்கூட முதலில் ஆரம்பித்த வாக்கியத்தை முடிக்காமலே போய்க் கொண் டிருப்பார்.

ஒரு சமயத்தில் தமிழ் நாட்டின் தலைவரும் வேறு சிலரும் சாம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். ஆகாயவிமானத்துக்கு ஆபத்து வந்தால், இறங்குவதற்கு உபயோகமாகும் 'பாரஷூட்' கருவியைப்பற்றிப் பேச்சு வந்தது. அப்போது தலைவர் கூறினார் :

"பாரஷூட்டாவது, மண்ணாங்கட்டியாவது? அதெல்லாம் எதற்கு? ஸ்ரீமான் பிராணாயாம முதலியாரின் ஒரு வாக்கியத்தைப் பிடித்துக்கொண்டால் கிர்ரென்று கீழே இறங்கிவிடலாமே?"

இத்தகைய நீள வாக்கியக்காரர்களுடன் பேசுவதில் சிரமம் எதுவும் கிடையாது. அவர்கள் பேசத் தொடங்கி

விட்டால், நாம்பாட்டுக்கு நம்முடைய காரியங்களைப்பற்றி யோசித்துக்கொண் டிருக்கலாம்.

*  *  *  *

சின்ன வாக்கியக்காரர்கள் ஒவ்வொரு வாக்கியத்தை முடிக்கும்போதும் பேசி முடித்துவிட்டதாகவே நமக்குத் தோன்றும். ஆனால், பின்னோடு அடுத்த வாக்கியம் தொடர்ந்து வந்துவிடும். இவர்கள் சம்பாஷணை முறையை ஆந்திரத் தலைவர் ஸ்ரீமான் சாம்பமூர்த்தியின் பிரசங்க முறையுடன் ஒப்பிடலாம். ஸ்ரீமான் சாம்பமூர்த்திகாரு, "ஜஸ்டிஸ் கட்சியை ஐம்பது அடி ஆழத்தில் புதைக்க வேண்டுமென்று நான்தான் முதலில் 'சொன்னேன்; புதைத்தாய் விட்டது!'' என்று கர்ஜிப்பார். சரி, நாம் வீட்டுக்குப் போகலாம் என்று தீர்மானித்துக்கொண்டு எழுந்திருக்க யத்தனிப்போம்; உடனே அவர், "புதைத் தால்மட்டும் போதாது? மேலே சமாதி எழுப்பவேண்டும்!" என்று இடிமுழக்கம் செய்வார், பிறகு தொடர்ந்து, "ஆ! தேசத்திற்காக உயிரைவிட்ட எத்தனை யுவர்களுக்கும், யுவதிகளுக்கும் நாம் சமாதி எழுப்பியிருக்கிறோம்? அவர்களுடைய தியாகங்களெல்லாம் வீண் போகலாமா? நண்பர்களே! இந்த ஜஸ்டிஸ் கட்சியை வெட்டி ஐந்நூறு அடி ஆழத்தில் புதைத்தே தீரவேண்டும்!'' என்பார்.

இதென்னடா வம்பு? புதைத்த ஜஸ்டிஸ் கட்சியை மறுபடியும் எடுத்து வெட்டவேண்டுமா என்று நாம் ஆச்சரியப்பட்டுக்கொண் டிருக்கையில், மேலும் தொடங்குவார்:

"ஆ! இந்த ஜஸ்டிஸ் கட்சி என்னவெல்லாம் அக்கிரமங்கள் செய்திருக்கிறது? இவ்வளவும் அந்த அதிகார வர்க்கத்தின் ஒத்தாசையுடனேயல்லவா? அப்படிப்பட்ட அதிகார வர்க்க ஆட்சியை ஒழித்து நாம் சுதந்திரம் அடைந்தே தீர வேண்டும்.''

சரி, முடிந்துவிட்டதுபோல் இருக்கிறது என்று நாம் நினைத்துக்கொண் டிருக்கையில் மறுபடியும், "சுதந்திரம் என்றால் வாழைப்பழம் அல்ல; கஷ்டப்பட்டுத்தான் பெறவேண்டும்......'' என்று ஆரம்பிப்பார். இவ்வாறு

அவர் சொல்லும் ஒவ்வொரு வாக்கியத்திலிருந்தும் ஒரு வார்த்தையை எடுத்துக்கொண்டு அடுத்த வாக்கியத்தைச் சிருஷ்டித்துக்கொண்டே போவார்.

சின்ன வாக்கியமாகப் பேசுவதில் மற்ருெரு விதமுண்டு. அதை ஸ்ரீமான் டி. பிரகாசம் பந்துலுகாருவின் பிரசங்க முறையுடன் ஒப்பிடலாம்.

ஸ்ரீமான் டி. பிரகாசம் பிரசங்கம் புரிகையில், "நண்பர்களே! நாம் இப்போது எங்கே இருக்கிருேம், தெரியுமா?" என்று கேட்டுவிட்டு ஒரு நிமிஷம் நாம் யோசிப்பதற்குச் சாவகாசம் கொடுப்பார். திடீரென்று அவரே பதில் சொல்லிவிடுவார்; "ஆமாம்; கடற்கரையிலேதான் இருக்கிருேம். ஆனுல், இதே இடத்தில் மூன்று வருஷங்களுக்கு முன்னுல் என்ன நடந்தது தெரியுமா?" என்று மறுபடி ஒரு கேள்வி போடுவார். ஒரு நிமிஷம் மௌனம்; பிறகு, "ஆமாம்; இதே மாதிரி ஒரு கூட்டம் நடந்துகொண்டிருந்தது. ஆனுல், இதைக் காட்டிலும் நூறு மடங்கு அதிக ஜனங்கள் கூடியிருந்தார்கள். அப்போது அதோ உள்ள பீச் ரோட்டில் யார் நின்றுகொண்டிருந்தார்கள் தெரியுமா?" என்று கேட்டு, "ஆமாம்; ஸோல்ஜர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்" என்று தெரிவிப்பார். இவ்வாறு கேள்வி கேட்டுப் பதில் சொல்லி, ஸோல்ஜர்களுடைய குதிரைகள் கூட்டத்திலிருந்த ஜனங்களை மிதித்த கட்டத்துக்கு வருவதற்குமுன், குதிரைக் குளம்புகளின்கீழ் அகப்பட்ட உணர்ச்சி சபையோருக்கெல்லாம் ஏற்பட்டுவிடும். ஆனுல், சம்பாஷணைக்கு இந்த முறை அவ்வளவு கெடுதலாயிராது.

உண்மையில், மேற்படி முறையைச் சம்பாஷணையில் பின்பற்றும் என் நண்பர் ஒருவர் இருக்கிருர். அவர் பேசுகையில் கேள்வி போடுவது போலவும் என்னுடைய பதிலை எதிர்பார்ப்பது போலவும் இருக்கும். ஆனுல், நான் பதில் சொல்ல ஆரம்பித்து ஒரு வார்த்தை கூறிஞலே அவருக்குத் திருப்தியாகிவிடும். உடனே தாம் பேச ஆரம்பித்துவிடுவார். எங்களுக்குள் ஒருநாள் நடந்த சம்பாஷணையின் ஒரு சிறு பகுதியைக் கேளுங்கள்:

**நண்பர்:** நேற்றைக்கு நீங்கள் செம்பை கச்சேரிக்கு

வரவில்லையே? என்னமோ, போங்கள், அபூர்வமாயிருந்தது. யதுகுல காம்போஜி பாடும்போது நீங்கள் பக்கத்தில் இல்லையே என்று நினைக்கையில், எனக்கு உயிரே போய்விடும் போல் இருந்தது. சௌடய்யாவும் பிடில் அமோகமாய் வாசித்தார். இருக்கட்டும்; பிடிலைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

நான்: நல்ல வாத்தியந்தான்......

நண்பர்: பார்த்தீர்களா? அப்படித்தான் சொல்வீர்களென்று தெரியும். சந்தேகம் என்ன? பிடில் பேஷான வாத்தியம். இருந்தாலும், வீணைக்குச் சமானம் ஆகாது. அதிலும் தனம்மாள் வாசித்துக் கேட்கவேணும். நேற்று ரேடியோவில் வீணை தனம் கச்சேரி நடந்ததே, கேட்டீர்களோ?

நான்: கேட்டேன்.

நண்பர்: பின்னே, நீங்கள் கேட்காமலா இருப்பீர்கள்? எனக்குத்தான் சௌகரியப்படாமல் போயிற்று. சாயங்காலமானால், எவ்வளவு வேலை போங்கள். என்ன வேலை இருந்தாலும், பீச்சுக்குமட்டும் போகாமற்போனால் மனம் கேட்கிறதில்லை. இப்போதெல்லாம் வெயில் எப்படி ஆகிவிட்டது பார்த்தீர்களா?

நான்: ரொம்ப அதிகம்தான்.

நண்பர்: அதிகமா? தாங்கவே முடியலை, ஸார்ன்னு! கோடைக்கு எங்கே போகலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன். போன வருஷம் ஊட்டிக்குப் போயிருந்தேன். இந்த வருஷம் பங்களூர் போகலாமாவென்று உத்தேசம். நீங்கள் பங்களூர் போயிருக்கிறீர்களா?

நான்: போயிருக்கிறேன்.

நண்பர்: என்னதான் சொல்லுங்கள். பங்களூரின் சௌக்கியம் வேறு எங்கேயும் வராது. அந்த லால்பாக் தோட்டம் ஒன்றைச் சொல்லுங்களேன்.

மேற்கண்டவாறு மணிக்கணக்கில் என் நண்பர் பேசிக்கொண்டே போவார். அவருடன் பேசுவதில் எனக்குச் சிரமமே தோன்றுவதில்லை.

மேற்கண்ட ரகங்களில் எதிலும் சேராத என் சிநேகிதர்

ஒருவர் இருக்கிறார். அவருடன் பேசுவதென்றால் கொஞ்சம் பிரயாசையான விஷயமே. அவர் ஏதாவது நாலு வார்த்தை சொன்னால், பதிலுக்கு நானும் மூன்று வார்த்தையாவது சொல்லவேண்டுமென்று எதிர்பார்ப்பார். பேசுவதற்கு விஷயம் என்னவோ அவரிடம் ஏராளமாய் உண்டு. ஆனால், வெகு சிக்கனக்காரர். அளந்து அளந்து சரிக்குச் சரியாகத் தான் போடுவார். ஏதோ நாம் நடுவில் நடுவில் ஒரு வார்த்தை எடுத்துக் கொடுத்தால், அவர் மேலே பேசிக் கொண்டு போனார் என்பது கிடையாது.

அல்லாமலும், நான் ஏதாவது சொன்னால், 'கண்ணில் விளக்கெண்ணெய் போட்டுக்கொண்டு பார்ப்பது' என்பார்களே, அதுபோல் நுட்பமாகக் கவனிப்பார். ஏதோ வாயில் வந்ததைச் சொல்லிவிட்டுத் தப்புவிக்கவும் முடியாது.

அது மாதிரியே அவர் சொல்வதையும் நான் நன்றாய்க் கவனித்தாக வேண்டும். "விளங்கிற்றா?", "புரிந்ததா?" என்று அவர் கேட்காவிட்டாலும், முகத்தோற்றத்திலிருந்தே கவனிக்கிறேனா, இல்லையா என்று கண்டுபிடித்து விடுவார். கவனிக்கவில்லையென்று தெரிந்தால், பேச்சை நிறுத்தி விடுவார்.

அப்பா! இப்படிப்பட்டவருடன் பேசிச் சமாளிப்பது மிகவும் சிரமமான காரியந்தான். ஆனாலும் பேதை மனம் அவருடன் சம்பாஷிப்பதில் ஏன் இவ்வளவு பிரியம் கொண்டிருக்கிறதென்பதுதான் விளங்குவதில்லை.

உண்மையில், இவருடனும் இவரைப்போன்ற இன்னும் சில சிநேகிதர்களுடனும் பேசும்போதுதான் சம்பாஷணையிலும் ரஸம் இருக்கக்கூடுமென்று எனக்கு நிச்சயம் ஏற்படுகிறது.

முற்றும்

# எம் நூல் நிலைய வெளியீடுகள்

| | ரூ. | பை. |
|---|---|---|
| **அமரர் 'கல்கி' :** | | |
| பொன்னியின் செல்வன் — 5 பாகங்கள் | 40 | 00 |
| சிவகாமியின் சபதம் | 20 | 00 |
| மாந்தருக்குள் ஒரு தெய்வம் — 2 பாகங்கள் | 11 | 50 |
| தியாகபூமி | 7 | 25 |
| பார்த்திபன் கனவு | 7 | 25 |
| மகாத்மாவும் மகாகவியும் | 2 | 00 |
| கள்வனின் காதலி (நாடகம்) | 2 | 50 |
| மயிலைக் காளை | 2 | 30 |
| ஓ! மாம்பழமே! | 2 | 25 |
| ஸ்வப்பன லோகம் | 1 | 20 |
| **தேவன்' :** | | |
| மிஸ்டர் வேதாந்தம் — 2 பாகங்கள் | 14 | 95 |
| ஜஸ்டிஸ் ஜகந்நாதன் — 2 பாகங்கள் | 11 | 80 |
| துப்பறியும் சாம்பு — 5 பாகங்கள் | 11 | 25 |
| கல்யாணி | 5 | 50 |
| ஸ்ரீமான் சுதர்சனம் | 5 | 50 |
| கோமதியின் காதலன் | 5 | 25 |
| ராஜத்தின் மனோரதம் | 3 | 80 |
| மைதிலி | 3 | 65 |
| **முகுல்பாய் காலார்த்தி (த. நா. குமாரஸ்வாமி) :** | | |
| காந்திஜியின் உரை அமுதம் | 0 | 50 |
| **மநுபஹின் காந்தி (த. நா. குமாரஸ்வாமி) :** | | |
| பாபூஜியின் நினைவுக்கோவை | 0 | 75 |
| **எஸ். ஏ. பி. :** | | |
| காதலெனும் தீவினிலே | 8 | 75 |
| ஓவியம் | 8 | 75 |
| சொல்லாதே ! | 7 | 75 |
| இன்றே இங்கே இப்பொழுதே | 5 | 00 |
| கெட்டது யாராலே ? | 1 | 50 |
| **அரு. ராமனுதன் :** | | |
| வீரபாண்டியன் மனைவி — 3 பாகங்கள் | 40 | 00 |
| **ரவீந்திரநாத் டாகூர் (த. நா. குமாரஸ்வாமி) :** | | |
| கோரா | 10 | 00 |
| புயல் | 7 | 00 |
| சிதைந்த கூடு | 1 | 50 |
| கொஞ்ச நேரம் | 2 | 00 |
| முகுடம் (நாடகம்) | 0 | 75 |
| ராஜரிஷி | 3 | 00 |
| பூந்தோட்டம் | 2 | 00 |
| ஜப்பான் பயணம் | 1 | 50 |

| | | ரூ. | பை. |
|---|---|---|---|
| **நா. பார்த்தசாரதி :** | | | |
| *பாண்டிமாதேவி* | | 12 | 00 |
| *இராஜகோபுரம்* | | 4 | 00 |
| *தகடூர் யாத்திரை* | | 4 | 00 |
| *நானூறில் நல்ல காட்சிகள்* | | 0 | 95 |
| **த. நா. குமாரஸ்வாமி :** | | | |
| *மயூராட்சி* | | 4 | 50 |
| *கபாலகுண்டலா* | | 2 | 75 |
| *கிழக்கோடும் நதி* | | 2 | 50 |
| *மால்கோஷ்* | | 4 | 25 |
| *கற்பவல்லி* | | 2 | 30 |
| *விடுதலை* | | 2 | 00 |
| **காண்டேகர் (கா. ஸ்ரீ. ஸ்ரீ.):** | | | |
| *யயாதி* | *1-பாகம்* | 8 | 25 |
| *சிந்தனைச் செல்வம்* | | 2 | 25 |
| *வாயு கன்னிகை* | | 2 | 00 |
| *கவியும் கனியும்* | | 1 | 50 |
| **'கிருஷ்ணா' :** | | | |
| *மதுக்கிண்ணம்* | | 6 | 00 |
| *சந்தன மரம்* | | 5 | 25 |
| *காலவெள்ளம்* | | 4 | 00 |
| *அந்திமாலை* | | 3 | 25 |
| *ராஜி* | | 3 | 00 |
| *சிங்காரவல்லி* | | 2 | 00 |
| **ராஜம் கிருஷ்ணன் :** | | | |
| *மாயச்சுழல்* | | 5 | 50 |
| *பானுவின் காதலன்* | | 2 | 50 |
| *நித்திய மல்லிகை* | | 1 | 50 |
| **ஜ. ரா. சுந்தரேசன் :** | | | |
| *பொன்னின் புன்னகை* | | 2 | 25 |
| *இதயத்தில் எழுதாதே* | | 1 | 50 |
| **உஷா ரகுநாதன் :** | | | |
| *விமானம் ஓட்டினேன்* | | 2 | 00 |
| **தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் :** | | | |
| *கலைஞன் கண்ட கடவுள்* | | 2 | 00 |
| *பிள்ளையார்பட்டிப் பிள்ளையார்* | | 2 | 25 |
| **வே. க. ரங்காச்சாரி :** | | | |
| *சேர வேந்தர் நால்வர்* | | 0 | 95 |
| **நீலம் :** | | | |
| *சங்கீத கலாமணிகள்* | | 2 | 00 |

**Bala Printers, Madras-34**

CONNEMARA PUBLIC LIBRARY
9 - AUG 1970
P VI + 96
9.8.70